# வெற்றிமணி
London
Vettimaniy


மணி 64 Free Circulation மாசி.Feb. 2014





Rathy
JEWELLERS LTD
London's Largest Selections
லண்டனில் முன்னணி நகைமாளிகை!
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063
209 upper Tooting Road
Tooting SW17 7TG
0208682 2233


# அரசியல் உரிமைகளை கொச்சைப்படுத்தும் கலாச்சார செயற்பாடுகள்?





உறைந்த ஆற்றை கடக்கும் கார்!









**Feb.1 முதல் (Bank) வங்கிகள் SEPA புதிய நடைமுறைகள்**

## கரைந்துபோன கையெழுத்தும் காதல் கடிதங்களும்





Vettimani London
To advertise here call
Sanje: 078 24 61 83 83
Vettimaniy@hotmail.com

To advertise here call
Sanje: 078 24 61 83 83
Vettimaniy@hotmail.com
Vettimani London

To advertise here call
Sanje: 078 24 61 83 83
Vettimaniy@hotmail.com
Vettimani London
Vettimani London

Vettimaniy@hotmail.com

To advertise here call
Sanje: 078 24 61 83 83
Vettimani London

ஐங்கரன்
கலைஞர்
JAYA TV
தொலைபேசி இல. 0044 208 543 43 22
உலகத் தமிழர்களின்
உள்ளங்களிலும்,
இல்லங்களிலும்
Ayngaran
Unit 19,Riverside Business park
lyon Road ,Wimbledon
London, SW19 2RL, U.K
AYNGARAN

To advertise here call
**Sanje: 078 24 61 83 83**
Vettimaniy London

Vettimaniy@hotmail.com






# கரைந்துபோன கையெழுத்தும் காதல் கடிதங்களும்

கையெழுத்தில் மட்டுமே மனதை கச்சிதமாக வாசிக்கமுடியும்.
காலத்தில் கரைந்தவை வெறும் சடப்பொருட்கள் மட்டுமல்ல காதலும்தான். அந்தக் காதலைச் சுமந்து வந்த கடிதங்களும் இன்றும் பசுமையாகவே இருக்கின்றன.
கை எழுத்தில் இருக்கும் அந்த உணர்வு எந்த கணனியிலும் வந்துவிடாது. கையெழுத்தில் மட்டுமே மனதை கச்சிதமாக வாசிக்கமுடியும்.
எஸ் எம் எஸ் எல்லாம் போய் இப்போ Whatsap இல் வந்து நிற்கிறது. நாக்கை நீட்டுவதும் முகத்தைக் கோணலாப்பிடிப்பதும் இப்படிப் படம் எடுத்து எழுத்து வேலையைக் குறைத்து படமும் கதையும் அதாவது சித்திரத் தொடர்கதையாகத் தொடர்கிறது மனித வாழ்வு.

இதற்கிடையில் தமிழ் மொழி அழிகிறது, என்ற கூச்சல் வேறு. அட தமிழ் மொழி அல்ல! மொழியே இல்லாமல் மனிதன் உலாவரும் காலத்தை நோக்கியல்லவா உலகம் சென்று கொண்டிருக்கிறது.
இந்த உலகில் தவறு என்று ஒன்று இனி இல்லை. எல்லமே சரி. உங்களுக்கு எது விருப்பமோ அவையாவும் நீங்கள் அரங்கேற்றலாம்.
எனவே இனி புத்திசொல்ல ஒருவர் வாய்திறந்தால் அவ்வளவுதான். சொல்பவர்களை நினைக்க பரிதாபமாக உள்ளது.
மேலும் அன்று ஒரு கடிதம் வந்தால் பத்துதடவை வாசிப்போம், அது அம்மாவினது கடிதமாக இருக்கலாம், அல்லது காதலன் காதலியினது கடிதமாகவும் இருக்கலாம். ஒவ்வொருதடவை வாசிக்கும் போதும் அதன் பொருள் விரிவாகிக்கொண்டே இருக்கும். காரணம் மனதில் உதித்தவை விரல்கள் ஊடாக நகர்த்தப்பட்டு, அந்த உணர்வின் பதிவுகள் அழியாத கோலங்களாக காகிதத்தில் பதிந்திருக்கும்.
ஒரு தாய் தன் மகனின் மனநிலையை கடிதத்தில் இருந்து நாடிபிடித்து அறிவாள். காதலியோ கடிதத்தில் இருக்கும் வரிகளுக்குள் காதலைத் தேடி உண்மை எது பொய் எது என்று அக்குவேறு ஆணிவேறாகப்பிரித்து அறிவாள்.

இன்று உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் எப்போது கடசியாக உங்கள் கையால் எழுதினீங்கள்.
அப்படி எழுதியிருந்தால் இவையாகத்தான் இருக்கம்.

ஒன்று வங்கியில் கையெழுத்து இடும்போது
இரண்டு!
ஒரு கி.லோ.சீனி.12 முட்டை பட்டர். மரக்கறி. மீன் உப்பு பால் இப்படி, ஒரு அட்டவணை கடைக்குப்;போகும் முன்னம் எழுதியிருப்பீர்கள்.
மூன்றாவது.
நான் வர நேரமாகும் நீங்கள் சாப்பிட்டுவிட்டு எனக்கு கோப்பையில் போட்டு வைத்தவிட்டுப் போகவும்.

இன்று எனக்கு வர நேரமாகும் ஒரு முட்டை பொரித்து சாப்பிடவும். அல்லது நான் வந்ததும் கடைக்குப் போகவேண்டும் சரியாக 2 மணிக்கு வெளிக்கிட்டு நிற்கவும்.



**மாதவி**

இப்படியாக சில துண்டுப்பிரசுரங்கள். இவையும் எத்தனை நாளுக்கோ தெரியாது.
காரணம் இப்போ கைத்தொலை பேசியும் இலவசம்.
எனவே வரும் முன் சொல்லிவிட்டு வருவார்கள். இல்லை மெசேச்சிலும் விடுவார்கள்.

எனவே கையெழுத்து கரைந்துபோனது போனது தான்.
பழைய கடிதங்கள் சில இன்னும் உங்கள் இலாச்சி களுக்குள் இருக்கும். அதன் திகதிகளைப் பார்த்தால் நிச்சயம் 1990 களுக்கு முன்னதாகவே இருக்கும். அந்தக்கடிதங்களை அன்று எழுதிய பலர் இன்று லண்டன் கனடா அவுஸ்திரேலியா,சுவிஸ்.யேர்மனி என்று பரவலாக தலையணையோடு கைத்தொலைபேசியும் உறங்க அவர்களும் உறங்கிக்கொண்டு இருப்பர். சிலர் முகப்புத்தகத்தில் முகம் காட்டுவர். சிலர் இந்த உலகைவிட்டுச் சென்றிருப்பர்.
அவை எறிப்படவேண்டிய கடிதங்கள் அல்ல கட்டி வையுங்கள். அவை அன்பு பெட்டகங்கள். காதலியோ! மனைவியோ அம்மாவோ அப்பாவோ சகோதரர்களே உங்களை ஆளும் மந்திர சக்திபெற்ற கடிதங்களாக இருக்கும் . மனம் சோர்வாக இருக்கும் போது வாசியுங்கள். உங்கள் உடல் வலிமைபெறும். எழுதுவது விரலுக்கு நல்ல பயிற்சி என்று இன்று விஞ்ஞானம் சொல்கிறது. எனவே முடிந்த வரை ஒரு நாளைக்கு ஒருபக்கம் என்றாலும் எழுதுங்கள். அதனை எறியாது உங்கள் மனைவிக்கோ அல்லது கணவனுக்கோ வாசிக்கக் கொடுங்கள். வாழ்வின் அர்த்தத்தை சில மணித்துளிகள் என்றாலும் சுவாசிக்கட்டும்.



To advertise here call
**Sanje: 078 24 61 83 83**
Vettimaniy London

Vettimaniy@hotmail.com





To advertise here call
Sanje: 078 24 61 83 83
Vettimaniy London

Vettimaniy@hotmail.com




அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!

## வெற்றிமணி

**தமிழ் எங்கள் உயிருக்கு மேல்**
—கவிஞர்.வி.க

ஓசை **209**



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
“ஓவியக்கலைவேள்”
**கலாநிதி**
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



**Brinker Höhe.13**
**58507 Lüdenscheid**
**Germany**
**Tel: 02351/45 88 62**
**0157 88 77 31 56**

e-mail: vettimaniy@hotmail.com



Vettimaniy Ltd

**“வெற்றிமணிமொழி”**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
**சிவகுமாரன் சஞ்ஜீவன்.**B .Eng (Hons)





# அரசியல் உரிமைகளை கொச்சைப்படுத்தும் கலாச்சார செயற்பாடுகள்?

## வடக்கு கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சமீபகாலமாக இடம்பெறும் சமூகச் சீரழிவுகள் மனவேதனை தருகின்றன.

**-அ.நிக்ஸன்-**



**நவீன தகவல் தொழில்நுட்பங்களின் வருகைதான் இளைஞர்களின் தவறான செயற்பாடுகளுக்கு காரணம் என்று கூறமுடியாது. மேற்குலக நாடுகளில் அது அறிவு வளர்ச்சிக்கு பன்படுகின்றது.**

**தூனீசியாவில் தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தியே புரட்சி நடந்தது.**

வடக்கு கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப் பாணத்தில் சமீபகாலமாக இடம்பெறும் சமூகச் சீரழிவுகள் மனவேதனை தருகின்றன. வாள்வெட்டு கத்திக்குத்து, அடிதடி, என்று மிகவும் கீழத்தரமான செயற்பாடுகளில் இளைஞர்கள் ஈடுபடுகின்றனர். கல்விக்கும் ஒழுக் கத்துக்கும் பெயர் பெற்ற யாழ்ப்பாணத்தில் இப்படியும் சீரழிவா என்று பலர் ஏங்குகின்றனர். வெட்கப்படுகின்றனர். ஒரு காலத்தில் வேறு மாவட்டங்களுக்கு முன் உதாரண மாக இருந்த யாழ்ப்பாணத்தில் தற்போது ஏன் இந்த நிலை என்று நினைத்து எவரும் கவலைப்படாமல் இருக்க முடியாது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்த ஒழுக்கம் தற்போது இல்லை. தேசிய உணர்வுக்கு முக்கியமளித்து தமிழ் இனத்தின் அரசியல் உரிமைகள் அபிலாஷைகள் வென் றெடுக்கப்பட வேண்டும் என அப்போது சகலரும் எண்ணியிருந்த காலம் அது.

### நவீன மாற்றங்கள்

எரிபொருட்கள் இன்றி, போதிய உணவுகள் இன்றி அதாவது உரிய வசிதி வாய்ப்புகள் எதுவுமே இல்லாத ஒரு காலகட்டத்தில் யுத்த நெருக்குவாரங்களுக்கு மத்தியில் சிறந்த கல்விப்பேறுகளை காணமுடிந்தது. ஒழுக்கமுள்ள இளைஞர்களை காணமுடிந்தது, பண்பான சமூகத்தைக் காணமுடிந்தது. ஒழுக்கமுள்ள பெற்றோரை காணமுடிந்தது. ஆனால் இன்று அவற்றுக்கு என்ன நடந்தது? நவீன மாற்றங்கள் நவீன தொழில் நுட்ப சாதணங்கள் கொழும்பிலும் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் தமிழ் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் அவற்றின் நிறம்கூட தெரியாத நிலையில், இருப்பதை வைத்து கல்வி கற்று சித்தியடைந்தார்கள், முன்னேறினார்கள் உலகமுமே வியந்தது.

இத்தனை நெருக்குவாரங்கள், ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில் தமிழச் சமூகத்தின் கல்வி முன்னேற்றம், பொறுமை மற்றயவர்களுக்கு உதரணமாக விளங்கியது. ஆனால் இன்று தினமும் பத்திரிகைச் செய்திகளை வாசிக்கும்போது இதுதான தமிழர்களின் பண்பாடா என்று எண்ண தோன்றுகின்றது. யுத்தம் முடிவடைந்து விட்டது என்றும் யுத்தத்தின் பின்னரான காலகட்டம் என்றும் பலர் கூறுகின்றனர்.

சர்வதேச நாடுகள் கூட யுத்தத்தின் பின்னரான காலகட்டம் என கூறுகின்றன. அதாவது இந்த காலப்பகுதியில் நிரந்தர அரசியல் தீர்வு, யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் அபிவிருத்தி போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என அவர்கள் எண்ணுகின்றனர்.




### வேறு வகையிலான யுத்தம்!

ஆனால் அவ்வாறு இல்லை. ஆயுதத்தை கையாண்ட யுத்தம் அழிக்கப்பட்டு விட்டது அதன் பின்னரான காலகட்டம் என்பது வேறு வகையான யுத்தம் ஒன்றை திணித்துள்ளது. பண்பாடு, நாகரீகம், ஒழுக்கம் ஆகிய மரபுசார்ந்த சமூக கட்டுப்பாடுகள் கட்டவிழ்க்கப்பட்டு அவை தலைவிரித்தாடுகின்றன.

இது குறிப்பிட சில பகுதியினரால் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு திணிப்பு.
நவீன தகவல் தொழில்நுட்ப சாதணங்களின் வருகைதான் இதற்கு காரணம் என்று கூறமுடியாது.

நவீன தொழில்நுட்ப சாதணங்கள் என்பது உலகம் முழுவதிலும் உண்டு. யுத்தத்தின் பின்னரான காலகட்டத்தில் இவை யாழ்ப் பாணத்திற்கும் கொண்டுவரப்பட்டது என்பது உண்மை. ஆனால் வாள்வெட்டும், கத்திக்குத்தும், அடிதடியும் பெண்களை இழுத்துக் கொண்டு ஓடுகின்ற ஒழுக்கமற்ற செயற் பாடுகளும் நவீனதொழில் நுட்ப சாதணங்களின் வருகையினால், இணையத்தள பாவனைகளினால் வந்தது என்று கூற முடியாது. மாறிவரும் உலகில் அவ்வாறான தொழில்நுட்ப சாதணங்கள் தமிழச் சமூகத்துக்கு தேவை. குறிப்பாக இளைஞர்களுக்கு அது அவசியம்.

ஆனால் கட்டுப்பாடுகளை பேண வேண்டியது எமது பொறுப்பு. ஒரு சமூகத்தின் நில உரிமைகளை, அழிப்பதற்கும் .......தூனீசியாவில் நடந்தது என்ன?

**தொடர்ச்சி 25ம் பக்கம்**






# கொட்டாவி.... இது தாங்க உலகிலேயே மோசமான தொற்று வியாதியாம்!!!

## இது கருவறையிலேயே ஆரம்பித்திடுமாம்!

ஆ... என முதலை கணக்கில் யாராவது நம் முன்னால் வந்து கொட்டாவி விட்டால் நாம் என்ன சொல்லுவோம், 'சோம்பேறி, உன் சோம்பலை என்னிடமும் ஒட்ட வைக்காதே ... ஆனா, அதற்கு முன்னாடி நாம அத விட ஒரு கொட்டாவி பெருசா விட்டுடுவோம் அல்லவா! அப்படி என்றால் கொட்டாவி ஒரு தொற்றுவியாதியா!

உண்மையிலயே, உலகின் மிக வேகமான தொற்று வினை “கொட்டாவி“ தானாம். ஆனால், அது சோம்பேறிகளின் சிக்னல் என்பதெல்லாம் பொய். அதற்கான அறிவியல் காரணாங்களைப் புட்டு புட்டு வைக்கிறார்கள் விஞ்ஞானிகள். சூடான முளையை குளிர்விக்கத்தான் நாம கொட்டாவி விடுறோமாம். பல நோய்களுக்கு சுய பரிசோதனையா கொட்டாவி அமைகிறது என பல ஆச்சர்யத் தகவல்களைச் சொல்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

புரியாத புதிர்... இருமல், தும்மல், விக்கல் மாதிரி கொட்டாவியும் ஒரு உடலியல் நிகழ்வு தான் என்றாலும், மற்றவைகளைப்போல அறிவியல்பூர்வமான காரணம் மட்டும், இதுவரையில் ஒரு புரியாத புதிர் தான்.

கொட்டாவி எண்ணிக்கை... ஆனால், காலத்தைப் பொறுத்து கொட்டாவியின் எண்ணிக்கை மாறுமாம். “சுற்றுச்சூழலிலுள்ள வெப்ப அளவு உடலின் வெப்பத்தைவிட அதிகமாக இருந்தால் கொட்டாவி வரும் வாய்ப்பு மிக மிக குறைவு“ என்ற ஆராய்ச்சி முடிவை வெளியிட்டுள்ளார் பிரின்ஸ்டன் பல்கலைக்கழக ஆய்வாளர் ஆண்ட்ரூ கேளப்!





மூளை சூடாச்சுனா இப்படித்தான்... இந்த ஆய்வின் மூலம், வெப்ப அளவு கொட்டாவி ஏற்படுவதற்கான காரணி என்றும், கொட்டாவியானது மூளையின் வெப்ப அளவை நெறிமுறைப்படுத்தும் ஒரு முறையாக இருக்கக்கூடும் என்பதும் நிருபிக்கப்பட்டுள்ளதாம்.


காலநிலைக்கு தகுந்த படி மாறும்... காலநிலைக்கு 80 பேர் என, கோடைகாலம் மற்றும் குளிர்காலத்துக்கு 160 நபர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் எத்தனை முறை கொட்டாவி விடுகிறார்கள் என்று ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் முடிவில், கோடைகாலத்தைவிட குளிர் காலத்திலேயே மக்கள் அதிகமாக கொட்டாவி விடுகிறார்கள் என்று தெரிய வந்துள்ளதாம். கொட்டாவியின் வெப்ப நெறிமுறைக் கோட்பாட்டின்படி, கொட்டாவியின் போது நிகழும் குளிர்-வெப்ப காற்று பரிமாற்றத்தினால் மூளையானது குளிர்ந்துவிடுகிறது என்று நிருபித்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.


மற்றும் நாம் ஏன் கொட்டாவி விடுறோம்னா... கொட்டாவி விடும்போது மேல்வாய் மற்றும் கீழ்வாய் இரண்டும் அகலத் திறக்கப்படுவதால் மூளைக்குச் செல்லும் ரத்தத்தின் அளவு அதிகரிப்பதாலும், ஆழமாக மூச்சு விடும்போது குளிரான காற்று உஸ்சென்று வெப்பமான காற்று வெளியே செல்வதாலுமே மூளை குளிர்விக்கப்படுகிறதாம்.

நோய்க்கான அறிகுறி... கொட்டாவி விடும் எண்ணிக்கையை அதிகமாக்கும் நோய்களான ஸ்க்லீரோசிஸ் மற்றும் எபிலெப்சி ஆகிய இரு மூளைக் கோளாறுகள் உள்ளிட்ட பல நோய்களை முழுமையாக புரிந்துகொள்ளவும் உதவியிருக்கிறதாம் இந்த ஆய்வு.

சுய பரிசோதனை... அளவுக்கு அதிகமா கொட்டாவி விடுவதன் மூலம், உடலின் வெப்ப நெறிமுறையானது குறைந்துவிட்டதை அறிந்து கொள்ள உதவும் ஒரு முன்பரிசோதனையாகக் கூட எடுத்துக்கொள்ளலாமாம்.

ஜெயச்சித்திரா





### கருவறையிலேயே ஆரம்பிச்சாச்சு...

சமீபத்தில், கருவில் இருக்கும் குட்டிப்பாப்பா கொட்டாவி விடுவதை படம் எடுத்து வெளியிட்டுள்ளனர் இங்கிலாந்து ஆய்வாளர்கள். மேலும், இதுகுறித்து ஆய்வாளர்கள் கூறுகையில், கருவில் இருக்கும் சிசுவானது, ஒரு மணி நேரத்திற்கு நான்கு முறை கொட்டாவி விடுவதாக தெரிவித்துள்ளனர். இப்படிக் கொட்டாவி விடுவதன் மூலம் குழந்தையின் தாடைப் பகுதி நன்கு விரிய வாய்ப்பு கிடைப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### தம்மை மறந்து பெரிதாகக் கொட்டாவி விட்டு அவஸ்தைப்படுபவரும் உண்டு இதோ!!!

பெய்ஜிங்: வாயை ரொம்ப அகலமாகத் திறந்து கொட்டாவி விட்டதால் ஒரு சீன நாட்டவரின் நுரையீரலில் பெரிய ஓட்டை விழுந்து அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அந்த நபருக்கு வயது 26தான். பெயர் ஊ. சீனாவின் ஹுபாய் மாகாணத்தின், ஊஹான் என்ற ஊரைச் சேர்ந்தவர். சம்பவத்தன்று காலை வழக்கம் போல கண் விழித்து எழுந்த ஊ, வாயைப் பெரிதாக திறந்தபடி பெரிய்ய கொட்டாவி விட்டுள்ளதால். இதனால் அவரது நுரையீரல் அசாதாரண அளவுக்கு விரிந்து அதில் ஓட்டை ஏற்பட்டு விட்டது. இதையடுத்து அவருக்கு நெஞ்சு வலித்துள்ளது. ஆனால் அதை அவர் கண்டு கொள்ளவில்லை. ஆனால் போகப் போக வலி அதிகரித்துள்ளது. மூச்சு விடவும் முடியவில்லை. இதையடுத்து அருகில் உள்ள மருத்துவமனைக்கு ஓடினார். அங்கு அவரைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டர்கள், நுரையீரலில் பெரிய ஓட்டை விழுந்திருப்பதைக் கண்டுபிடித்தனர். அதற்குப் பெயர் நூமோதோராக்ஸ் என்று பெயர். அதாவது நுரையீரலில் உள்ள காற்றுப் பை பெரிதாகி வெடித்து ஓட்டை விழுந்துள்ளது. இதனால் நுரையீரலைச் சுற்றிலும் காற்று தேங்கி அவருக்கு வலியைக் கொடுத்துள்ளது.






# சுதுமலையில் மலைக்கவைக்கும் சேவல் சண்டை!





## யாழ்ப்பாணத்தில் இருந்து சுஜீவன்.

கடந்த 15.01.2014 வழமைக்கு மாறாக யாழ்ப்பாணத்தில் சுதுமலையில் குறிப்பிட்ட இடத்தில் ஒரு தொகுதி மக்கள் கூடியிருந்தனர்.. அங்க சாவல் சண்டை நடக்குதாம் எண்ட பேச்சுக்களும் ஆரவாரிப்புக்களும் காற்றின் அலைவரிசைகளில் பரவி சிறுவர் முதல் பெரியோர் வரை ஆர்வத்துடன் கூடியிருந்தனர்.. நேருக்கு நேர் இரு சேவல்கள் சூடு பறக்க சண்டை யிட்டுக்கொண்டிருந்தன.. இந்த சேவல் சண்டை நடந்தது வேறு எங்கையும் இல்லை எங்கிட யாழ்ப்பாணத்தில தான்..

உலகின் எல்லா நாகரிகங்களுக்கும் பொதுவான சேவல் சண்டை தமிழரின் பாரம்பரிய வீர விளையாட்டுக்களில் ஒன்றாக தொன்று தொட்டு பேணப்பட்டுவருகின்றது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பாடு மிருகவதை சட்டத்தின் கீழ் சேவல் சண்டைகள் தடை செய்யப் பட்டாலும் நம்மவர்கள் நம் கலையினை பரம்பரை பரம்பரையாக தொடர்ந்துகொண்டே உள்ளனர். சேவல் சண்டைகள் நடந்து கொண்டேதான் இருக்கிறன. தமிழர்கள் தம் கலாச்சார பண்பாடுகளை மறந்து அந்நிய மோகத்தில் திழைத்திருக்கின்றனர் என்று புலம்புபவர்களுக்கு ஒரு செய்தி.. தமிழரின் தாயக பூமி யாழ்ப்பாணத்தில் எமது பண்பாட்டு விழுமியங்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. எமது பாரம்பரிய மரபுகள் இன்றுன் பேணப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது.

சேவல் வளர்ப்பு நுட்பங்கள், அதில் இருக்கும் தந்திரோபாயங்கள், சேவல்களை சண்டைக்கு தயார் படுத்தல் போன்ற விடயங்கள் பரம்பரை பரம்பரையாக பயிற்றுவிற்கப்படுகின்றது. எம்மவர்களின் பாரம்பரிய கலை என்னும் வாழ்ந்து கொண்டிருப்பது அழவில்லா மகிழ்ச்சியினையும் ஒரு கம்பீரத்தினையும் கொடுக்கின்றது.. நாம் இனி கழத்திற்கு செல்வோம்...

## பட்டிப்பொங்கல் தினத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட சேவல் சண்டை..

பார்வையாளர்கள் சூழ்ந்திருக்கு இரத்தம் சொட்ட சொட்ட சேவல்கள் மோதிக்கொள்கின்றன.. சேவல் பெறும் ஒவ்வொரு அடிகளும் தான் வாங்கும் அடிகளாக துவண்டுபோகின்றனர் சேவல் வளர்ப்பவர்கள்.. அதே நேரம் சேவல்கள் பெறும் வெற்றிகளின் போது அவர்கள் அடையும் ஆனந்தம் சொல்லில் அடங்காது. சண்டைக்கு சேவல் தயார் படுத்துதல் என்பது இலகுவானா காரியம் அல்ல. 2 முதல் 3 வருட கால தொடர் பயிற்சிகள், அவற்றிகேற்ற உணவுகள் என அதனையே முழு மூச்சாக கொண்டு செயற்பட வேண்டும் என்று சேவல் கலை வல்லுனர் ஒருவர் தெரிவித்தார்.



இச் சண்டையினைப் பொறுத்தவரை இதற்கென்று வகுக்கப்பட்ட விதிமுறைகள் அடிப்படையிலேயே வெற்றி தோல்விகள் தீர்மானிக்கப் படுகின்றது. ஒரு களத்தில் சேவல்கள் வாழ்வா?? சாவா?? என்றே போரிடு கின்றன. ஒரு சண்டை குறைந்தது ஒரு மணி நேரமாவது நடைபெறும். களத்தில் ஒரு சேவல் இறக்கவேண்டும் அல்லது களத்தினை விட்டு வெளியேற வேண்டும். இதன் அடிப்படையிலேயே வெற்றி தீர்மானிக்கப் படுகின்றது. சேவல் சண்டையில் பலவருட கால அனுபவம் பெற்றவர்கள் இதற்கு நடுவர்களாக செயற்படுவார்கள்.

சேவல் சண்டை நடாத்துபவர்களின் ஒரே கவலை.. என் மண்ணின் பாரம்பரிய கலைக்கு ஒர் அங்கீகாரம் இல்லாமல் திரை மறைவில் நாடாத்துவதுதான். சேவல் சண்டையினை பெறுத்த வரையில் இது மகிழ்ச்சிக்காகவும் நம் வீரத்தினை சேவல் ஊடாக காட்டுவதற்குமான ஒரு களம்.. எம் மண்ணின் பாரம்பரியங்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து கொண்டே தான் இருக்கும். படங்கள் த.சுஜீவன்.


திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

ASIJAH EUROPE
Tel: +31 511 76 00 06
Tel: +31 511 76 00 07
Fax: +31 511 76 00 08
Mobile: +31 6 12 17 55 99
புதிய முகவரி:
VOORSTRAAT 32
9291 CK KOLLUM
THE NETHERLANDS
Email: info@asijah.com
Email: asijaheurope@hotmail.com




ஐரோப்பா எங்கும் இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள் மொத்த விற்பனை செய்கின்றோம்.
Web: asijah-europe.com


அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!

## Druck&Medien Awards 2013



யேர்மனியில் லுடின்சைட் நகரம் இன்று அச்சுக்கலைக்கு பெயர் பெற்ற நகரமாகத்திழ்கின்றது.
குறித்த வேலையை குறித்த திகதியில் மட்டுமன்றி அதன் தரம் குறையாது நாம் கொடுப்பதை மனநிறைவுடன் தரும் அச்சகமான Seltmann GmbH திகழ்கின்றது.
தமிழ் பத்திரிகை, சஞ்சிகை, அரங்கேற்ற மலர்கள், என்று எத்தனையோ இதுவரை அங்கு பதிப்பாகி வெளிவந்தது. வெளிவந்துகொண்டு இருக்கின்றது. இன்னும் பல வெளிவரக் காத்துள்ளது.
இப்படியாக ஓர் யேர்மன் அச்சகம், தமிழர்மத்தியில் பிரபலமானது. இங்கு வெற்றிமணிப் பத்திரிகை தனது ஆரம்பத்தினை அழகுற அமைத்து, தமிழ் அச்சுப்பதிவுக்கு ஓர் ஆழமான அத்திவாரத்தை தமிழர்கள் மத்தியில் இட்டுவைத்துள்ளது.

## வெற்றிமணி அச்சாகும் யேர்மனிய அச்சகத்திற்கு யேர்மனியில் சிறந்த

# அச்சுப் பதிப்புக்கான விருது!

இந்த அச்சகத்தின் அதிபர் வெற்றிமணியின் ஒவ்வொரு அங்கு வளர்ச்சியிலும் பங்குகொண்ட பெருமைக்குரியவர். இவர் பதிப்புத்துறையில் காட்டிய திறமைக்கும், பற்றுக்கும் மதிப்பளித்து 2008 ஆண்டு வெற்றிமணி விருது வழங்கிக் கௌரவித்தது.

இன்று இந்த அச்சகத்தில் பதிப்பான “Rainer Wahnsinn” என்னும் நூல் யேர்மனியில் சிறந்த பதிப்புக்கான விருதினைப் பெற்றுக்கொடுத்துள்ளது.
தலைசிறந்த நாடக நடிகர்களது புகைப்படங்களை, அப்படியே தத்துரூபமாக அச்சுப்பதிவு செய்து, இந்த வெற்றியை ஈட்டியுள்ளனர். இதற்கு காரணம் அவர்கள் அச்சுக்கலை மீது கொண்டுள்ள பற்றும், உழைப்புமே, காரணம் என்று, இந்த வெற்றியை வழங்கிய தேர்வுக்குழு தெரிவித்துள்ளது.
இந்த வெற்றி வெற்றிமணிக்கு கிடைத்த கௌரம் போல் எண்ணி மகிழ்கின்றோம். இதே அச்சகத்தில் இருந்துதான் வெற்றிமணி அச்சாகி உங்கள் கரங்களுக்கு வருகின்றது.

ஆரம்பகாலத்தில் எத்தனையோ கஸ்டங்களுக்கு மத்தியில் வெற்றிமணியினை சிறப்புற பதித்து தந்த இந்நிறுவனத்தினை நன்றியுடன் பாராட்டுகின்றது.

அச்சகத்தின் பிதா Seltmann அவர்களும், அவர்களது மகன் Arno Seltmann களும் (இன்றைய அதிபர்) தமிழ்மக்கள் மீதும், அவர்களது கலை, கலாச்சார, பதிப்புக்கள் மீதும் கொண்டுள்ள விருப்பே, அவர்களை தமிழர்மனங்களில் சிம்மாசனம் இட்டு இருக்க வைத்துள்ளது.
இன்னும் பல வெற்றிகளை இந்த அச்சகம் பெற்று, நகரத்திற்கும் அச்சுக்கலைக்கும் பெருமை சேர்க்க வேண்டும், என்று வெற்றிமணி வாழ்த்து கின்றது.

# தமிழ் கடைகளில் சேல் போடவில்லை என்றால் தமிழ் பண்டிகையும் தெரியாது போய்விடும்!

**புவனம் தர்மரட்ணம்**

ஆங்கிலப் புதுவருடம் ஆரம்பமாகி அடியெடுத்து வைத்துவிட்டோம்.
‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பர். ஆனால் தைப் பொங்கல் தீபாவளி மற்றப் பண்டிகைகளும் எப்போ வரப்போகிறது என அதிக மானோருக்குத் தெரிவதில்லை.
அன்றைய பாட்டிமார்கள் படிக்கவில்லைத்தான் என்றாலும் வழி வழியே வந்த வழக்கமான பண்டிகைகளைக் கொண்டாடத் தவறியதே இல்லை. இதை இப்படித்தான் செய்யவேண்டுமென அன்று புரியவைத்துப் பழக்கிய காலங்கள் இப்போ உள்ள இளைய தலைமுறையினருக்கு காலாச்சாரம், பண்டிகைகளின் பழக்க வழக்கங்களை அறிய வாய்புகள் குறைந்து கொண்டே போகின்றன காரணம் வீடுகளில் பண்டிகைகளைக் கொண்டாடாமல் விடுவதேயாகும்.
குழந்தைகளுக் கென்றே தனி உலகம் இருக்கிறது. அவர்கள் தங்களுக்குப் பிடித்தமானவற்றையே விரும்பி செய்வதுண்டு. ஐந்து, ஆறு வயதுகளில் சகல அறிவையும் கற்றுக் கொள்ளும் திறன் ஆண்டவன் கொடுத்த கொடையே “ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?”. சிறு வயதில் இருந்தே ஊக்குவித்தல் வேண்டும். இந்த வயதில் நல்லது கெட்டது புரியாது. எமது கலாச்சாரம் பண்பாடுகளை நாம் தான் அவர்களுக்கு பழக்கப் படுத்த வேண்டும்.
பொங்கலுக்கு நாங்கள் பிறந்து, வளர்ந்த, வாழ்ந்த, ஓடியாடிய முற்றத்தில், அன்று மெழுகி, கோலம் போட்டு பொங்கிய அந்தநாட்கள், விளக்கீட்டில் அன்று பந்தம்சுற்றி கோடிப்பக்கம், கிணற்றடி, அம்மியடி, வீட்டைச் சுற்றி நீ முந்தி, நான் முந்தி என காலில் சக்கரம் பூட்டியது போல் ஓடி, பந்தம் கொழுத்தியது, சித்திரை புதுவருசம், நவராத்தரி, தீபாவளி என பண்டிகைகளின் சிறப்பு இவை எல்லாமே நமது கலாச்சாரங்களின் அடையாளங்கள்.
எல்லோரும் தீபாவளி அன்று புது உடுப்பு உடுத்து வெடி கொழுத்தி கொண்டாடலாம். வேலைக்குப் போகும் அம்மா ஒரே ஒரு நாள் லீவு எடுத்து மணக்க, உருசிக்க சமையல்களைச் செய்து, பிள்ளைகளும் பாடசாலையில் இருந்து வர, அப்பாவும் வரச்சரியாகிவிடும். பின் தாத்தா, பாட்டி பெற்றோர் என எல்லோரும் ஒன்று கூடி கோலாகலமாகக் கொண்டாடி ஒரு பிடி பிடிக்கலாமே! தாத்தா, பாட்டியின் முகமலர்ச்சியைப் பாருங்களேன் வீடே அமளியாகத்தான் இருக்கும்.
இன்னும் சொல்லப் போனால் வருடக் கடைசியில் கிறிஸ்மஸ் கொண்டாட் டத்தை ஜாதி, மத, வேத வேறுபாடின்றி உலகெங்கும் உள்ள மக்கள் கொண்டாடினார்கள் பார்த்தோம், பங்குபற்றி மகிழ்தோம். இப் புது வருசத்தில் இருந்தே நாமும் நமது கலாச்சாரப் பண்டிகைகளையும் வீட்டிலே கொண்டாடிப் பார்க்கலாம். எம்மை பார்த்து எமது பிள்ளைகளும் கொண்டாட தொடங்கி, சிநேகிதர்களையும் அழைத்து கொண்டாடவும் பழகிவிடுவார்கள்.
இதுமட்டும் அல்ல, வாசல் படி இறங்கினாலே சுவாசிக்கும் காற்றும் வேற்று மொழியாக இருக்கிறது! (ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்சு,டெனிஸ்) எனவே வீட்டில் மூத்தோர், பெற்றோர், பிள்ளைகளுடன் தமிழில் பேசினால் நாளடைவில் கேட்டுபேசப்பழகிவிடுவார்கள். சிறுவயதில் இருந்தே ஆரோக்கியமான கலாச்சார, பழக்க வழக்கங்களின் ஆர்வத்தை வெளிக் கொணரலாம். நேரம் இல்லை என்று சொல்வது மடமை. நாம் தான் நேரத்தை துரத்த வேண்டும். தமிழும் எமது கலாச்சாரமும் நமது அடையாளங்கள்! அதை அழிய விடா தீர்கள். இன்று தமிழர்பண்டிகைகளை நினைவுபடுத்துவதில் புலம்பெயர்ந்து வாழும்நாட்டில்ல உள்ள வியாபார ஸ்தாபனங்கள் முக்கிய இடம் பிடிக்கின்றன. அவை தீபாவளி சேல்! புதுவருட சேல்! பொங்கல் சேல்!!! என பண்டிகைகளை முன்னிலைப்படுத்தி நிற்பதனால் நமக்கு பண்டிகைகள் ஞாபகம் வருகின்றன.



# நீங்கள் வாழ்வில் போட்ட புள்ளிகளை முறையாகத் தொடுத்தால்! நீங்கள் பெரும் புள்ளி!




சிவஜெனனி அரவிந்தன்

என்னை அப்பிள் விலக்கியிருக்காவிட்டால்.....



இவ்வளவும் நடந்திருக்காது. சிலசமயம் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்கள் மருந்து போல் இருக்கும்.
அது நன்மையைக் கொண்டுவரும். ஆகையால் நம்பிக்கையை இழக்காதீர்கள். எதனை நீங்கள் விரும்புகின்றீர்களோ அதனை நம்பிக்கையுடன் செய்யுங்கள்.

சிலநேரங்களில் இழப்பதும் நன்மையைக் கொண்டு வரும். ஆனால் நம்பிக்கையை இழக்காதீர்கள்.

நான் மிகவும் அதிஸ்டசாலி ஏனெனில் ஆரம்பத்திலேயே எனக்கு எது விருப்பம் என்பது தெரிந்துவிட்டது. எங்கவீட்டு கறாச்சில் ( Garage) நானும் எனது நண்பனும் அப்பிள் செய்யத் தொடங்கினோம். 10 வருடத்தில் 4000 வேலை யாட்களை வைத்து 2 மில்லியன் டொலர் வரும் கொம்பனியாகியது.

எனக்கு 29 வயதில் mackintosh உருவாக்கினோம். Laser writer தயாரிப்பதற்கும் நான் உதவினேன். ஆனால் 30 வயதில் என்னுடைய சொந்தக்கம்பனியில் இருந்து விலக்கப்பட்டேன்.

எனது கொம்பனியில் இருந்து என்னனென்று என்னையே விலக்குவது என்று நினைக்கின்றீர்களா? கேளுங்கள்!! அப்பிள் கொம்பனி வளர்ந்துகொண்டு போக ஒரு புத்திசாலியை எடுத்தோம். இதனால் கொம்பனி நல்ல முன்நேற்றம் அடைந்தது. சில வருடங்களுக்கு பின் முதலில் சரியாகச் சென்று கொண்டிருந்த இந்தக் கொம்பனி, எனக்கும் புதிதாய் சேர்ந்தவருக்கும் இருவருடைய கண்ணோட்டமும் வேறுவிதமாகச் செயற்படத் தொடங்கியது. இயக்குனர் குழு அவர்தான் சரி என்று கூறியதால் நான் விலக்கப்பட்டேன்.

பின்பு எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. நான் செய்த வேலை எனக்குப் பிடித்தது என்பது மட்டும் புரிந்தது. திரும்பவும் அக்கொம்பனிக்குச் சென்று David Pacard அவரையும் Rob Noyce என்பவரையும் சந்தித்து மன்னிப்புக் கேட்டேன்.
அச்சமயம் அப்பிள் எந்தவகையிலும் மாறுபடவில்லை. இருந்தாலும் அந்த வேலை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அது நான் அத்துறைமீது கொண்டிருந்த அதீதகாதல்.

இப்போ நினைக்கும் போது, அதே நேரம் வேலையில் இருந்து நீக்கப்பட்டது நல்லதாகவே கருதுகிறேன். ஏன் எனில் அந்தப் பழுவில் இருந்து விடுபட்டது ஒரு சுகமான ஆரம்பமாகமாக இருந்தது.

இந்த 2வருட இடைவெளியில் நான் 2 கொம்பனிகளை ஆரம்பித்தேன். 1.Pixar 2.Next (Computur Platform Development Company). Pixar பின்பு அவரது கொம்பனியை Disney வாங்கியது. அத்துடன் 1996 இல் அப்பிழுக்கு பிரச்சினை தொடங்கியபோது அவர்கள் Next கொம்பனியை நாடினர். Next இன் Platform தான் உபயோகித்தார்கள்.
அதனால் அப்பிழுக்கு நான் ஒரு CEO வாகவும் Chief Executive officer ஆகவும் இருந்தேன். பின்பு 1998 இல். அப்பிள் மிகவும் இறங்கியபோது இவர் அதனை இலாபகரமாகக்கொண்டு வந்ததால் அதன் பின்பு I Pod, I Phone Apple retail stores, I Tune Store, App Store கொண்டுவந்தார்.

## ஓரம்போ! ஓரம்போ!! ருக்குமணி வண்டி வருது!

**இந்தவேலைக்கு எல்லாம் மனுஷன் போவானா! என்று விட்டால், பெரும்பான்மை வந்து குடிகொள்ளும்!**

இலங்கை புகையிரத திணைக்களத்தினால் யாழ் மாவட்டத்தின்

**எழுதுமட்டுவாள்**
**மிருசுவில்**
**மீசாலை**
**சங்கத்தானை**
**தச்சன்தோப்பு**
**புங்கன்குளம்**
**கொக்குவில்**
**இனுவில்**
**மல்லாகம்**
**தெல்லிப்பளை**
**மாவிட்டபுரம்**




போன்ற உப புகையிரத நிலையங்களுக்கு, உதவி புகையிரத நிலைய அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளது.

க.பொ.த சாதாரண தரத்துடன் விண்ணப்பிக்க முடியும். இது நிரந்தரமான பதவி இல்லை என்றாலும் க.பொ.த சாதாரண தரத்துடன் உள்ளவர்களுக்கு உகந்ததாக இருக்கும். உங்களுக்கு தெரிந்தவர்கள் யாரும் இருந்தால் விடயத்தை தெரியப்படுத்துங்கள்.

சம்பளம் புகையிரத நிலையத்தின் வருவாய்க்கு ஏற்ப அதிகரிக்கும்.

**பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்காது போனால் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் பதவிக்கு அமர்த்தப்படலாம்.**

இலங்கையில்.03.01.2014 ந் திகதிய வர்தமானி அறிவித்தலில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.




அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!




# காதலர் கவித்துளிகள்!

## வரம்பு

நட்பு
உளம் சார்ந்தது...
காதல்
உடலும் சார்ந்தது!!
நட்பின் கைகள்
எதிர்பார்ப்புகள் இன்றி
அணைத்து நிற்கும்...
காதலின் கைகள்
சுயநலத்தோடு சுழியோடும்...
நட்பின் தொடுகை
எல்லைக்கோட்டுக்கும் மேலானது...
காதலின் தொடுகை
எல்லைக்கோட்டுக்கு கீழானது!!

-அமுதநதி சுதர்சன்

## நட்பும் காதலும்

மழையில் நனைந்து விடுவது நட்பு! .
மழையை நனைத்து விடுவது காதல்!
ஒரு தட்டில் இரு கை சோறு நட்பு... .
ஒரு கையில் இரு வாய் சோறு காதல்!

விடியலுக்கு காத்திருக்கும் நட்பு!
இரவுக்கு ஏங்கி நிற்கும் காதல்!
பார்க்கும்போதெல்லாம் புன்னகை அது நட்பு!
பேசும்போதெல்லாம் வெட்கம் அது காதல்!
ரோஜா இதழ்களை களைவது காதல்!
முட்களை களைவது நட்பு! .

-அருள் அனு



## 'ஹலோ'

நீ என்னுடன் பேசாவிட்டாலும்
நான் உன்னுடன் பேசாவிட்டாலும்
உன் "ஹலோ"
என்ற குரல் கேட்க தினம் உன்
தொலைபேசி
எண்ணைத் தொடுகிறேன்
உனக்கு தெரியுமா

-நிலவொளி

## காதலர்

உங்களைப் போல
எனக்கு
கவிதை எழுதத் தெரியாது...
காற்றில் கேசம் மெலிதாய் புரள
தலையை அசைத்துப்
புன்னகைக்கிறாய்...
அடடா
என்ன அழகான கவிதை !!!

சேவியர்

ஏதோ ஓர்
அதிகாலை அமைதியில்
உன்னை கண்டேன்.
அன்றிலிருந்து
அதிகாலை
அமைதியாயில்லை.



உன்னுடம்
பேசும்போதெல்லாம்
பார்க்கவேண்டும் என்று
தவறாமல் தோன்றும்.
ஆனால்.... பார்க்கும் போதெல்லாம்
பேசத் தோன்றுவதில்லை.


காதலர் தினத்தை முன்னிட்டு

Gopara Gnanam

பேரம் பேசுதல் மலிவு விற்பனை! Bargain Sale

1.2.2014 முதல் 20.2.2014 வரை



அனைத்து ஆடைகள் சேலைகள் பான்சிப்பொருட்கள் (மளிகைப்பொருட்கள் தவிர்ந்த )
அனைத்திற்கும் குறிக்கப்ட விலைகளில் இருந்து நீங்கள் பேரம் பேசி வாங்கலாம்.
ஒரு குறிக்கப் பட்ட பொருளுக்கு இரு தடைவ நீங்கள் பேரம் பேசலாம்.
உதாரணமாக:
ஒரு பொருள் 600 யூரோ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் (நீங்கள்) 400 யூரோ என்று கேட்கிறீர்கள். அதற்கு, சேல்ஸ் மென் இல்லை என்கின்றார். பின்பு வாடிக்கையாளர் (நீங்கள்) 450 யூரோ கேட்கின்றீர்கள் அதற்கு சேல்ஸ்மன் சரி தரலாம் (OK) என்கின்றார். நீங்கள் 600 யூரோ என்று குறிப்பிட்ட அப்பொருளை பேரம்பேசி 450 யூரோவிற்கு பெற்றுச் செல்லலாம்.

(முக்கிய குறிப்பு பேரம் பேசி நீங்கள் 2 வது தடவையாகச் சொன்ன விலைக்கு சேல்ஸ்மென் சரி என்ற பின்பும் அப்பொருளை நீங்கள் வாங்கவில்லை என்றால், சேவிஸ்சாச் 10யூரோ அறவிடப்படும். வாங்கினால் அந்த சேவிஸ்சாச் அறவிடப்படமாட்டாது)

நீங்கள் 2 தடவை பேரம் பேசும்போது
சேல்ஸ்மென் இல்லை என்றால் ..
வாடிக்கையாளர் நீங்கள் வாங்கத் தேவை இல்லை!
சேவிஸ்சாச்சும் கட்டத்தேவை இல்லை!





பேரம் பேசுங்கள் மனம் மகிழப்
பொருட்களை தேர்வு செய்யுங்கள்!
உங்கள் நண்பர்களுடனும் பேசுங்கள்!
பேரம் பேசுதல் மலிவு
விற்பனையை விளக்கிச்
சொல்லுங்கள்




அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!

Rheinische Str. 81
44137 Dortmund
Tel: 0231/5450028 Mob:01713306542





# ஐம்பது காசுக்காக! உறைந்த பனி ஆற்றில் பயணம் செய்த கார் சாரதி!

குறுக்குப் பாதை அது எவ்வளவு ஆபத்தானது என்றாலும் சரி. அதில் ஒருவித திகிலும் மகிழ்ச்சியும் மனிதர்களுக்க எப்பவுமே இருக்கிறது.

அன்று 007 படத்தில் ஒரு கார் கடலுக்கள் நீர்முழ்கிக்கப்பல்போல் நீந்திச்செல்வதாக படத்தில் காட்டினர். இப்போது உண்மையாக அப்படி கார்களை வடிவமைத்துவிட்டனர்.

ஆனால் இங்கு சாதாரண கார் ஒன்று ஆற்றைக்கடக்கிறது பாருங்கள்.

சீனாவில் பாலமொன்றில் பயணிப்பதற்கு செலுத்த வேண்டிய 50 சத கட்டணத்தை தவிர்க்கும் வகையில் ஒரு கார்ச் சாரதி உயிராபத்தையும் பொருட்படுத்தாது உறைந்து பனிக்கட்டியாகியுள்ள மஞ்சள் ஆற்றின் மேலாக தனது காரை செலுத்தி சென்று அங்குள்ள மக்களைத் திகிலில் ஆழ்த்தியுள்ளார

அவர் இன்னர் மொங் கோலியாவில் ஓர்டொஸ் பிராந்தியத்திலுள்ள மஞ்சள் ஆற்றின் மீதாகவே மேற்படி அபாயகரமான பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

அந்தக் கார் உறைந்த ஆற்றின் மேலாக பயணிக்கையில் ஆற்றின் மேற்பரப்பிலிருந்த பனிக்கட்டிகள் பெரும் சத்தத்துடன் வெடிக்க ஆரம்பித்துள்ளன. அதன் காரணமாக கார் எந்தநேரமும் ஆற்றில் மூழ்கலாம் என்ற அச்சத்துடன் ஆற்றங்கரையோரத்தில் கூடியிருந்த மக்கள் அந்தக் காரை திகிலுடன் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் கார் சாரதி ஆற்றின் ஒரு கிலோ மீற்றர் அகலமான தூரத்தை 10 நிமிடங்களில் கடந்துள்ளார்.

5464 கிலோமீற்றர் நீளமான மஞ்சள் ஆறு 9 மாகாணங்களூடாக பாய்ந்து சென்று கிழக்கு சீனாவில் ஷாங்டொக் பிராந்தியத்திலும் பொஹாய் கடலில் சங்கமிக்கிறது. இச்செய்தி Mail online இல் வந்து கலக்குகிறது.

# ரஷியநாடு தமிழைக் கொண்டாடுகிறது!



ரஷிய அதிபர் மாளிகையான கிரெம்ளின் மாளிகை

அந்நிய சூமண்ணில் அன்னைத் தமிழுக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம்!

“தமிழன் தமிழில் எழுதினாலோ பேசினாலோ பாராட்டுவது நாமாகத்தான் இருப்போம். நம் மொழியை நாம் பேசவே பாராட்டுகிறோம்.

அந்தளவு போய்விட்டது நம் மொழி. ஆனால், தமிழுக்குத் தொடர்பே இல்லாத ரஷிய நாடு தமிழைக் கொண்டாடுகிறது. அங்கிருக்கும் ரஷிய அதிபர் மாளிகையான கிரெம்ளின் மாளிகையின் பெயரை அவர்கள் அழகுத் தமிழில் எழுதியுள்ளார்கள்.

**முதலாவதாக அவர்கள் தாய் மொழியான ரஷிய மொழியிலும்,**
**இரண்டா வதாக அண்டை நாட்டு மொழியான சீனத்திலும்,**
**உலகத் தொடர்பு மொழி என்ற நோக்கில் ஆங்கிலத்திலும்,**
**நான்காவதாக தமிழிலும் எழுதி யிருக்கிறார்கள்.**

தமிழைவிட எத்தனையோ உலக மொழிகள் பெரும்பாலான மக்க ளால் பேசப்படுகின்றன. ஆனால், அவற்றையெல்லாம் விட்டுவிட்டு தமிழ்மொழியில் அதிபர் மாளிகையின் பெயரை எழுதியதற்கு அவர் கள் கூறும் காரணம், தமிழர்களாகிய நம்மைச் சிந்திக்க வைப்பதாக இருக்கிறது.

“உலகில் 6 மொழிகள்தான் மிகவும் தொன்மையானவை.

அவை

**கிரேக்கம், லத்தீன், எபிரேயம், சீனம், தமிழ், சம்ஸ்கிருதம்.**

இந்த 6 மொழிகளில் நான்கு மொழிகள் இன்று வழக்கில் இல்லை. இலக் கிய, வரலாற்று செழுமையான மொழி, எங்களுக்கு உலகில் உள்ள முக்கிய மொழிகளான 642 மொழிகளிலும் சரியான, தகுதியான மொழியாக தமிழ்மொழி தென்பட்டது. அந்த மொழியைச் சிறப்பிக்கவே “கிரெம்ளின் மாளிகை' எனத் தமிழில் எழுதினோம்” என்று கூறுகிறார்கள்.

மேலும், அங்கே வைக்கப்பட்டுள்ள அரிய நூல்களுள் நமது திருக்குறளும் ஒன்று.




அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!

உலகே மாயம்! இந்த வாழ்வே மாயம்!! உலகில் நாம் காணும் சுகமே மாயம்!!!

# பழம்பெரும் நடிகர் நாகேஸ்வர்ராவ் மரணம்!

**அன்று காதல் என்றால் தேவதாஸ் - பார்வதி என்று காதலுக்கு இலக்கணம் படைத்தவர்கள் நாகேஸ்வர்ராவும் சாவித்திரியும்.**



பழம்பெறும் நடிகர் நாகேஸ்வரராவ் காலமானார் 22,01.2014, தெலுங்கு திரைப்பட உலகில் முன்னணி கதாநாயகராக வலம் வந்த பழம்பெரும் நடிகர் நாகேஸ்வரராவ் ஹைதராபாத்தில் காலமானார். அவருக்கு வயது 90. தெலுங்கு திரையுலகின் பழம்பெரும் நடிகரும், நடிகர் நாகார்ஜுனாவின் தந்தையுமான அக்கினேனி நாகேஸ்வரராவ் கடந்த 1923-ம் ஆண்டு பிறந்தவர். சமீபத்தில் தனது 90-வது பிறந்தநாளை கொண்டாடிய இவர், கடந்த சில நாட்களாக கடுமையான வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்தார். கடந்த சில நாட்களாக உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த அவர் இன்று அதிகாலையில் மரணம் அடைந்தார்.

தேவதாஸ் 1940-ம் ஆண்டு தர்மபத்தினி என்ற படத்தின் மூலம் அறிமுகமானார். தமிழ் தெலுங்கு உட்பட பல்வேறு மொழிப்படங்களில் நாகேஸ்வரராவ் நடித்துள்ளார். தேவதாஸ் படத்தில் நடித்ததன் மூலம் புகழின் உச்சிக்கு சென்றார்.

**தேவதாஸ் படம் அன்று காதலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தது.**

அதில் வரும் உலகே மாயம், வாழ்வே மாயம். உலகில் நாம் காணும் சுகமேமே மாயம். வாழ்வே மாயம் என்று கண்டசாலா பாடும் பாடல் இன்றும் அன்றை இளைஞர்கள் மனதில் ஒலிதஇதக்கொண்டே உள்ளது. இருமி இருமி இறுதிக்கட்டதில் இறப்புக்கமுன்னாக வரும் அப்பாடல் படத்தின் உச்சம் என்று சொல்லாம்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு படம் அமையும்
சிவாஜிக்கு பராசக்தி
எம்.ஜி.ஆருக்கு நாடோடி மன்னன்
எஸ.எஸ்.ஆருக்கு தெய்வத்தின் தெய்வம்.
விஜயகுமாரிக்கு பூம்புகார்.
நாகேஷ்க்க நீர்க்குமிழி
சுந்தாராம்பாளுக்கு ஔவையார்

இப்படி நாகேஸ்வர்ராவுக்கு
தேவதாஸ் அமைந்தது சிறப்பு

9 வேடங்களில் நடிப்பு “இட்டாரு மித்ருடு“ என்ற படத்தில் நாட்டிலேயே முதன் முதலாக இரட்டை வேடங்களில் நடித்த இவர், 'நவராரி“ என்ற படத்தில் 9 வேடங்களில் நடித்துள்ளார். இது தமிழில் சிவாஜி கணேசன் நடித்த 'நவராத்திரி“ என்ற படத்தின் தெலுங்கு ரீமேக் ஆகும்.

மகன் பேரனுடன் நடிப்பு நாகேஸ்வர ராவ், சுமார் 71 ஆண்டுகளாக பல தலைமுறைகளை கடந்து நடித்துள்ளார். தனது மகன் நாகார்ஜுனா, பேரன் நாக சைதன்யா ஆகியோருடன் இணைந்து திரைப்படத்தில் நடித்துள்ளார் நாகேஸ்வரராவ்.

படதயாரிப்பாளர் இவர் நடிப்பு மட்டுமின்றி 'அன்னபூர்ணா புரொடக்ஷன்ஸ்“ என்ற பெயரில் திரைப்படங்களை தயாரித்தும் வந்தார்.தாதாசாகேப் பால்கே விருது இந்தியாவில் திரைப்படத்துறையில் சாதனை படைப்பவர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான 'தாதா சாகேப் பால்கே“ விருது பெற்றுள்ள நாகேஸ்வர ராவ், தனது சிறந்த நடிப்புக்காக 'பத்ம விபூஷண்“ உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார்.

எத்தனை விருதுகள் பெற்றாலும் அதனைவிட பெருவிருதாக மக்கள் மனதில் அமர்ந்து தேவதாஸ் என்னும் திரைப்படமே!.

காதலில் தோல்வி உற்றவர்களைப் பார்த்து ஏன் தேதாஸா? என்று கேட்கும் அளவிற்கு அப்படத்தின் பாத்திரமாகத் திகழ்ந்தவர் நகேஸ்வர்ராவ்.

ஏன் இத்தனைக்குமேலாக தமிழகத்தில் நகேஸ்வர்ராவ் இறந்தசேதி அறிந்ததும், அவர் எப்போதே இறந்துவிட்டாரே என சில கூறினராம். அவர்கள் மனதில் நகேஸ்வர்ராவ் என்றால் தேவதாஸ் படத்தில் வந்தவர் என்றுதான் தெரியுமாமாம். எனவே தேவதாஸ் படத்தில் இரசிகர்களைக் கதறி அழவைத்து எப்போதே இறந்து விட்டாரே என்கின்றனராம்.




# குதியில் வலி, குதிவாதமா? குதிவாதம் என்றால் என்ன?




**Dr.M.K.முருகானந்தன்**
M.B.B.S(Cey) D.F.M(SL) M.C.G.P(SL)
குடும்ப வைத்திய நிபுணர்

உங்கள் பாதத்தில் வலி ஏற்படுகிறது. அந்த வலி நீங்கள் காலையில் படுக்கையை விட்டு எழுந்து பாதத்தை நிலத்தில் வைக்கும் போது கடுமையாக இருக்கிறது. தொடர்ந்து நடக்கும்போது வலி குறைந்து விடுகிறது. இத்தகைய வலிக்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் முக்கிய காரணம் பிளான்டர் பியடிஸ் (Planter Fascitiis) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் நோய்தான். எம்மவர்கள் இதனைப் பொதுவாகக் குதிவாதம் என்பார்கள். ஆனால் இது தவறான அர்த்தத்தைக் கொடுக்கும் பெயராகும். வாதம் என்பது மூட்டு களில் ஏற்படும் நோய். ஆனால் இது மூட்டுக்களில் ஏற்படும் நோயல்ல. எனவே உண்மையில் வாதம் அல்ல. பாதத்தின் அடிப்பகுதில் உள்ள சவ்வுகளின் அழற்சியாலேயே இந்நோய் ஏற்படு கிறது. மூட்டுகளில் அல்ல.

அத்துடன் பக்க வாதம் என்றும் பாரிச வாதம் என்று சொல்லப்படும் நோய்க்கும் இதற்கும் எத்தகைய தொடர்பும் கிடையாது என்பதும் குறிப்படத்தக்கது.

எனவே இது ஆபத்தான நோயல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். சில்லறைத் துன்பங்களைக் கொடுக்கும் நோய் மட்டுமே.

இந் நோயின் அறிகுறிகள் என்ன என்பதை முதலில் தெளிந்து கொள்ளுங்கள்.

இந்நோயின் முக்கிய அறிகுறி உங்கள் பாதத்தின் குதிப்பகுதியில் ஏற்படும் வலிதான். சில வேளை களில் அப்பகுதி சிவக்கலாம், வீங்கலாம், அல்லது சூடாக இருப்பதையும் நீங்கள் உணரக் கூடும். இவை அழற்சியின் அறிகுறிகளாகும். உங்கள் பாதத்தின் அடிப்பகுதியில் உள்ள தடித்த உள்ளங்காலுக்குரிய சவ்வுப் பகுதியில் ஏற்படும் அழற்சியால்தான் இந்நோய் ஏற்படுகிறது.
குதிவாதத்தினால் ஏற்படும் வலியானது முன்பே சொல்லியது போல முக்கியமாக அதிகாலையில் நீங்கள் படுக்கை விட்டு எழுந்து முதல் அடி வைக்கும் போது மிக அதிகமாக இருக்கும். சில அடிகள் நடக்க வலி தானே குறைந்து விடும். ஆனால் கவனியாது விட்டால் நாட் செல்லச் செல்ல வலி நாள் முழுவதும் உங்களுக்குத் துன்பம் தரக் கூடும்.

**குதிவாதம் ஏற்படக் காரணம் என்ன?**

குதிவாதம் ஏற்படக் காரணங்கள் பலவாகவோ அன்றி ஒன்றோடு ஒன்று தொடர்புடைய வெவ் வேறாகவோ இருக்கலாம். உங்கள் குதிப் பகுதியிலும் காலின் கெண்டைப் பகுதியிலும் உள்ள தசைகளின் இறுக்கம் காரணமாக இருக்கலாம், மாறாக பாதப்பகுதியின் தளர்ச்சியும் காரணமாகலாம், அல்லது நீங்கள் செய்யும் உடற்பயிற்சியைத் தவறாகச் செய்வதும் காரண மாகலாம், அல்லது உங்கள் பாதத்தின் இயற்கை யான வளைவுப் பகுதிக்கு நீங்கள் கொடுக்கும் அதிகரித்த வேலைப் பளுவாகவும் இருக்கலாம். உதாரணமாக மிக நீண்ட தூரம் ஓடுதல், அதி வேகமாக ஓடுதல், அடிக்கடி ஓடுதல் போன்ற பயிற்சிகளைக் கூறலாம்.
பொருத்தமற்ற அதாவது அளவற்ற காலணியை நீங்கள் உபயோகிப்பதும் குதிவாதத்திற்குக் காரணமாகலாம். அல்லது உங்கள் தொழில் காரணமாவோ அல்லது பொழுது போக்குப் பழக்கம் காரணமாகவோ, நீங்கள் குதிக்காலுக் குரிய சவ்வுக்கு அதிக வேலை கொடுத்து ஊறு விளைவிப்பதாலும் இருக்கலாம்.

**எப்படி சிகிச்சையளிக்கப்படுகிறது?**


உங்கள் வைத்தியர் உங்களுக்கு ஆலோசனை, பயிற்சி முறைகள், மாத்திரைகள், ஊசி ஏற்றுதல் போன்ற பல்வேறு வகையான சிகிச்சைகளில் ஒன்றையோ அல்லது சிலவற்றைச் சேர்த்தோ அளிக்கக் கூடும். அவர் உங்களுக்கு அளிக்கும் சிகிச்சை உங்கள் குதிவாதம் ஏற்படுவதற்கான காரணத்தை அகற்றுவதாக இருக்க வேண்டும். அத்துடன் அதன் வேதனையைக் குறைப்பதாகவும் இருக்க வேண்டும் அத்துடன் சிகிச்சையானது உங்கள் பாதத்தில் ஏற்பட்ட அழற்சியைத் தணிக்கவும் வேண்டும்.
முதலாவதாக உங்கள் பாதணியில் கவனம் செலுத்துங்கள். உங்கள் உள்ளங்காலுக்குரிய சவ்வுக்கு ஏற்பட்டுள்ள அதிக வேலைப்பளுவைக் கொடுக்காத, அதன் வேதனையைக் குறைப்பதற்கு ஏற்ற காலணிகளை நீங்கள் தேர்ந்து அணிய வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் காலணி உங்கள் உள்ளங்காலின் இயற்கையான வளை வுக்கு இசைந்து ஒத்தாசை வழங்குவதான அமைப்புடையதாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பாதணியின் அளவு உங்களுக்கு மினவும் பொருத்தமுள்ளதாக இருக்க வேண்டும்.

குதிவாதநோய் ஏற்பட்டுள்ள விளையாட்டு வீரர்களும், மற்றும் துடிதுடிப்பான வாழ்க்கை முறை கொண்டவர்களும் தமது பாதங்களுக்கு மேலதிக வேலை கொடுப்பதைக் குறைக்க வேண்டும். அதாவது பாய்தல், ஓடுதல், துள்ளல் போன்றவற்றைச் செய்யும் நேரத்தைக் குறைக்க வேண்டும். உங்கள் பாத வளைவுக்கு ஏற்ற விசேட பாதணிகளும் சிலவேளை தேவைப்படலாம்.
காலையில் படுக்கையை விட்டு எழுந்து நடமாட ஆரம்பிக்க முன்னரே பயிற்சிகளை ஆரம்பியுங்கள். எழுந்தவுடன் உங்கள் பாதத்தை குறுக்குவாட்டாக அழுத்தித் தேய்த்து மஸாஜ் செய்தால் எழுந்து நடக்கும் போது வலி குறைவாக இருக்கும். அடுத்தது தசைகளைப் பலப்படுத்தும் பயிற்சிகளை நீங்கள் செய்ய வேண்டும். இவை உங்கள் நோயைத் தணிப்பதில் நல்ல பலனைக் கொடுக்கும்.

முழங்காலுக்குக் கீழ் இருக்கும் கெண்டைக்கால் தசைகளுக்கான இழுவல் பயிற்சிகளும் குதிக்கால் வலிக்கு உதவும். மேலே காட்டிய படங்களில் உள்ளபடி இரண்டு விதமாக செய்யுங்கள். சுவரை உங்கள் கைகளால் தள்ளுவது போன்றவையே இப் பயிற்சிகள். முதலாவது படத்தில் காட்டியபடி உங்கள் இரு கைகளையும் மடிக்காது நேராக வைத்துக் கொண்டு சுவரைத் தள்ளுங்கள். தள்ளு போது முன்னிருக்கும் கால் சற்று மடிந்திருக்க பின்னிருக்கும் காலிலின் குதிப்பகுதியில் பாரம் தங்குமாறு செய்யுங்கள். அடுத்த தடவை கால்களை மாற்றி வைத்துச் செய்யுங்கள்.





இரண்டாவது படத்தில் காட்டிய அடுத்த பயிற்சியின் போது உங்கள் கைகள் சற்று மடிந்திருக்க சுவரைத் தள்ளுங்கள். இது பாதத்தின் முற்பகுதியில் பாரம் தங்குமாறு செய்யும். உண்மையில் இவை உங்கள் தசைகளைப் பலமுறச் செய்து அதனால் எதிர்காலத்தில் வலிகள் தொடர்ந்து வேதனை அளிப்பதைக் குறைக்க உதவும்.
பாதத்தின் தசைநார்களுக்குக் கொடுக்கும் பயிற்சிகளில் துவாயைச் சுருட்டல், மார்பிள் அல்லது நாணயங்களை கால் விரல்களால் பொறுக்கல், மற்றும் காற் பெருவிரல் தட்டல் பயிற்சிகள் சுலபமானவை. பயிற்சிகளின் பெயர்களைக் கேட்டவுடன் பயந்துவிடாதீர்கள். மிகவும் சுலபமானவை. தொடர்ந்து செய்ய நல்ல பலனையும் கொடுக்கும்.
துவாயைச் சுருட்டல் பயிற்சி - ஒரு துவாயை தரையில் விரியுங்கள். படத்தில் காட்டியபடி உங்கள் பாதத்தை அதன் ஒரு ஓரத்தில் வைத்தபடி அருகே ஒரு நாற்காலியில் உட் காருங்கள்.

**தொடர்ச்சி 22ம் பக்கம்.**



**T.T.S.Brothers GmbH&Co.KG**

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!




யேர்மனி!இங்கிலாந்து!!
வாசகர்களே!!!
இதோ! புதிய ஆரம்பம்!

# ஒரு வங்கிக் கணக்கையே ஐரோப்பாவில் (EU)(Bank account ) எங்கிருந்தும் பாவிக்கலாம்!

**மாசி மாதம் (1.2.2014) முதலம் திகதி முதல் ஐரோப்பாவுக்குள் பணம் அனுப்ப புதிய நடைமுறை!**

## SEPA ( Single Euro Payments Area)

முன்னுரை!
தற்போது நீங்கள் வசிக்கும் நாட்டில் இருந்து இன்னுமொரு ஐரோப்பிய நாட்டிற்குப் பணம் அனுப்புவது என்றால் வங்கிகள் Bank charges அறவிடுவதுடன் பணம் மாற்றம் (transfer) இல் தாமதங்களும் ஏற்படுகின்றன. இதனை எல்லாம் நிவர்த்தி செய்யும் முகமாகவே Feb 1ம் திகதி தொடக்கம் SEPA என்ற முறை அறிமுகப்படுத்தப்படுகின்றது.

## அனுகூலங்கள் (Advantages)

குறைந்த அளவு வங்கிக்கட்டணம் மிகக் குறுகிய காலத்தில் பணம் மாற்றீடு (transfer) செய்யப் படும். அதாவது இன்று அனுப்பும் பணம் அடுத்த நாளில் மற்றய உரிமையாளக்குச் சென்றடையும்.



நீங்கள் மற்றய Euro area ற்கு விடுமுறையில் செல்லும் போது, தங்களது வங்கி காட்டை (debit card) ஐ நீங்கள் வசிக்கும் நாட்டில் பயன் படுத்துவது போல், மற்றய ஐரோப்பிய நாடுகளிலும் பயன்படுத்தலாம். சில நாடுகளில் மிகக் குறைந் தளவு பணத்தை செலுத்தவதற்கு Credit Card ஐ ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எனவே நீங்கள் உங்களுடன் பணத்தை எப்போதும் வைத்திருக்க வேண்டும். SEPA முறையின் அடிப்படையில் debit card ஐ பயன்படுத்தலாம் என்பதனால் தங்களுடன் பணத்தை எப்பொழுதும் கொண்டு செல்லத்தேவை இல்லை..

ஒரு வங்கிக்கணக்கை (Bank account) மற்ற ஐரோப்பா (Euro) நாடுகளிலும் பயன் படுத்தலாம். நீங்கள் ஒரு நாட்டில் வசித்து இன்னொரு நாட்டில் வேலை செய்பவராக இருந்தால் இரண்டு நாட்டிலும் வங்கிக்கணக்கை ஆரம்பிக்கத்தேவை இல்லை.

நீங்கள் இன்னொரு Euro நாட்டில் வீடு வாட கைக்குக் கொடுத்து அதன் மூலம் மாதா மாதம் வாடகை வருமானத்தை Direct Debit முறை மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
தேவையான வங்கி இலக்கங்கள்:

## IBAN, BIC என்றால் என்ன?




IBAN = (International Bank Account Number)
உதாரணமாக U.K இல் இருக்கும் Natwest bank இன் IBAN இலக்கம் பின்வருமாறு இருக்கும்.

GB 33 NWBK 601020 72 89 3706
GB-Country Code UK
33- Two digit Check number
NWBK Natwest Bank (Bank Identifier)
72893706 Account number

**BIC = (Bank Identifier Code)**
உதாரணமாக Natwest bank இன் BIC Number NWBKGB2L என்றும். Allied Irish bank இன் BIC Number AIBK IE2D என்றும் Germany யில் உள்ள Deutche Bank கின் BIC number

**DEUT DE MM என்றும் இருக்கும்.**
**DEUT = Deutsche bank**
**DE =Germany code**
NWBK= Natwest bank
GB= UK Code

**ஆக்கம்:**
*Ragu Dharmaratnam ACMA, CGMA*


படம்:அபி

## 07.01.2014 சிவத்தமிழ்ச் செல்வியின் 89 வது பிறந்த தினம்.



கிளிநொச்சியில் அறக்கொடைவிழா - 2004





மார்கழி மிருகசீரிடத்தில் பிறந்தவர் சிவத்தமிழ்ச் செல்வியார். 07.01.2014 காலை 0830 மணி தொடக்கம் அன்னாரது 89ஆவது பிறந்த நாள் மங்கலப் பெருவிழா மிகச் சிறப்பாகத் தெல்லிப பழையில் அருள்மிகு துர்க்கை அம்மன் கோயிலில் வழிபாட்டுடன் தொடங்கியது.

அன்னாரது நினைவாலயத்தில் தொடர்ந்தது, அங்கி ருந்து ஊர்வலமாகத் திருமண மண்டபத்துக்கு வந்தது. விழா சிறப்பாக நடைபெற்றது.
படத்தில் அன்று வெற்றிமணி வெளியீடான "சிவத்தமிழ்" முதல் இதழை அன்னை தன்கையில் ஏந்தி மகிழ்வதையும்.
அருகே தீர்த்த் திருவிழாவின் போது பக்தர்களுடன் பக்தராக....

நன்றி:சிவத்தமிழ்




அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!

# காதலியைக் காணவில்லை!
# மனைவியைக் காணவில்லை!!
# தங்கையைக் காணவில்லை!!.
# அட டா!! தாயையும் காணவில்லை!



இன்று பெண்களுக்கு சொப்பிங்கென்றால் அலாதி! ஆண்களுக்கோ அதுவே அலேர்ஜி. இன்று வாழ்வில் பெரும்பகுதி தொலைக்காட்சி, கணனி இவைக்குள் புதைந்துகிடக்கிறது என்று சொன்னால் மீதி இந்த சொப்பிங்கள் தான் சுதப்பிக்கிடக்கிறது.



வேடிக்கை என்னவென்றால் முதலில் என்ன தேவை! எது வாங்கவேண்டும் என்று எந்த மனக்கணக்கும் மனதுக்குள் கிடையாது.
சும்மாபோவோம். பிடித்தால் வாங்குவோம். என்ன வாங்குவோம், எதுவென்றாலும் வாங்குவோம். இப்படித்தான் வீட்டில் இருந்து புறப்படும்பொழுது மனைவியோ இல்லை மகளோ சொல்வாள்.
கடைக்குள் நுழைந்ததும் தேர்த்திருவிழாவில் பிள்ளையைத் தொலைத்தவன் மாதிரி ஆண்கள் அலைய வேண்டியது தான்.
எங்கையப்பா போனீங்கள் என்றால். நீங்கள் எங்குபோனீங்கள் பின்னாலே வருவதுதானே! என்பாள் மனைவி. மகளோ இதுக்குத்தான் அப்பாவோடு வரப்படாது, சிநேகிதிகளுடன் வர வேண்டும் என்பாள்.
ஆண்கள் சொப்பிங்போவார்கள். போகும்போதே மண்டைக்குள் இண்டைக்கு என்ன வேண்டுவது என்ற ஒரு மனக்கணக்கு இருக்கும்.
சுப்பமாக்கெற்றுக்குச் சென்று ஒரு கேஸ் முட்டை, ஒரு பைக்கட் தேயிலை. ஒரு பால் 3 மாஜறீன் ஒரு பைக்கட் வெங்காயம் என்று, டக்கு! டக்கு!! என்று எடுப்பதுபோல சொப்பிங் சென்றாலும் ஒரு சேட்,4 சொக்ஸ், ஒரு சோடி சப்பாத்து, மற்றும் லோங்ஸ் அட இது அளவாக இல்லை பின்பு பார்க்கலாம், என்று சொல்லிக்கொண்டு, பாக்கிங்கில் நிற்கும் காருக்கு வந்தால் ஒரு மணித்தியாத்திற்கு போட்ட காசு இன்னும் 26 நிமிடங்கள் இருக்கு என்று காட்டும். அவ்வளவு விரைவாக வந்திடுவார்கள் இந்த ஆண்கள்..
ஆனால் மனைவியும், பிள்ளைகளும் ஏன் அம்மாவும் கூடத்தான். காசு முடியப்போகுது, பாக்கிங்கு காசு போட்டுவிட்டு வாருங்கோ, என்று சொல்வார்கள். காசைப்போட்டுவிட்டு வந்து அவர்களைத் தேடிப்பிடிப்பதற்குள் மீண்டும் அங்கு போட்டகாசு காணாமல் போய்விடும்.
“போகும் போது ஒருகையில் நிறைய உடுப்பு வைத்திருந்த என் காதலி, காருக்கு நான் பாக்கிங் கில் காசுபோட்டுவிட்டு வருவதற்குள் மீண்டும், வெறுங்கையோடு நிற்கிறா”, என்று புதிதாக காதலித்த ஒரு இளைஞன் புலம்பும்கிறான். எடுத்த உடுப்பு ஒருமணித் தியாத்திற்குள் பிடிக்காமல் திருப்பி வைத்துவிட்டாவாம்.
இது பறவாயில்லை. என் மனைவி வீட்டுக்குச் சென்று எல்லாம் கட்டிலில் போட்டு விரித்து பார்துவிட்டு, காதுக்குள் ரெலிபோனையும் வைத்தக் கொண்டு ஒரு சுற்று நண்பிகளுடன் சேல்பற்றி அளந்து விட்டு சொல்வாள்....
நான் நேற்று அங்கு குப்பையை எல்லாம் சுமந்து வந்திட்டேன். சுந்தரியைப் பாருங்கோ அவவின் மனுசன் அந்தப் பெரியகடைக்கு அல்லே கூட்டிச் சென்று சேல்லை எடுக்கவிட்டிருக்கிறார்.
நீங்களும் இருக்கறீயள் சும்மா ஒரு மூலைக் கடைக்குள் ( french conar) விட்டுவிட்டு என்னை முடக்கிபோட்டியள். நாளைக்குப் போறோம். நேற்று வாங்கியதை திருப்பிக் கொடுக்கிறறோம். நீங்கள் கடைக்கு வரவே வேண்டாம். பாக்கிங்கில் நில்லுங்கோ நான் திருப்பிக் கொடுத்திட்டு உடன் வாறேன் என்று சொல்லி மீண்டு நேற்றுப்போன கடைக்கு போவாள் என் மனைவி.
கடைக்குள் உடுப்பைச் சுற்றிச் சுற்றிப்பார்க்க ஆண்களுக்கு தலையே சுற்றும். அப்படியே பெண்கள் எங்கு மலிவா மோடேனா நல்ல உடுப்பு இருக்கு என்று தேட, ஆண்கள் எங்கு வசதியாய் ஒரு மூலையாய் ஒரு இடத்தில் இருக்கலாம் என்று இடம் தேடுவார்கள்.
கிட்டத்தட்ட கையும் கையும், பிடித்துக்கொண்டு, தோளும், தோளும், உரச! உரச!! இடையிடையே இதழ்களையும் நனைத்து நனைத்து செல்லும் இளம் ஜோடிகளைத் தவிர, மற்றவர்கள் எல்லா ஆண்களும் ஒரு வித விரக்தியில் தான் கதிரையில் அமர்திருப்பார்கள். அப்படி அமர்ந் திருக்கும் ஆண்களுக்கும், உரசி நடக்கும் அந்தப் புதிய ஜோடிகளுக்கும் அதிகவித்தியாசம் வயதில் இருக்காது. திருமணமானவர் .காதலித்தக் கொண்டு இருப்பவர் என்ற ஒரு வித்தியாசமே இருக்கும்.

தொடர்ச்சி 15ம் பக்கம்...







18.01.2014 யேர்மனி வூப்பெற்றால் நகரில் ஸ்ரீ நவதுர்க்காதேவி ஆலயத்தினரால் நடத்தப்பெற்ற பொங்கல்விழா இருந்து சில காட்சிகள்.



உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³ VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN
rmb³ ist Partner der Gothaer

யேர்மனியில் சிறந்த மணவறைக்கு நாடுங்கள்!
THUSHI DEKO GERMANY

New in Germany
THUSHI DEKO GERMANY

T.Thiruselvam:

Tel: 02305-85945
0176-60810813
www.thushi-deko.de




அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!










# பரதக் கலையில் மேரி றொஷானி ஞானேஸ்வரன்

சிறு வயதில் தாய்மண்ணை விட்டுப் புலம் பெயர்ந்து வந்து ஜேர்மன் - பேர்லின் மண்ணில் வாழ்க்கையைத் தொடங்கினார். அவ்வேளை பேர்லின் மாநகரில் கலைப்பணியை மிகச் சிறந்த முறையில் பயிற்றுவித்து வந்த நடன ஆசிரியை டயானா றதீஷ் அவர்களிடம் ஆறு வயதில் ஆரம்பப் பயிற்சியைத் தொடங்கினார். தொடர்ந்து பத்து ஆண்டுகள் முறையாக் நடனக் கலையை சிறப்புறக் கற்று, தான் கற்ற கலையை அவையோரின் அங்கீகாரம் வேண்டி 2005ம்ஆண்டில் பெரு வரவேற்போடு அரங்கேற்றத்தை நிகழ்த்தினார். 2005, 2006, 2007ஆம் ஆண்டுகளில் ஜேர்மன் ரீதியாக நடைபெற்ற "தித் தித் தெய்" என்ற நடனப் போட்டிகளில் பங்கு கொண்டு அவருக்கே உரித்தான திறமைகளை நிரூபித்தார். 2005ம் ஆண்டு தனி நடனமான பதத்தில் முதலாம் இடத்தையும், பலமுறை நடைபெற்ற குழுநடனங்களில் முதலிடங்களையும் பெற்று பெருமை சேர்த்தார்.

ஒளிவிழா, பொங்கல்விழா, கலைவிழா அரங்ககளில் இவர் பல நடனங்களை ஆடியும் பயிற்றுவித்தும் வருகிறார். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் இவருக்கு இறைவன் அளித்த வரங்கள் என்பதற்கமைய நாடகங்கள், பாடல்கள், கவிதைகள் எழுதியும் பாடியும் தனது ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகிறார். நவீன நாடகங்களின் ஈர்ப்பில் ஒன்றிய றெஷானி, Uta Plate என்பவரின் தயாரிப்பில் இடம்பெற்ற "Tusch Project"ல் நடித்தும் , 2010ஆம் ஆண்டு "அங்கம்" (Angam) எனும் தலைப்பில் "Contemporary Dance Show" ஒன்றையும் நிகழ்த்தினார். தமிழர் கலையிலும் தாய்மொழியிலும் ஈடுபாடு கொண்ட றொஷானி, பேர்லின் தமிழாலயத்தில் தமிழ் மொழியை 12 ஆண்டுகள் கற்று 11ம் வகுப்பை நிறைவு செய்து தமிழ் ஆசிரியராகவும் சில காலம் பணியாற்றினார்.இசையும் சேர கர்நாடக சங்கீதத்தை முறைப்படி தொடர்ந்து கற்று வருகிறார்.

2011ம் ஆண்டு கற்றுத் தேறிய Diploma பட்டத்தை சிறந்த பெறுபேறுகளோடு பெற்றுக் கொண்டதோடு, அதன் முத்தாய்ப்பாக "நாட்டியக் கலாஜோதி" என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். பரதக் கலையின் உத்திகளோடு பல புதிய வடிவங்களை உருவாக்கும் ஆற்றல் கொண்ட இவர், அதிகம் தேர்ந்து கொண்டது நிருத்திய பகுதி என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு இவர் Freie Universität Berlin - German பல்கலைக்கழகத்தில் South Asian Art History என்ற தலைப்பில் ஆய்வு செய்து, தனது இளமானிப் பட்டப்படிப்பை (B.A.) 2012ம் ஆண்டு நிறைவு செய்துள்ளார். அதே ஆண்டில் 11.02.2012 இல் "ஜோஸ்கலாலையத்தை" ஆரம்பித்தார். இதில் தமிழ், ஜேர்மன், பிலிப்பைன்ஸ் மாணவிகளும் கற்க ஆரம்பித்தனர். இதனைத் தொடர்ந்து இரண்டு பேர்லின் ஆரம்பப்பள்ளிகளில் Weißensee Grundschule மற்றும் Picasso Grundschule இல் நடன வகுப்புக்களை ஆரம்பித்து கற்பிக்கத் தொடங்கினார். பல நாட்டு மாணவர்கள் இக் கலையில் ஆர்வம்கொண்டு கற்க ஆரம்பித்தால் இன்னும் நடனத்தில் ஆர்வம் கொண்டவர்களை உள்வாங்குவதற்காக Flashmob என்னும் Street Art கலைவடிவத்தை 20 க்கு மேற்பட்ட இளையோர்களுக்கு பயிற்றுவித்து அரங்கேற்றினார்.

இவ் ஆண்டில் தன் முதுமானிப் பட்டப்படிப்பை (M.A.) Asian Studies ஐ Rheinische Friedrich-Wilhelms-Universität Bonn இல் ஆரம்பித்துள்ளார். இப் படிப்பில் இவர் சமஸ்கிருதமும் ஒரு முக்கிய பாடமாக தெரிவுசெய்து கற்றுவருகிறார். இவர் பரதக்கலையில் சிறக்க வாழ்த்துக்கள்







**ஆங்கிலப் புத்தாண்டு தினத்தில் டோட்முண் சிவன் கோவிலில் பெருந்திரளானமக்கள் கலந்து நின்றுவழிபடும் காட்சி**







அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!




Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com

## இங்கிலாந்தில் உள்ள நடைமுறை சில....

### வருமான வரி *(Income tax)*

கே: என்னுடைய வருட சம்பளம் *£30.000,* மாதா மாதம் நான் சரியான அளவு வரியைத்தான் எனது வேலைத்தளம் மூலம் செலுத்துகிறேன் என்பது எவ்வாறு கணக்கிட்டு அறிய முடியும் எனச் சொல்வீர்களா?

ப: உங்களுக்கு வேலைத்தளத்தில் இருந்து சம்பளத்தை தவிர வேறு எந்த சலுகைகளும் *(Perks)* கிடைக்கா விட்டால் ஒவ்வொரு வருடமும் முதல் உழைக்கும் *£9440* பணத்திற்கு எந்த வரியும் இல்லை, அதற்கு மேலாக உழைக்கும் *£32,010* வரையான பணத்திற்கு 20 வீதம் வரி கட்ட வேண்டும். எனவே நீங்கள் கடந்த 2013-2014 *tax year* ல் மொத்தமாக வருடத்திற்கு கட்ட வேண்டிய வரி £4112 (மாதம் *£342*).

### வீட்டு வாடகை வருமானம் *(Rental Income)*

கே: எனது 3 *bedroom* வீட்டில், ஒரு அறையில் *student* ஒருவர் வாடகைக்கு இருந்து ஒரு மாதத்திற்கு *£500* வாடகை தருகிறார் (வருடத்திற்கு *£6000*). இந்த வருமானத்திற்கு 20வீதம் வரி செலுத்த வேண்டுமென எனது நண்பர் கூறினார். இது உண்மையா என தயது செய்து அறிவுரை வழங்கவும்.

ப: நீங்கள் வழமையாக வசிக்கும் *(main residence)* வீட்டின் ஒரு அறையை வாடகைக்கு கொடுத்தால் *"rent a room relief* என்ற அடிப்படையில் முதல் *£4250* வரையிலான வருமானத்திற்கு வரி செலுத்த தேவையில்லை. எனது மிகுதியான *£1750* வருமானத்திற்கு மட்டுமே வரி செலுத்த வேண்டும்.

### சுய தொழிலில் *(Self-employment)*

கே: நான் இங்கிலாந்தில் அடுத்த மாதம் தொடக்கம் *Plumber* ஆக சுய தொழிலை ஆரம்பிக்க இருக்கிறேன். இதனை எவ்வாறு வரி இலாகாவிற்கு *(Tax-office)* அறிவிப்பது என கூறுவீர்களா?

ப: நீங்கள் சுயதொழில் ஆரம்பிப்பதை பற்றி *HMRC (Tax)* இலாகாவிற்கு *5th October* ற்கு முன்னர் *https://online.hmrc.gov.uk/registration/options* என்ற *website* மூலம் தெரியப்படுத்தலாம். அத்துடன் *class* 2 *National Insurance* ஒவ்வொரு கிழமைக்கும் *£2.70* செலுத்த வேண்டும். வருமான வரி தங்களது இலாபத்தை பொறுத்து *January* இலும், *July* இலும் செலுத்த வேண்டும்.

### *Tax-free Investment Juniors*

கே: எனது மகளுக்கு தற்போது 8வயது, அவவின் பெயரில் எவ்வாறு வரி செலுத்தாமல் முதலீடு செய்தால், அதனை பின்னர் 18வயதில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் பொழுது பயன்படுத்தலாம்? வேறு எந்த முதலீட்டு *account* ம் அவவிற்கு இல்லை.

ப: *Junior ISA* ல் ஒவ்வொரு வருடமும் உங்கள் மகளின் பெயரில் இந்த வரி ஆண்டில் *£3720* வரை முதலீடு செய்யலாம். எனவே உதாரணமாக நீங்கள் ஒவ்வொரு வருடமும் இப்பொழுது தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் *£3500* முதலீடு செய்தால் மகளிற்கு 18வயது வந்தவுடன் *£35,000* பணமும் அதற்கான வட்டியும் கிடைக்கும். இதில் கிடைக்கும் வருமானத்திற்கு எந்த விதமான வரியும் செலுத்த தேவையில்லை.

---

காதலியைக் காணோம்...13ம் பக்கத் தொடர்ச்சி.

இலக்கைத் தமிழர்கள் அதிலும் ஆண்கள் நல்ல பொறுமைசாலிகள், எப்படி என்றாலும் மனைவி காதலி சகோதரர், தாய்,இந்த உறவுகள் எல்லாம் மகிழ வேண்டும் என்று அவர்களுக்குப்பிடித்த இந்த சொப்பிங்கிக்கு தமக்குப்பிடிக்காவிட்டாலும் முகத்தை மலர்ச்சியாக வைத்தக்கொண்டு செல் வார்கள்.

சிலசமயங்களில் இந்த உலகமே பெண் களுக்குத்தானதா என்று கூட மனதில் சந்தேகம் எழும். அந்த அளவிற்கு அவர்களுக்குத்தான் யாவும் பரப்பிவிட்டதுபோல் இந்த உலகம் காட்சிதரும்.

சின்னச் சின்ன சண்டைகள் இந்த சொப்பிங் நேரத்தில் வரும். அந்தச் சண்டைக்கு எல்லாம் உங்களுக்கு என்னில் விருப்பமில்லை, அதுதான் உப்படி நடக்கின்றீர்கள், என்று காதலுக்குள் குற்றம் காண்பார்கள்.இந்தச் சண்டைகள் விவாக ரத்துவரை சென்றாலும், வேறு விபரீதங்கள் நடப்பதில்லை.

### காதலியின் சொப்பிங் பைத்தியம் தாங்கமுடியாமல் காதலன் தற்கொலை!

ஆனால் அண்மையில் கடந்த நத்தார் பண்டிகைக் கால சொப்பிங் நேரத்தில், சீனாவில் ஒரு இளைஞன் (Tao Hsiao, 38) வயது நிரம்பியவர் தனது காதலியுடன் கடைக்குள் 5 மணி நேரம் செலவு செய்துள்ளார். பின்பு சப்பாத்துக்


படம் கற்பனை

கடைக்குள் காதலி நுழைந்ததும் காதலன் அட உங்களுக்கு வாழ்கை முழுவதும் அணிய சப்பாத்து நிறையவே இருக்கிறது, இன்னும் வேண்டவேணுமா என்று கேட்டிருக்கிறார். அவ்வளவுதான் சொப்பிங்க்கு வைச்சுது ஆப்பு.

காதலன் கோவித்துக்கொண்டு (Bags) பாக்ஸ் எல்லா வற்றையும் நிலத்தில் வீசி எறிந்துவிட்டு ஏழாம் மாடியில் இருந்து கீழே குதித்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

இது கடந்த மாதம் சீனாவில் இடம் பெற்ற ஒரு துயரச்சம்பவம்.

சொப்பிங் தேவைதான். முதலில் என்ன வாங்க வேண்டும் என்ற ஒரு அட்டவணை மனதுக்குள் இருக்கவேண்டும். சரி எதுவுமே வாங்க வேண்டாம்! அங்கு ஏதும் மனதுக்கு பிடித்ததாக, மலிவாக இருந்தால் வாங்குவோம் என்று ஒரு திடமான முடிவுடன் செல்லவேண்டும். அப்படிச் சென்றாலும் ஒரு நேரகாலம் வேண்டும். ஆண்கள் சரி பெண்கள் சரி நீண்டநேரம் பிடிக்காத ஒன்றைச் செய்ய முடியாது. ஒருவருக்கு பிடித்தது என்பதற்காக இருவரும் நீண்டநேரம் மழையில்கூட நனைய முடியாது. எனவே ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுப்புடன் நேரத்தை பகிரவேண்டும். இல்லை யேல் விளைவுகள் பயங்கரமானதாகவே இருக்கும். ஒருவர் சேர்ந்து வாழ்வதற்கு அதிக காரணங்கள் தேவை. ஆனால் பிரிவதற்கு பெரிதாக ஒரு காரணம் தேவை இல்லை என்றான காலம் இது.

மேலும் வீட்டில் நேரத்தைப்பாத்துக்கொண்டு வய தானவர்களும் , மணிச்சத்தம் எப்ப கேட்கும் என்று மழலைகளும், உங்களுக்காக் காத்திருப்பார்கள். அவர்களும் இந்த மண்ணில் வாழ்பவர்கள்தான் என்ற எண்ணம் வேண்டும்.

ஆண்களே உங்களுக்கு சொப்பிங் நேரத்தில் கோவம் வந்தால் ஒன்று இரண்டு எண்ண வேண்டாம். ஒன்று நீங்கள் கார்வாங்க எடுக்கும் நேரம், தொலைக்காட்சியில், உதைபந்தாட்டம் கிரிக்கெட் தனித்துப்பார்க்கும் நேரம். கணனிக்குள் முழ்கிவடியும் நேரம், இவற்றை எண்ணிப்பார்தால் கோபம் சற்று தணிய வாய்ப்புண்டாகும்.

மொத்தத்தில் சொப்பிங்கை பொழுதுபோக்காக்கி வாழ்கையைச் சுதப்பாதீர்கள்.




vettimaniy-London
To advertise here call
Sanje: 078 24 61 83 83
vettimaniy@hotmail.com

அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!




## வித்தியாசங்களே வலிமையானவை !

சின்ன வயதில் நிறைய பாட்டிக் கதைகள் கேட்டிருப்போம். அரசகுமாரியின் உயிரை ஏழு மலை, ஏழு கடல் தாண்டி ஒரு குகையில் கிளியின் உடலில் ஒளித்து வைத்திருப்பான் அரக்கன். அந்த அரக்கனைக் கொன்று இளவரசியை மீட்பான் இளவரசன். பிரம்ம பிரயர்த்தனத்துடன் இளவரசன் நடத்தும் வீர தீரப் போராட்டங்கள் மெய் சிலிர்க்க வைக்கும். குடும்ப வாழ்க்கையும் இத்தகைய ஒரு மிகப்பெரிய சவாலான, கஷ்டமான, போராட்டமான விஷயம் என்று தான் பலரும் நினைக்கிறார்கள். ஆனால் உண்மை அப்படியல்ல. பெரிய பெரிய போர்களிலல்ல, சின்னச் சின்ன விஷயங்களில் தான் குடும்ப வாழ்க்கையின் வெற்றியின் ரகசியம் இருக்கிறது.

ஒரு மிகப்பெரிய தேரின் வலிமை சின்ன அச்சாணியில் இருக்கிறது. இந்த காலத்தில் தேரும் அச்சாணியும் மறந்து போயிருக்கும். வேண்டுமானால் ஒரு காரின் பயணம் அதன் உள்ளே உலவும் சில துளி பெட்ரோலில் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம். என்ன தான் ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்து போஸ் ஸ்பீக்கர் வாங்கி மாட்டினாலும், பெட்ரோல் இல்லாத வண்டி ஓடாது. எனவே இது சின்ன விஷயம் தானே, முதல்ல பெரிய விஷயங்களைக் கவனிப்போம் என்று இருந்து விடக் கூடாது. அடிப்படை விஷயங்களில் கவனம் தேவை !

ரசனையும் அப்படிப்பட்ட ஒரு சின்ன விஷயம் தான். ஆனா குடும்பத்தில் எத்தனை பெரிய கீறலை வேண்டுமானாலும் அது உருவாக்கிவிடும். ரசனைகளை மதியுங்கள், இது முதல் தேவை ! அதாவது உங்க மனைவிக்கு ஓவியத்துல ஆர்வம் ன்னு வெச்சுக்கோங்க, அதை முதலில் மதியுங்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரசனை இருக்கும். உங்களுக்கு ஓவியம்ன்னாலே அலர்ஜியா இருக்கலாம். அதுக்காக உங்க மனைவிகிட்டே போய், இதெல்லாம் ஒரு ரசனையா ?  வெளங்கினாப்ல தான் என்றெல்லாம் எரிச்சல் மூட்டாதீர்கள்.

அதே போல தான் உங்கள் கணவருக்கு ஒருவேளை சிக்ஸ் பேக்ஸ் மோகம் இருக்கலாம். அதுக்காக டெய்லி காலையிலேயே தெருத்தெருவா ஓடிட்டே இருக்காரு, இல்லேன்னா ஜிம்ல போய் ஆஜராயிடராருன்னா அதை மதியுங்கள். ஆமா இவரு சிக்ஸ் பேக்ஸ் வெச்சா அப்படியே காசு கொட்டும் பாருங்க, சிஸ்க்த் சென்ஸை யூஸ் பண்ணுங்கப்பா என கடுப்படிக்காதீங்க. ஒவ்வொருவருக்குமான விருப்பங்களும், எதிர்பார்ப்புகளும் தனித்தனியானவை. தோப்பிலே இருந்தாலும் ஒவ்வொரு மரமும் தனி மரம் தான்னு சொல்லுவாங்க இல்லையா அது மாதிரி. அடுத்தவர் ரசனையை மதிப்பது முதல் தேவை.

இரண்டாவது, அந்த ரசனைக்கு உங்களால் முடிந்த அளவுக்கு ஊக்கம் ஊட்டுவது. ஓவியக்கார மனைவிக்கு நீங்கள் ஓவியம் சார்ந்த ஏதாவது பரிசுகள் வாங்கிக் கொடுக்கலாம். பொருட்கள் வாங்கிக் குடுக்கலாம். ”ஹேய்... அடுத்த வாரம் ஒரு ஓவியக் கண்காட்சி நடக்குது. சேலத்துல. டீட்டெயில்ஸ் எல்லாம் கேட்டு வெச்சுட்டேன். நாம ரெண்டு பேரும் போயிட்டு வரலாமே” என்று எதிர்பாராத இன்ப அதிர்ச்சி கொடுங்கள்.

புரியாத ஓவியம் பற்றி உங்கள் மனைவி ஒரு லெக்சர் அடித்தால் பொறுமையாய் கேளுங்கள். காதுல ரத்தம் வருது கொஞ்சம் வாயை மூடறியா என சொல்லாதீங்க. ஒவ்வொருவருக்கும் அவரவர் ரசனைகளைப்  பகிர்ந்து கொள்வதில் அலாதி இன்பம் இருக்கும் என்பது சர்வதேச உண்மை.

கொஞ்சம் ரிவர்ஸ் கியர் அடித்து உங்களுக்குத் திருமணமான அந்த ஹனிமூன் காலத்துக்குப் போய்ப் பாருங்கள். அல்லது திகட்டத் திகட்டக் காதலித்த காலத்துக்குப் போய்ப் பாருங்கள். ”ம்ம்.. அப்புறம்” என்பதையே மூன்று மணி நேரம் மெய்மறந்து கேட்டிருப்பீங்க தானே ? என்ன சமையல், என்ன சாப்பாடு, காலைல பல் விளக்கிட்டியா ? இட்லிக்கு சட்னியா சாம்பாரா என்றெல்லாம் போனில் பேலன்ஸ் தீர்ந்து, அப்படியே பேட்டரியும் தீரும் வரை பேசித் தீர்த்திருப்பீர்கள் தானே ! அப்போ காதுல ரத்தம் வரலையா ? சோ, கொஞ்சம் ரிலாக்ஸ்! அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்பதற்குத் தேவை காதோ, பொறுமையோ அல்ல, அன்பு !

என்ன தான் கட்டம் கட்டி, தாயம் உருட்டி, குண்ட்லியில் பொருத்தம் பார்த்தாலும் ரசனைப் பொருத்தம் பெரும்பாலானவர்களுக்கு செட் ஆகாது. அப்படிப்பட்ட வெவ்வேறு ரசனைகளுடைய இரண்டு பேர் சேர்ந்து வாழும் இடம் தான் குடும்பம். என்னோட ரசனைதான் உனக்கு இருக்கணும், அல்லது என்னோட ரசனைகள் தான் உனக்கும் பிடிக்கணும் என ஒருவர் முரண்டு பிடித்தால் குடும்பத்தில் சிக்கலின் கண்ணி வெடி வெச்சாச்சுன்னு அர்த்தம். ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயங்களிலும் இருவரும் வேறுபடலாம், அடுத்தவர் ரசனைகளை மதிக்கும்போது இருவருமே ஒன்றித்துப் போய்விடுவது வெகு சாத்தியம். இரயில் தண்டவாளத்தின் இரண்டு பாளங்களைப் போல ! முட்டிக் கொள்ளாமல் மோதிக்கொள்ளாமல், அதே நேரம் இணைந்து பயணிப்பதே வாழ்வின் வெற்றி.

ஒரு டி.வி பாப்பதில் இருந்தே அந்த ரசனை வேறுபாட்டை நீங்க பாப்பீங்க. அஞ்சு நாள் டெஸ்ட் மேச்சை ஃபெவிகால் போட்டு ஒட்டினமாதிரி பாத்துட்டே இருப்பீங்க, ஏங்க அந்த தென்றல் சீரியலை கொஞ்சம் போடுங்களேன் ன்னு மனைவி கேட்டா, ”ஆமா.. இந்த சீரியல்ஸ் தான் சீரியல் கில்லர்ஸ். இதனாலதான் குடும்பங்கள் கெட்டுப் போவுது. கலாச்சாரம் பாழாகுது. ” என சட்டென ரிமோட்டையே மைக்கா மாற்றி பேச ஆரம்பிக்காதீங்க. சரி நீ பாரு என புன்னகையுடன் ரிமோட் கொடுப்பதில் இருக்கிறது உங்கள் அன்பின் வெளிப்பாடு.

புடிச்ச நடிகன், புடிச்ச நடிகை, புடிச்ச பாடல், புடிச்ச எழுத்தாளர், புடிச்ச நிறம், புடிச்ச டிரஸ் என இந்த புடிச்ச விஷயங்கள் ரெண்டு பேருக்கும் ஒண்ணா இருக்கணும்ன்னு அவசியமே இல்லை. ஆனால் அடுத்தவங்களுக்குப் புடிச்ச விஷயத்தை ஓவரா விமர்சிக்காமல் இருக்கப் பழகணும். அஜித் - விஜய், ரஹ்மான் - இளையராஜா என எதிர் எதிர் ரசனைகள் வீட்ல இருக்கிறது ரொம்ப ரொம்ப சகஜம், ஆனால் அதெல்லாம் தனிமனித சின்னச் சின்ன விருப்பங்கள், ரசனைகள் என்று புரிந்து கொள்ளவேண்டும்.

ஒருவேளை ஒரு ரசனை குடும்பத்தின் நிம்மதியையோ, எதிர்காலத்தையோ பாதிக்குமெனில் அதை கணவன் மனைவி இருவரும் பொறுமையாய், தகவல்களுடன் விவாதித்துக் கொள்வதே நல்லது. உதாரணமா, ”திருடுறது எனக்கு ஒரு ஹாபி” என கணவன் சொன்னால் ”அப்படியா.. சூப்பர், வாங்க திருடலாம்” என மனைவி சொல்லக் கூடாது ! அத்தகைய விபரீத சூழல்கள் தவிர்த்த விஷயங்களில் இருவருமே வேறுபட்ட சிந்தனைகளுடன் இணைந்து பயணிக்க வேண்டியதும் அவசியம்.

அடுத்த நபருடைய விருப்பங்கள், வேலைகள், பணிகள், செயல்கள், ரசனைகள் குறித்துப் பேசுவது, விசாரிப்பது எல்லாம் ரொம்ப நல்ல விஷயம். ”உன்னோட டிராயிங் ரொம்ப நல்லா இருந்துச்சு. போன வாரம் ஒரு டிராயிங் பண்ணிட்டிருந்தியே என்னாச்சு” போன்ற சின்னச் சின்ன விசாரிப்புகள் உறவை வலுப்படுத்தும். ஓ, நீ மியூசிக் போட்டுட்டு இருக்கியா, நான் டி வி வால்யூம் கம்மி பண்ணிக்கிறேன் என்பன போன்ற கரிசனைகள் முக்கியம்.

கணவனுக்கும் மனைவிக்கும் ஒரே போன்ற ரசனைகள் அமைந்தால் சிக்கல்கள் பெருமளவில் குறைந்து விடும். ஆனால் அது அமைவது கடினம். அப்படியே அமைந்தாலும் சிக்கல்கள் எழாது என்று சொல்வதற்கில்லை.  ”நீ என்ன கவிதை எழுதியிருக்கே, நான் எழுதினது தான் கவிதை” என கவித் தம்பதியர் சண்டை போட சாத்தியம் இருக்கு தானே !

**தொடர்ச்சி 17ம் பக்கம்...**


vettimaniy-London

To advertise here call
Sanje: 078 24 61 83 83

vettimaniy@hotmail.com

## காதல் விழாக்களை முதலில்
# முன்னின்று நடத்தியது தமிழ் இனமே!

**காதல் என்பது கடலைத் தேடும் நதியைப் போன்றது. காமம் என்பது நதியைத் தேடிக் கரைதாண்டி ஓடும் கடலைப் போன்றது.**



காதல் எனும் வார்த்தைக்கு இருக்கும் வசீகரம் வேறெந்த வார்த்தைக்கும் இல்லை. மதங்களின் மதில் சுவர்களோ, சாதிகளின் சதுப்பு நிலங்களோ, இனங்களின் தினவுகளோ, மொழிகளின் வாள்வீச் சுகளோ காதலை வெட்டி எறிய முடிவதில்லை. வெட்டி எறிய காதல் என்பது காய்கறியல்ல, அது காற்று ! காற்றை வெட்டித் துண்டுகளாக்கும் கத்தியை மானுடம் இன்னும் கண்டு பிடிக்கவில்லை !

உலகின் எந்த இலக்கியங்களும் தோன்றும் முன் தமிழில் காதல் தோன்றிவிட்டது. பண்டைய இலக்கியங்களில் காதல் ஏக்கங்களாலும், தீண்டல்களாலும், வீரத்தின் சாரல்களாலும் நனைந்து கிடந்தது. அறத்தையும், மறத்தையும் உயிரெனக் கொண்டிருந்த தமிழரின் வாழ்க்கை காதல் எனும் சரட்டினால் கட்டிப் பிணைக்கப்பட்டிருந்தது ! அதைத் தான் அகம் பாடுகிறது.

இன்றைய காதலர்கள் தங்கள் காதலியரின் கண்களை டிஜிடல் ஓவியம் என்கின்றனர். சற்றே முந்தைய காதலர்கள் கண்களில் பூக்களைப் பார்த்தார்கள், மீன்களைப் பார்த்தார்கள். அதற்கும் முந்தைய காலத்தில் வேலைப் பார்த்தார்கள், வில்லைப் பார்த்தார்கள். எப்படியோ காலம் காலமாக பெண்களின் கண்களை அவர்கள் பார்க்கத் தவறவில்லை என்பது மட்டும் நமக்குப் புரிகிறது.
காதலின் கண்கள் புதைகுழிகள். அந்தக் கண்களில் இதயம் புதையுண்டு போகிறது. புதையுண்ட அந்தக் கண்களிலிருந்து நேரடியாக இதயத்தில் இறங்கிக் கொள்கின்றனர் காதலர்கள். சிலருக்கு அந்தக் கண்கள் பனிமலைகளாகின்றன, சிலருக்கு எரிமலைகளாகின்றன, சிலருக்கு







ஆழ்கடலாகவும், சிலருக்கு தற்கொலை முனைகளாகவும் காட்சியளிக்கின்றன. எப்படியோ, காலம் காலமாக அந்தக் கண்களில் குதிக்க மட்டும் யாரும் தயங்குவதேயில்லை.
இன்றைக்கு காதல் என்பது ஒரு பொதுப்பெயராகிவிட்டது. அந்தக் காதல் எனும் உன்னதத்தின் மேலும் கீழும் ஒரு அடைமொழியை அமரவைத்து காதலின் அமரத்துவத்தை கேலிக்குரியதாக்கி விட்டது சமூகம். கள்ளக் காதல், போலிக் காதல், திருட்டுக் காதல் என்பதெல்லாம் காதலுக்கான அவமானங்கள். மோகத்தின் முனகல்களையும், மெத்தைத் தாகத்தின் பானங்களையும் காதல் எனும் குடுவைக்குள் அடைப்பதில் நியாயம் இல்லை என்பதை உண்மைக் காதலர்கள் ஒத்துக் கொள்வார்கள்.
உண்மைக் காதலில் காமத்தின் சாரல் உண்டு. ஆனால் அது அடைமழையாக மாறிக் கரைகளைக் கரைத்து விடுவதில்லை. காதல் என்பது கடலைத் தேடும் நதியைப் போன்றது. காமம் என்பது நதியைத் தேடிக் கரைதாண்டி ஓடும் கடலைப் போன்றது. நதி கடலில் கலப்பது இயல்பு, அது இரண்டறக் கலத்தல். கடல் கரைதாண்டுவது அழிவின் அழைப்பு. சுனாமியின் மிரட்டல்.

உண்மையான காதல் எப்போதுமே காதலர்களை வெற்றிகளை நோக்கியே பயணிக்க வைக்கும். வெற்றித் திலகமிட்டு போர்களம் அனுப்பும் சங்கக் காதலியர் அம்புகளுக்குள் தங்கள் அன்பைத் தோய்த்து அனுப்புகிறார்கள். அந்த ஊக்கம் அவர்களுக்கு புறமுதுகிடாத புஜங்களைப் பரிசளிக்கிறது. காதலியருக்காக தீயவற்றை விட்டு விடுவதும், நல்லவற்றைப் பற்றிக் கொள்வதுமாக உண்மைக் காதல் வசீகரிக்கும்.

தமிழரின் வாழ்வோடும், அடையாளத்தோடும், கலாச்சாரத்தோடும் காதல் செம்புலப் பெயல்நீர் போல் கலந்தே இருந்தது என்பதே வரலாறு. காதல் ரசம் சொட்டும் சிலைகளும், இலக்கியங்களும் அதன் சாட்சிகள். வேலன்டைன்ஸ் டே என்பது மேனாட்டு இறக்குமதி, காதல் விழா என்பது போலித்தனம் என கூச்சலிடுபவர்கள் உண்மையில் தமிழரின் வரலாறு அறியாதவர்கள்.

காதல் விழாவை இருபத்து எட்டு நாட்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடிய மன்னன் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன். காமன் விழா என அவன் அந்த விழாவை காதலர்களுக்காகக் கொண்டாடினான். உலகின் முதல் காதல் விழா இதுவாகத் தான் இருக்க வேண்டும்.

**தொடர்ச்சி 18ம் பக்கம்.**

---

**வித்தியாசங்களே வலிமையானவை !** **16ம் பக்கத் தொடர்ச்சி....**



ஒருவருடைய விருப்பத்தைப் பற்றி இன்னொருவர் பேசும்போது அது உப்பு சப்பற்ற விசாரிப்பாய் இல்லாமல் ஒரு நல்ல ஆரோக்கியமான விவாதம் அல்லது விமர்சனமாய் இருப்பது ரொம்ப நல்லது. "நீ குடுத்த கா்.பி நல்லா இருந்துச்சு என்று சொல்லும் முன்னாடி, குடிச்சது காபியா டீயா என்பது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணும்.

ஓவியத்துல எனக்குத் தெரிஞ்சு மாளவிகா ஷருகாய் தான் பெஸ்ட் என்று சொல்லும் முன் மாளவிகா ஓவியல் அல்ல நாட்டியம் சார்ந்தவர் என்பதாவது தெரிஞ்சிருந்தா நல்லது. கொஞ்சம் கொஞ்சம் விஷயங்களைப் புரிந்துகொண்டு, தெரிந்து கொண்டு பேசுவது உறவின் இறுக்கத்தை நிச்சயம் அதிகரிக்கும். ரசனைகள் தனித்தனியே இருந்தாலும் அவற்றை இருவருமே பகிர்ந்து கொள்ளும்போதும், அதைக்ககுறித்து சிலாகிக்கும் போதும், அது குறித்துப் பேசும்போதும் கணவன் மனைவி உரையாடல் அதிகரிக்கும். அது உறவை வலுப்படுத்தும். இன்னும் சொல்லப்போனால் வேறு வேறு ரசனைகள் உங்களை ரொம்பவே இறுக்கமாக்க உதவும் ! உங்கள் தனிப்பட்ட ஹாபிக்கள் உங்களுடைய குடும்ப நேரத்தை திருடிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்களுடைய கடமை !ஒருவேளை கணவன் மனைவிக்கு ஆன்மீகத்தில் கூட வேறுபட்ட சிந்தனைகள் நம்பிக்கைகள் இருக்கலாம். அது உங்களுக்கு கொஞ்சம் கூட உடன்பாடற்ற ஒரு விஷயமாய் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழல்களில் அந்த விஷயத்தைக் குறித்து ஆக்ரோஷமாய் விவாதிப்பது, குத்திப் பேசிக் காயப்படுத்துவது போன்றவற்றை நிச்சயம் விலக்க வேண்டும். உங்களுடைய வாழ்க்கை உங்களுடைய ஆன்மீகத்தின் வெளிச்சத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை மட்டும் மனதில் கொள்ளுங்கள்.
கிரிக்கெட்டில் ஒரு அணி தோற்கும்போதெல்லாம் கேப்டனோ, பயிற்சியாளரோ ஒரு வாக்கியத்தைச் சொல்வார்கள். "வி ஆர் கோயிங் டு ்.போகஸ் ஆன் த பேஸிக்ஸ்" !! எளிய உண்மை அது ! அடிப்படையான சின்னச் சின்ன விஷயங்களில் கவனம் செலுத்துவது தான் அணியின் வெற்றிக்கும், குடும்பத்தின் வெற்றிக்கும் தேவை. அவை இல்லாமல் பெரிய பெரிய விஷயங்கள் சாத்தியமில்லை. தொலைவில் இருக்கும் சிகரத்தை அடைய, பாதத்துக்கு முன்னால் இருக்கும் பள்ளத்தை முதலில் சரி செய்ய வேண்டும். காலில் முள் தைத்தவன் பாதமெங்கும் வலி என்பான். முள்ளை அகற்றிவிட்டால் வலி நீங்கி வழி பிறக்கும்.
சுருக்கமாக, தம்பதியரின் ரசனை என்பது தனிப்பட்ட விஷயம். அதை மதியுங்கள். ஊக்குவியுங்கள். அதைப் பற்றிப் பேசுங்கள். அது குறித்த ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உறவு வலுப்படும் ( தொடரும்... )

vettimaniy-London

To advertise here call
Sanje: 078 24 61 83 83

vettimaniy@hotmail.com

**காதல் விழாக்களை முதலில் ....**

17ம் பக்கத் தொடர்ச்சி....



காதல் விழாவை நடத்துவதற்கு மன்னன் கட்டளைகளைப் பிறப்பிப்பதை மணிமேகலையும் கூறுகிறது. மக்கள் காதலில் களித்திருக்கட்டும், பிரிவினைகள் மறந்து ஆனந்தமாய் இருக்கட்டும், நல்ல பூங்காக்களில் அவர்கள் இருக்கட்டும், காதலர்க்கு இடையூறு வராமல் இருக்க காவல் ஏற்பாடுகளையும் செய்யுங்கள் என்கிறார் மன்னன்.

இப்படி காதல் விழாக்களை முதலில் முன்னின்று நடத்தியது தமிழ் இனமே என்பதை காதலுடன் சொல்லும் அத்தனை தகுதியும் நமக்கு உண்டு. ஆனால் அது ஏதோ இறக்குமதி விழா என்பது போல சாயம் பூசுபவர்களையும், அதை வியாபார உத்திக்காகப் பயன்படுத்தும் வணிக மூளைகளையும் காதலர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

காதல் என்பது காற்றைப் போன்றது, அது எல்லா நுரையீரல்களின் கதவுகளையும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தட்டுகிறது. சிலர் அந்தச் சத்தத்தைக் கேட்பதில்லை. சிலர் கேட்டாலும் நிராகரித்து விடுகிறார்கள். சிலர் கேட்காத சத்தத்தைக் கூட கேட்டதாய்க் கருதிக் கொள்கிறார்கள். சிலர் அந்த மெல்லிய சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்து காதலை உள்ளிழுக்கிறார்கள். எது எப்படியோ காற்று நுரையீரலையும், காதல் இதயங்களையும் தட்டுவதை நிறுத்துவதே இல்லை.

காதல் என்பது பூவைப் போன்றது. காதலியரை பூவோடு ஒப்பீடு செய்யாத காதலர்கள் இருக்க மாட்டார்கள். மலரினும் மெல்லிய இதழ்கள் காதலியின் உதடுகள் என்பவர்களே காதலில் கரைகிறார்கள். பூக்கள் பூக்காமல் இருப்பதில்லை. சில பூக்கள் பூஜையறைக்குச் செல்கின்றன, சில கூந்தல்களில் குடியேறுகின்றன, சில கவனிக்கப்படாமல் கருகிவிடுகின்றன. எது எப்படியோ பூக்கள் பூப்பதை நிறுத்துவதேயில்லை.

காற்றின் வெற்றி அதன் இருப்பில் தான் இருக்கிறது. அதை நாம் பார்க்கவில்லை என்பதாலோ, சுவாசிக்கவில்லை என்பதாலோ அது தோல்வியடைந்ததாய் அர்த்தமில்லை. பூவின் வெற்றி பூப்பதில் இருக்கிறது. பறிக்கவில்லை என்பதாலோ, சூடவில்லை என்பதாலோ பூ தோற்று விட்டதாய் அர்த்தமில்லை ! அது தான் காதலின் சிறப்பு ! காதல் தோன்றுவதே காதலின் வெற்றி !

காற்றின் அலைகளில் இசையாய்த் திரியும் ஒலி இழைகளை வானொலியின் சரியான அலைவரிசை இழுத்து எடுப்பது போல, காதலின் வாசனையை சரியான நாசிகள் நுகர்ந்து கொண்கின்றன. அவை பின்னர் கரம் கோத்து, உயிர்கோத்துக் கொள்கின்றன.

காதலியுங்கள் ! காதல் என்பது ஒரு நந்தவனம் போன்றது. காதலில் நடப்பவர்கள் நந்தவனத்தில் நடக்கிறார்கள். ஒரு முறை நடந்த திருப்தி இதயத்தின் தாழ்வாரங்களில் எப்போதும் சிறகடித்துக் கொண்டே இருக்கும். அது வெற்றி பெற்றாலும் சரி, தோல்வியடைந்தாலும் சரி.

காதலியுங்கள் ! காதல் என்பது வழியில் தென்படும் பூக்களையெல்லாம் முட்டிச் செல்லும் வண்டு அல்ல. ஒற்றைப் பூவை மட்டுமே தாங்கிப் பிடிக்கும் தண்டு. நீயின்றி நானில்லை எனும் நிலமையில் இணைந்திருக்கும் நிலை.

காதலியுங்கள் ! காதல் உங்களை உங்களுக்கு அறிமுகம் செய்யும். உங்கள் உயிர் உங்கள் உடலை விட்டு வெளியேறி உங்களை இன்னோர் உயிராய் மாற்றி வைக்கும். கூடு விட்டுக் கூடு பாயும் வித்தை இந்தக் காதலில் மட்டுமே சாத்தியம். நீங்கள் யார் என்பதையும் உங்கள் பலங்கள், பலவீனங்கள் அனைத்தையும் அதுதான் உங்களுக்குக் கற்றுத் தரும்.

காதலியுங்கள் ! காதல் வாழ்க்கையை அழகாக்கும். வாழ்க்கையை அர்த்தப்படுத்தும். வாழ்க்கையை வலுவாக்கும். அது பாதங்களுக்குக் கீழே பனித்துளியாக உங்கள் பயணங்களை கவிதையாக்கும். வெட்கத்தின் மூச்சுகளுடன் கனவுகளை காவியமாக்கும்.

காதலியுங்கள். காதல் என்றால் என்ன என்பதை அறிந்தபின் காதலியுங்கள். சீண்டலின் சிற்றின்பங்களும், மோகத்தின் முனகல்களும், மெத்தைத் தேடலின் முனைப்புகளும், விலக்கப்பட்ட கனிகளின் சுவைகளும் காதல் என கற்பித்துக் கொள்ளாதீர்கள்.

அரளிப்பூவுக்கு மல்லி என பெயர்சூட்டிக் கொள்ளலாம். ஆனால், அரளிப்பூவில் மல்லியின் வாசத்தை நுகர்வது இயலாது.

**காதலிப்போருக்கும், காதலிக்கப் படுவோருக்கும், இனிய காதல் வாழ்த்துகள்.**






ஓம் பராசக்தி ஜோதிடம்

ஆலோசனை மற்றும் தீர்வுகள்

மலயாளபகவதி பூஜாஜ்
உலக புகழ் பெற்ற இந்தியா ஜோதிடர்
பண்டிதர் சங்கர்

Astrology Predication is god gift,
passed down from generation to generation
Meet me once & change your future

30 வருட அனுபவம் பெற்றவர்

வியாபாரங்கள் - எதிரிகள்
உடல்நிலை - வேலை
குழந்தையின்மை - திருமணம்
பணம் - குடிபோதை
காதல் - விவாகரத்து
வழக்குகள் கண் திருஷ்டி
குடும்ப ஒற்றுமை
படிப்பு வாகனப் பொருத்தம்
மற்றும் பல.....பிரச்சனைகளுக்கு



Mobile
0174 6400 418,
0151 71 200 666

Rheinische str 98
44 137 Dortmund,
Germany.


இவர் அமெரிக்கா, கனடா, லண்டன், நியூசிலாண்ட், சிங்கப்பூர் , மலேசியா முதல் தடவையாக ஜேர்மனியில் சந்திக்கவுள்ளார்.

vettimaniy-London

To advertise here call
Sanje: 078 24 61 83 83

vettimaniy@hotmail.com

# லவ் லெட்டர்



சுருதி

"ஸ்ரொப்....ஸ்ரொப்" என்று சத்தமிட்டபடியே வேலிமறைவில் இருந்து சைக்கிளுக்கு முன்னால் குதித்தான் முகுந்தன்.
ஏற்கனவே கால் எட்டாமல் நொண்டி நொண்டி ஓடி வந்த உமா, செய்வதறியாது கால்களை நிலத்தினுள் ஊன்றிஇ கொஞ்ச தூரம் சைக்கிளுடன் இழுபட்டு புழுதியையும் கிழப்பி மூச்சிரைத்து நின்றாள்.
தெருவழியே போன நாய் ஒன்று சற்று மிரண்டு, நின்ற இடத்திலே நின்று அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தது.
"உமா! நான் உன்னை விரும்புகிறன். ஐ லவ் யு."
முகுந்தனை மேலிருந்து கீழ்வரை உற்றுப் பார்த்துஇ அதிசயித்து நாணித் தலை குனிந்தாள் உமா.
"என்ன ஒண்டும் பதில் சொல்லேல்ல."
"நான் ஸ்கூலுக்குப் போகவேணும். படிக்கவேணும்."
"ஆர் வேண்டாமெண்ட்து. படி. நல்லாப் படி!! போகேக்கை இதையும் எடுத்துக் கொண்டுபோய்ப் படி."
"என்னத்தை?"
"இந்த லெட்டரை!"
"அப்பா ஏசுவார்!"
அங்கு நின்ற பத்து நிமிடத்தில்இ குறைந்தது பத்துத் தடவைகளாவது 'நான் ஸ்கூலுக்குப் போகவேணும். படிக்கவேணும்' என்று சொல்லிவிட்டாள் உமா.
கொஞ்ச நேரம் ஆளை ஆள் பார்த்தபடி இரண்டுபேரும் வியப்பில் நின்றார்கள்.
மூச்சுமுட்டும் தூரத்தில் நின்ற முகுந்தன் "மௌனம் சம்மதமா?" என்றான். அவனை ஏமாற்றிவிட்டு ஓட்டமெடுத்தாள் உமா.
சட்டைப் பொக்கற்றுக்குள் இருந்த கடித்த்தை எடுத்து மறைவாக புத்தகத்தினுள் செருகினான். மறைவில் சாத்தியிருந்த்து சைக்கிள். தூக்கி ஒரு மிதி மிதித்தான். சடசடவென 'றிம்' ஓசை எழுப்பியது. குனிந்து பார்க்க இரண்டு சில்லுகளும் சுத்தமாக்க் காற்றுப் போயிருந்தது. 'வால்வ் கட்டைகளை' யாரோ பிடிங்கி எறிந்திருந்தார்கள். வாய்க்கு வந்தபடி திட்டியவாறே சைக்கிளை உருட்டிக்கொண்டு சைக்கிள் கடையடிக்குப் போனான். சைக்கிள்கடை இராசரத்தினம் அந்தநேரம் பார்த்து சாப்பிடப் போயிருந்தார்.
சைக்கிள்கடைக்கு முன்னால் இருந்த வாங்கில்இ கால்களை ஒன்றன் மேல் ஒன்றாகப் போட்டுஇ ஒரு பாதத்தை 'கிடுகிடு'வென்று ஆட்டிக்கொண்டிருந்தான் முகுந்தன். உள்ளுக்குள் சிரிப்பதும்இ சிரித்த சிரிப்பு உள்ளிருந்து வெளியே வந்து உதட்டில் பொசிவதுமாக இருந்தது. முகுந்தனுக்குத் தெரியாமல் வந்து பக்கத்திலிருந்த கதிரையில் அமர்ந்தான் நாதன். நாதன் அவனது பள்ளிநண்பன்.
"நான் போக வேணும். ஸ்கூலுக்குப் போக வேணும்" முகுந்தனது காதிற்குள் குனிந்துஇ காதடைக்கும் வண்ணம் கத்தினான் நாதன். திடுக்கிட்டு துள்ளி எழுந்தான் முகுந்தன்.
"ஆர் கேர்ள்?"
"ஆ! நாதன் அண்ணையா? என்ன கேட்டனியள்?"
"ஆர் கேர்ள் எண்டு கேட்டனான்"
"அமலாபால்"
"நீ பாத்த பட்த்தின்ர கதாநாயகியை நான் கேட்கேல்ல!"
"அப்ப?"
"உன்ரை சைக்கிள் காத்துப் போய் சைக்கிள்கடையிலை நிக்குது. ஞாபகம் இருக்கட்டும்."
"அண்ணை! நீங்களா சைக்கிள் காத்தைப் பிடுங்கிவிட்டது."
"இந்தா பிடி. ரண்டு வால்வ் கட்ட்டைகளையும். இப்ப சொல்லு?"
"சந்தைக்கு முன்னாலை மதில் போட்ட வீடு"
"அட நம சிவராசா வாத்தியின்ர மகள் உம்மா. அந்தாளைத் தெரியும்தானே! ஸ்கூலிலை பிள்ளையளை கமக்கட்டுக்கை தூக்கி வைச்சுக்கொண்டு விளாசுமே! எத்தனை பிள்ளையள் தூக்க முதலிலேயே 'சூ' இருந்திருக்கும். லெட்டர் வாங்கமாட்டன் எண்டிட்டாள் போல?"
"ஓம். அப்பா ஏசுவாராம்."
"அந்த லெட்டரைத் தா பாப்பம்."
"ஒண்டுமில்லை. வெறும் பேப்பர். வெறும்பேப்பரை என்வலப்புக்குள்லை வைச்சுக் கொண்டு திரியுறன். ஒருக்கா இதை வாங்கிட்டாஇ பிறகு சுவாரசியமாக எழுதிக் குடுக்கலாம் எண்டிருக்கிறன்."
நாதன் தன் கையிலிருந்த சீலைப்பையிற்குள் கையை நுழைத்தான். ஒரு பேப்பர் அங்கங்கே அண்டர்லைன் போட சில கலர்ப் பேனாக்கள்இ என்வலப் என்பவை வெளியே வந்தன. உமாவைப்பற்றியும் அவள் குடும்பம் பற்றியதுமான தகவல்களை முகுந்தனிடமிருந்து சேகரித்தான். கற்பனைக் குதிரையைத் தட்டிவிட கடிதம் வந்தது.
"பிளையார்சுழியைப் போட்டிட்டுஇ அன்புள்ள உமாக்குட்டி எண்டு எழுது"
"குட்டி இல்லை அண்ணை குஞ்சு"
'குஞ்சோ பிஞ்சோ எழுது. நானும் நீயும் நலமாக இருக்க விநாயகர் அருளை வேண்டிக் கொள்கின்றேன்."
"என்ன அண்ணை பற்றனையே மாத்திறியள்?"
"இப்பிடி ஒவ்வொரு வசனத்துக்கும் இடக்கு முடக்காக குறுக்குக் கேள்வி கேட்டா கடிதம் இண்டைக்கு கட்டுக்குச் சேராது"
"இனிக் கேட்கமாட்டன். நீங்கள் சொல்லுங்கோ"
"நான் போட்ட கடித்த்துக்குஇ நீங்கள் பதில் போடுவியள் எண்டு நான் கனவிலும் நினைக்கேல்லை. திகைத்துப் போனேன். மிக்க நன்றி."
முகுந்தனும் திகைத்துப் போனான். அவன் எங்கே உமாவிற்குக் கடிதம் போட்டான்? கடிதம் எழுதுவதைவிட்டு நாதனை நிமிர்ந்து பார்த்தான்.
"சரி தொடர்ந்து எழுது. மேலும் இரண்டு தங்கைகள்இ தம்பிஇ ஆஸ்மா நோயுடன் போராடும் அம்மா இவர்களைப் பற்றியெல்லாம் எழுதியிருந்தீர். எனக்கும் கவலையாகத்தான் உள்ளது. ஒன்று சொல்வேன். இனிவரும் காலங்களில் பெண்களுக்குஇ கணவனைக் காட்டிலும் கல்விதான் முக்கியம் என்பேன்."
"அண்ணை... நீங்கள் கெதிகெதியாச் சொல்லுறியள்."
"சரளமா வரேக்கை அப்பிடித்தான் சொல்லுவன். நீதான் கிரகிச்சு எழுதவேணும்."
"அப்பா பொல்லாதவர்தான். நானும் அறிவேன். ஊரிலுள்ள பள்ளிக்கூடப் பிள்ளைகள் தோள்பட்டையைத் தூக்கிக் கொண்டு திரிவதை நானும் பார்த்திருக்கின்றேன்."

தொடர்ச்சி 20 ம் பக்கம்






அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!

**லவ் லெட்டர்...** 19ம் பக்கத் தொடர்ச்சி...



“இனிக்காணும் அண்ணை. நல்லதா ஒரு முடிப்பு முடியுங்கோ!”

“வீட்டிற்குக் கடிதம் போடவேண்டாம் என்று எழுதியிருந்தியள். நேரிலை வாங்கியிருந்தால் ஏன் இந்த வில்லங்கம்? இப்ப முத்திரைச் செலவும். இனிமேல் முயற்சி செய்கின்றேன். நீங்கள் போட்ட கடிதத்தை ஆயுள் உள்ளவரை பத்திரமாக வைத்திருப்பேன். படிப்போம். சொந்தக்காலில் நிற்போம். சொந்தபந்தங்களைக் காப்பாற்றுவோம். அதுக்குப் பிறகுதான் எல்லாம். அன்பு நண்பன்இ முகுந்தன்”

“நாதன் அண்ணை... ஒரு 'டவுட்'. வாத்தியின்ரை கையிலை ஒருவேளை இந்தக் கடிதம் கிடைச்சிட்டால்?”

“அந்தாளின்ரை கையிலை கடிதம் கிடைக்க வேணுமெண்டுதானே ரூவும் புறமும் போட்டு எழுதுறம்.”

முகுந்தன் சைக்கிளில் காற்றடிக்கும் பம்பைப் பொருத்தினான். காற்றைக் கிழித்துக் கொண்டு இரண்டு சைக்கிள்களும் பறந்தன. தபால்பெட்டி சாடியும் மூடியுமாக செவ்விளநீர் கலரில் கம்பீரமாக நின்றது. அதற்கு எதிராக பஸ் தரிப்பிடத்தில்இ முகுந்தனின் நண்பர்கள் இருவர்---குகநேசனும் பரமுவும்--- இருந்து வம்பளந்து கொண்டிருந்தனர்.

”போடு லெட்டரை! அரசிளங்குமரி உனக்குத்தான்.”

“என்னைப் பயந்தாங்கொள்ளி எண்டு ஸ்கூலிலை சொல்லுறவை. ஒருக்கா உவை ரண்டு பேருக்கும் இந்த லெட்டரைக் காட்டிப்போட்டு ஓடியாறன் அண்ணை.”

பதிலுக்குக் காத்திராமல் எதிர்க்கரை ஓடினான்.

“என்ன ரண்டு பேரும் ஸ்கூலுக்குக் கட் போல?”

“நீ மாத்திரம் என்னவாம்.”

”உதென்ன கையிலை லெட்டர் போல?”

“இப்பதான் தெரியுதாக்கும். இந்தா பார். சி.உமா மேற்பார்த்து”

குகநேசன் ஒரு கணம் நிமிர்ந்து வானத்தை மேல் பார்த்தான்.

“என்ன மேலை பாக்கிறாய்? இந்தா... இஞ்சை பார். மேற்பார்த்து சிவராசா ஆசிரியர். 130 பொன்னு சீமா ஒழுங்கை. எப்படியிருக்கு லெட்டர்? ஆராவது இதுவரை ஸ்கூலிலேயே 'புறம்' போட்டு கடிதம் எழுதியிருக்கிறியளா?”

வீதிக்குக்குறுக்கே திரும்ப ஓடி எதிர்க்கரை வந்தான். அவனுக்குப் பின்னால் குகநேசனும் பரமுவும்இ கடிதத்திலே என்ன எழுதியிருக்கின்றான் என்பதைப் பார்ப்பதற்காக துள்ளித்துள்ளி ஓடி வந்தார்கள். முத்திரைக்கு எச்சில் போட்டு கவருடன் அதனை அழுத்தி அழுத்தி ஒட்டினான் முகுந்தன். பொறுமை இழந்த நாதன் அதைப்பறித்து தபால்பெட்டிக்குள் போட்டான். பிறகு நான்குபேரும் சைக்கிளையும் உருட்டிக்கொண்டு கதைபேசினார்கள்.

”மாஸ்டர் கடிதத்தைக் காட்டச் சொல்லிக் கேட்டால் என்ன செய்வாய்? வாழ்நாள் முழுவதும் பத்திரமாய் வைச்சிருப்பன் எண்டு எழுதியிருந்தாய்”

குகநேசனின் கேள்வி முகுந்தனைச் சிந்திக்க வைத்தது. இந்தவயதிலும் ஒருவேளை அவரின் கமக்கட்டுப்பிடிக்குள் தொங்கவேண்டி வருமோ? புதிய பிரச்சினை வெளிக்கிழம்பியது. நாதனின் தரம்கெட்ட யோசனையை எண்ணிக் கவலை கொண்டான். நேரத்தைப் பார்த்தான். மூன்று மணிதான்.

“கடிதத்தை கட்டுக்குச் சேரவிடாமல் தடுக்கவேணும். அதுதான் ஒரே வழி.”

தபால்பெட்டியை நோக்கி நாலுபேரும் விரைந்தார்கள். வீதியில் சனநடமாட்டம் இல்லை. உண்ட களைப்பில் குட்டிதூக்கம் போட்டுக்கொண்டிருக்கும் நேரம். தபால்பெட்டியைச் சுற்றிச்சுற்றி வலம் வந்தார்கள். சாடிக்கும் மூடிக்குமிடையேயான சீமெந்திலான இணைப்பைக் கண்டுகொண்டார்கள். அங்குமிங்கும் பார்த்துவிட்டு ஒரே தள்ளு. முக்கித்தள்ளியதில் மூடி சாடியைவிட்டுப் பிரிந்து முனகியபடியே புல்தரையில் விழுந்தது. பரமுவும் குகநேசனும் கால்களைக் கெட்டியாகப்பிடிக்கஇ முண்டம்போல கிடந்த சாடியின் உள்ளே தலைகீழாகப் புகுந்தான் முகுந்தன்.

“ஒரே இருட்டாக்கிடக்கு. மூச்சு அடைக்குது. காலை விட்டியளோ அரோகராத்தான்.”

:இந்தா ரோச்லைற். அடிச்சுப்பாத்து எடு.”

“இஞ்சைபாரப்பா பொட்டுக்கேட்டை. சரவணபவான் மாஸ்டர் மிஸ் செல்வி ரீச்சருக்கு எழுதின லவ்லெட்டர் ஒண்டு கிடக்கு. எடுத்து வச்சா பிறகு உதவும். இந்தா இதைப்பிடி. கையெழுத்தை வைச்சு கடித்தை ஆர் எழுதினதெண்டு கண்டுபிடி பாப்பம்”

“அட நம்ம 'பூனை'. தனக்குத்தானே லவ்வெட்டர் போட்டிருக்கிறான்.”

“மழை தூறுது. மற்றவையின்ரை கடித்தை விட்டிட்டு கெதியிலை உன்ரை கடித்தை எடு. ஆக்கள் வந்தா பிறகு பிரச்சினையாப் போகும்” குகநேசன் முகுந்தனைத் துரிதப்படுத்தினான்.

மழை பிலக்கத் தொடங்கும்போது தனது கடித்துடன் வெளியே வந்து விழுந்தான் முகுந்தன். நாலுபேருமாகச் சேர்ந்து மூடியைத் தூக்கி இருந்த இட்த்தில் வைப்பதற்கு எத்தனித்தார்கள். மூடி அசைந்தால்தானே! அதைத்தூக்க ஒரு யானையின் பலம் தேவைப்படும்போல் இருந்தது. உள்ளே இருந்த கடிதங்கள் மழையில் நனையத் தொடங்கின. குகநேசன் எப்பொழுதும் தன்னுடன் கொண்டு திரியும் அந்தப் பென்னாம்பெரிய குடையை விரித்து தபால்பெட்டிக்குள் செருகினான்.

மழையில் விரைந்த மனிதர்களைத் தேடி தெருத்தருவாக அலைந்தார்கள்.

“ஆரோ தறுதலையள் தபால்பெட்டியின்ரை மூடியைத்தள்ளி விழுத்திப் போட்டார்கள். கடிதங்கள் எல்லாம் நனையுது. உதவி செய்தால் தூக்கி வைக்கலாம்.” துணைக்கு ஆள் தேடி தெருவில் போனவர்களைக் கெஞ்சினார்கள்.

“ஐயா... அண்ணா.... ஆரோ தறுதலையள்...”

பொலிஸ் ஜீப் ஒன்று வெள்ளத்தை விசிறியடித்துக்கொண்டு வீதியில் விரைநதது. ஆபத்துக்குப் பாவமில்லை. விஷயத்தைச் சொல்லஇ நாலைந்துபேர் வாகனத்தினின்றும் குதித்து இறங்கினார்கள். தெருவில் போனவர்கள் வந்தவர்கள் எல்லாம் மறிக்கப்பட்டார்கள். முப்பது நாற்பது பேர் புடைசூழ மூடி சாடியின் மேல் அமர்ந்தது. தபால்பெட்டி மீண்டும் கம்பீரமாக்க் காட்சி கொடுத்தது.

சைக்கிளைப்பூட்டி வைத்துவிட்டு நாலுபேரையும் ஜீப்பில் வந்து ஏறும்படி இன்ஸ்பெக்டர் சொன்னார். “இண்டைக்கு ஏதோ சமா நடக்கப் போகுது” என்ற வயிற்றுக்கலக்கலில் நாலுபேரும் ஆளை ஆள் பார்த்தபடி ஜீப்பிற்குள் ஏறினார்கள். ஜீப் தபால்கந்தோரை வந்தடைந்தது. தபால் அதிபருடன் கதைதுவிட்டு வெளியே வந்தார் இஸ்பெகடர்.

அடுத்தநாள் பத்திரிகையில் 'இவர்கள் வருங்காலச் சிங்கங்கள்' என்ற மகுடமிட்டு செய்தி வந்திருந்தது.






அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!

# நினைவலைகள்






## இலங்கை வானொலி அறிவிப்பாளர் எஸ். பி. மயில்வாகனம்


இலங்கையிலும் இந்தியாவிலும் பட்தொடி எங்கும் ஒலித்த சிம்மக்குரலுக்கச் சொந்தக்காரன். எஸ்.பி.மயில்வாகனம்.
இவர் (இறப்பு: 1983) இலங்கை வானொலியின் தமிழ் வர்த்தக சேவையின் முன்னோடி என்று கருதப்படுபவர். உலக ரீதியாக பலராலும் அறியப்பட்ட தமிழ் வானொலி அறிவிப்பாளர் ஆவார். தென்னிந்தியாவில் பொதுமக்கள் மத்தியிலும், சினிமா கலைஞர்கள், தயாரிப்பாளர்கள் மத்தியிலும் மிகுந்த செல்வாக்கு உடையவராக விளங்கியவர்.
மயில்வாகனத்தின் மனைவி செந்திமணி இலங்கை வானொலியின் முதலாவது பெண் வானொலி செய்தி அறிவிப்பாளராக இருந்தவர்.
அவர் மூலமாகவே மயில்வாகனமும் இலங்கை வானொலிக்கு அறிமுகமானார். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிளிபோர்ட் டொட் என்பவர் கொழும்புத் திட்டம் மூலம் இலங்கை வானொலியில் பணியாற்றிய போது அவரிடம் பயிற்சி பெற்றார் மயில்வாகனம். இலங்கை வானொலியின் வர்த்தக சேவையில் திருப்பிப்பார், ஜோடி மாற்றம், இருகுரலிசை, ஒருபடப்பாட்டு போன்ற பல புதிய நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்தார்.
நான் கண்ட சொர்க்கம் (1958) திரைப்படத்தில் சுவர்க்கக் காட்சி ஒன்றில் நகைச்சுவை நடிகர் கே. ஏ. தங்கவேலு ஏ, ரேடியோ சிலோன் மயில்வாகனம் இங்கேயும் வந்து விட்டாரா!, என்று குறிப்பிடுவார்.

நடிகர் திலகத்துடன் இலங்கைவானொலி அறிவிப்பாளர் பி.எச் அப்துல் ஹமீது



### இலங்கை வானொலியில் வெளிக்கள ஒலிபரப்பு வாகனம் இதுதான்!

இன்றுபோல் அன்று நவீன வசதிகள் இல்லை.ஆனால் வானொலி ஒன்றுமட்டுமே மிகப்பெரிய பொதுசன ஊடகமாக இருந்தது. இலங்கை வானொலியின் வெளிக்கள நேரடி ஒலிபரப்பு வாகனம்.அன்று இப்படிதான் இலங்கை வானொலியில் வெளிக்கள ஒலிபரப்புகளை செய்தார்கள்.






இலங்கை வானொலியில் அசோகன-அறிவிப்பாளர் விசாலாடசி

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப்பின்னால் ஒரு பெண் இருப்பாள்.ஆனால் இங்கே ஒரு பெண்ணின் வெற்றிக்குப்பின்னால் ஒரு ஆண் இருக்கிறார். அவர்தான் நடிகர் அசோகனுடன் பேசிக்கொண்டு இருப்பவர் விசாலாட்சி. இவர் அறிவிப்பாளர் எம்எ.ஹமீது அவர்களின் மனைவி.

### அறிவிப்பாளர் ராஜ குரு சேனாதிபதி கனகரத்தினம். இசையமைப்பாளர் இளையராஜா எம்எ. ஹமீது!



நன்றி:எம்எ. ஹமீது,

இன்றைய "இசைஞானி" அன்று இளையராஜவாக அறிமுகமாகியிருந்த காலமது. அலைகள் ஓய்வதில்லை படத்தில் நடிகராக அறிமுகாவதற்கு முன்பு (பிரசாந்தின் அப்பா) தியாகராஜன், இளையராஜாவை இலங்கைக்கு அழைத்து வந்தார். நமது இலங்கை வானொலியில் ஒரு செவ்வி ஒலிப்பதிவு செய்த பின்னர் வானொலி நிலையத்தின் முன் நின்று, நாம் எடுத்துக்கொண்ட நிழல் படம் இது. இதனை தன் கமராவில் "கிளுக்"கியவர் நடிகர், நண்பர் தியாகராஜன். படத்தில் இடது பக்கம் இருப்பவர் நமது மூத்த ஒலிபரப்பாளர் **'ராஜ குரு சேனாதிபதி கனகரத்தினம்'.** இளையராஜாவின் வலது பக்கம் இருப்பவர் ??-அன்று இளையராஜாவைப் போலவேயே முடி சூடியிருந்த நானேதான் எம்எ.ஹமீது!!!!!

Rafid Marikkar Mari

சுஜிதா நிறுவனத்தினர். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தரத்திலும் சுவையிலும் தடம் பதித்துள்ளனர்.

Sujitha Frozen Food

சுவையான உணவிற்கு சுஜிதா

அனைத்து தமிழ் வர்தக நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.




S.J.N Imports

Lambertusstr.80
52441 Linnich

Tel.024625557
Handy.01773268150,01638883308
Email.sjnfastfood@yahoo.de, web:- www.sujitha.eu

11ம் பக்கத் தொடர்ச்சி




# குதிவாதம்

துணியை உங்கள் கால்விரல் நுனிகளால் பற்றி உங்கள் பக்கமாக சுருட்டிச் சுருட்டி இழுங்கள். பல முறை இவ்வாறு செய்யுங்கள்.

இன்னுமொரு பயிற்சி கால் விரல்களால் மார்பிள்களை பொறுக்குவதாகும். சில மார்பிள் களை, அல்லது சில நாணயங்களை அல்லது சோடா மூடிகளை நிலத்தில் போட்டு வையுங்கள். அருகில் உயரம் குறைந்த ஒரு கோப்பையை வையுங்கள். உங்கள் குதிக்கால் நிலத்தில் படும்படி உட்கார்ந்து கொண்டு மார்பிள்களை உங்கள் கால் விரல்களால் பொறுக்கி எடுத்து அருகில் ஏற்கனவே வைத்த கோப்பைக்கள் போடுங்கள். நாணயங்களை இவ்வாறு பொறுக்கிப் போடுவது இன்னும் நல்ல பயிற்சியாகும்.

கால்விரல் தட்டல் (Toe Tab) இன்னுமொரு நல்ல பயிற்சியாகும். இது ஒரு நுணுக்கமான ஆனால் சிறந்த பயிற்சியாகும். உங்கள் பாதத்தின் குதிப் பகுதி தரையில் திடமாக இருக்கும்படி வைத்தபடி கால் விரல்களை மட்டும் மேலே உயர்த்துங்கள். இப்பொழுது நான்கு விரல்கள் உயர்ந்தபடி நிற்க பெருவிரலால் மாத்திரம் தரையைத் தட்டுங்கள். இனி மறுபுறமாகச் செய்யுங்கள். அதாவது பெருவிரல் உயர்ந்து நிற்க மற்ற நான்கு விரல் களால் தரையைத் தட்டுங்கள்.

இவ்வாறு பலமுறை செய்ய வேண்டும். ஒரு தவணையில் பத்து முறையாவது செய்யுங்கள். படிப்படியாக ஒவ்வொரு தவணையிலும் ஐம்பது முறையாவது செய்யும்படி பயிற்சியை அதிகரி யுங்கள்.

குதியில் ஏற்பட்ட அழற்சியைத் தணிக்க ஐஸ் மஸாஸ் சிலருக்கு உதவக் கூடும். ஒரு சிறிய பேப்பர் கோப்பையில் நீரை வைத்து குளிர்சாதனப் பெட்டி மூலம் ஐஸ் ஆக்குங்கள். கோப்பை யிலிருந்து ஐஸ் வெளியே தெரியும் பகுதியை பாதத்தின் வலிக்கும் இடத்தின் மேல் வைத்து அழுத்துங்கள். மிதமான அழுத்தத்துடன் சுற்று வட்டமாக 5 முதல் 10 நிமிடங்களுக்கு அழுத்துங்கள். இதுவும் குதிவாதத்தின் வலியைத் தணிக்க உதவும்.

ஆழம் குறைந்த பேசினுக்குள் ஐஸ் கலந்த நீரினுள் பாதத்தை 5 முதல் 10 நிமிடங்களுக்கு வைத்திருப்பதையும் மேலை நாட்டு வைத்தியர்கள் சிபார்சு செய்கிறார்கள். ஆயினும் எம்மவர்கள் குறைந்த சூடுள்ள நீரில் பாதத்தை வைத்திருப்பது கூடிய சுகத்தைக் கொடுப்பதாக உணர்கிறார்கள்.

வலியையும் அழற்சியையும் தணிக்கும் வலிநிவாரண மாத்திரைகளும் உங்களுக்கு நிச்சயம் உதவும். வைத்தியரின் ஆலோசனை யுடன் குறிப்பிட்ட காலத்திற்கு அத்தகைய மாத்திரைகள் நீங்கள் உட்கொள்ள சுகம் தெரியும்.

சில வேளை ஹைட்ரோகோட்டிசோன் ஊசி மருந்தை வலி அதிகமுள்ள இடத்தில் உங்கள் வைத்தியர் போடவும் கூடும்.

உங்களுக்கு ஏற்ற சிகிச்சை முறையை வைத்தியரின் ஆலோசனையுடன் தீர்மானியுங்கள். மனந்தளராமல் தொடர்ந்து செய்யுங்கள் சுகம் கிடைக்கும்.

நன்றி - பதிவுகள்.கொம்

## 12 வது ஆண்டு நினைவு அஞ்சலி



**ஸ்ரீமதி சண்முகரட்ணக்குருக்கள் சகுந்தலாதேவி**

வளர்பிறை 01.09.1944 தேய்பிறை 10.02.2002
திதி அபரதிரயோசதசி

ஸ்ரீமதி. சண்முகரட்ணக்குருக்கள் சகுந்தலாதேவி கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடாகவும் கொண்டவர் (இலங்கை)

**அம்மா**
**ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்**
**மாண்டவர் மீண்டு வருவதில்லை**
**அன்பின் திருவுருவே எங்கள்**
**மனமும் உடலும் குளிரவே**
**வளர்த்த தெய்வமே உங்களை**
**நினைவு கூறி நாங்கள்**
**மனநிறைவு கொள்கின்றோம்.**

ஸ்ரீமதி விக்னேஸ்வரி, விமலேஸ்வரி கிருத்திகா சுதன், சுபசுதன் நந்தசுதன் மங்களேஸ்வரி, மருமக்கள், பேரர். தகவல்: சண்முகரட்ணக் குருக்கள் ஸ்ரீமதி விமலேஸ்வரி - யேர்மனி







## டி.பி.பி வெற்றிமணி இணைத் தயாரிப்பில் குறும்படம் : என்னவளும் சீதையே


இசை ஆல்பங்களின் உலகில் அசைக்க முடியாத ஒரு பெயராக இடம் பெற்று விட்டது TBB என்டர்டெயின்மென்ட். லண்டனைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் டி.பி.பி யின் இசைப்பயணம் கடந்த பத்து ஆண்டுகளாக வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் வெளியான கள்வன், மாயவன், ஒன்வே, பைரவன் யூகே 2 மதுரை போன்ற இசை ஆல்பங்கள் இசை உலகில் டி,பி.பி யை மிக உயர்ந்த இடத்தில் அமர வைத்திருக்கிறது. இசையமைப்பாளர் சஞ்சேயின் புதுமை கலந்த இசையில், வசீகரிக்கும் சிறப்புக் குரல்களும், இளமை வரிகளும் தமிழிசையின் தனி இடத்தை டிபிபிக்கு வழங்கியிருக்கிறது.

இசை ஆல்பங்களைத் தொடர்ந்து டிபிபி வெளியிட்ட வீடியோ ஆல்பங்களும் காட்டில் விழுந்த கனலைப் போல சடசடவென இலட்சக்கணக்கான ரசிகர்களைக் கவர்ந்து இழுத்து பிரமிக்கும் வெற்றியை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. சென்னையிலுள்ள தர்ஷனா பரதநாட்டியப் பள்ளியுடன் இணைந்து டி.பி.பி தயாரிக்கும் பரதநாட்டிய வீடியோ ஆல்பங்கள் டி.பி.பி யின் கலைத் தாகத்தை வெளிப்படுத்துகிறது.

டிபிபியின் தீவிரக் கலைத் தேடலில் அடுத்ததாக திரைப்படங்களின் உலகிற்குள் அடியெடுத்து வைக்கிறது. அதன் முதல் சுவடாக தற்போது உருவாகி வரும் ”என்னவளும் சீதையே” எனும் குறும்படத்தைச் சொல்லலாம். இயக்குனர் ஆர். சம்பத்குமார் அவர்களின் கதை, வசன, இயக்கத்தில், இசையமைப்பாளர் சஞ்சே அவர்களின் இசை ராஜாங்கத்தில் இந்தக் குறும்படம் உருவாகி வருகிறது. டி.பி.பி யின் தயாரிப்புகள் அனைத்திற்கும் பின்னணியில் ”வெற்றி மணி” பத்திரிகையும், அதன் ஆசிரியர் டாக்டர். எம்.கே.எஸ் சிவகுமரன் அவர்களும் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். இந்த குறும்படப் பயணத்திலும் அது தொடர்வது இனிமையான அனுபவம்.

விவேக் ராஜகோபால், அஞ்சலி இருவரும் முன்னணியில் நடிக்க, துணை நடிகர்களாக அபிஷேக் ஜோசப் ஜார்ஜ், ஜான் மற்றும் பலர் நடித்திருக்கிறார்கள். கேமராவைக் கையாள்கிறார் அம்மா முத்து, எடிட்டிங் பிரவீன் ஆன்டனி, கலை ஆன்டனி குர்லி, துணை இயக்கம் - ப்ரவீன், இணை கேமரா ராஜீவ் நாயர். பாடல் வரிகளை சேவியர் எழுதியிருக்கிறார்..
இதிகாசங்களின் கனவில் உலவும் ஒரு ஓவியக் கலைஞன் தனது கனவுகளில் முளைத்த ஓவியம் ஒன்றை உயிருடன் பார்ப்பதையும், அதனால் நிகழக்கூடிய உணர்வு அலைகளையும் பரபரப்புடனும், கதகதப்புடனும் இந்தக் குறும்படம் காட்சிப்படுத்தியிருக்கிறது. டிபிபியின் இந்தப் புதிய பயணம் வெற்றி பெற வாழ்த்துவோம்





## காதலால் உருவான சில மூட நம்பிக்கைகள்!

இசையோவியர்

காதலர் தினத்தை மையமாகக் கொண்டு எக்கச்சக்கமான மூட நம்பிக்கைகள் உலவி வருகின்றன. காதலியர் தங்கள் மனம் கவர்ந்தவர்களின் பெயர்களையெல்லாம் ஒரு பாத்திரத்தில் எழுதிப் போடுவார்கள். பாத்திரத்தைக் குலுக்கி எடுக்கும் போது வரும் பெயர் தான் அவளுடைய கணவன். இது பதினேழாம் நூற்றாண்டுகளில் நிலவி வந்த பாப்புலர் வழக்கம்.

காதலர் தினத்தன்று காதலியின் கண்ணில் எந்தப் பறவை தென்படுகிறதோ அது அவளுடைய கணவனின் தன்மையைச் சொல்லும் என்பது காதலர் தினத்தன்று உலவி வந்த பண்டைய நம்பிக்கைகளின் ஒன்று. புறாவைக் காண வேண்டுமே என பெண்கள் பதறுவார்களாம். காரணம் புறாவைக் கண்டால் காதல் வாழ்க்கை ஆனந்தமாய் இருக்குமாம். கணவன் மிகவும் இரக்கமும், அன்பும், நேசமும் உடையவனாக இருப்பானாம் !

காதலர் தினத்தன்று சந்திக்கும் ஆணைத் திருமணம் செய்து கொள்வோம் எனும் நம்பிக்கை பண்டைக் காலத்தில் பரவியிருந்தது. அதனால் தன் மனதுக்குப் பிடித்தவரைச் சந்திக்க வேண்டுமே என பெண்கள் காத்திருப்பார்களாம். தனக்கு ஒரு காதலி கிடைப்பாளா என ஆண்களும் காதலர் தினத்தன்று அங்கும் இங்கும் அலைந்து திரிவார்களாம்.

**அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!**



# இதுவே காதலர்தினம்!

**சந்திரவதனா**

ரோஜாவை மட்டுமல்லாமல்
மனங்களைப் பரிமாறி விழிகளால் கதைபேசி...
நாமெல்லோரும் களித்திருக்கும் இந்நாள்...
இது உண்மையிலேயே ஒரு துயரந் தோய்ந்த நாள்.

வலண்டைன் என்ற பாதிரியார் கல்லால் அடிக்கப் பட்டு சித்திரைவதை செய்யப்பட்டு தண்டிக்கப் பட்டு தலை துண்டிக்கப் பட்ட நாள் இது. அந்த நாள் கி.பி.270 வது வருடம் - பெப்ரவரி 14ந் திகதி (14.270). இந்தத் தினம்தான் காதலர்தினம்.

இது ஏன் வந்தது? எப்படித் தொடங்கியது? என்று தெரியுமா?

கொடுரமாகவும் கோமாளித்தனமாகவும் ஆட்சி புரிந்த ரோமானியச் சக்கரவர்த்தி கிளாடி- 2 யின் முட்டாள் தனமான கட்டளைகளால் அவனை விட்டு விலகிப் போயினர் அவனது இராணுவ வீரர்கள். புதிய இராணுவ வீரர்களை அவனால் சேர்க்க முடியவில்லை. யாரும் முன் வந்து இராணுவத்தில் சேர மறுத்து விட்டார்கள். அவனது மந்திரி பரிவாரங்களும் வீரர்களைச் சேர்ப்பதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகள் எதையும் அவனுக்குக் கொடுக்கவில்லை. இதனால் எரிச்சல் உற்றான் கிளாடி.

துனது அந்தரங்க நாயகியுடன் சல்லாபமாக இருந்த நள்ளிரவொன்றில் எரிச்சல் உற்ற மறை கழன்ற ரோமானியச் சக்கரவர்த்தி கிளாடி-2 இன் மனதில் - திருமணமானவர்கள் தமது அன்பு மனைவியை விட்டு வர மனமில்லாமலும், திருமணமாகாதவர்கள் தமது காதலியை விட்டு வர மனமில்லாமலும் இருப்பதாலேயே இராணுவத்தில் சேரத் தயங்கு கிறார்கள்.

இவர்களுக்கு எல்லாம் குடும்ப வாழ்க்கை என்ற ஒன்று இல்லாத பட்சத்தில் இவர்கள் மனம் வெறுத்து இராணுவத்தில் சேருவார்கள். போரிலும் மூர்க்கத் தனமாய் போரிடுவார்கள். வெற்றி எழுதில் கிட்டும். என்றதொரு முட்டாள் தனமான எண்ணம் தோன்றியது.

உடனேயே நள்ளிரவு என்றும் பாராமல் தன் அந்தரங்க அமைச்சரை அழைத்து ”ரோமாபுரி நாட்டில் இனி யாருமே திருமணம் செய்யக் கூடாது. ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட திருமணங்களும் ரத்துச் செய்யப் படவேண்டும்.
இவ் அரச கட்டளையை மீறுபவர்கள் யாராயினும் கைது செய்யப் பட்டு இருட்டுச் சிறையில் அடைக்கப் படுவார்கள். பின்னர் அறிவிக்கப் படும் ஒரு நாளில் பொது இடத்தில் வைத்து கல்லால் அடித்து தலை துண்டிக்கப் பட்டுக் கொல்லப் படுவார்கள்.” என்ற அறிவிப்பை மக்களுக்குச் சொல்லும் படி பணித்தான். அரசனை மீற வழி தெரியாத அமைச்சர் அதை அறிவித்தார்.

இந்த அறிவிப்பைக் கேட்டு மக்கள் அதிர்ந்தார்கள். இருமனங்கள் இணைவதை அரசன் அறுத்தெறியத் துணிந்த போது திருமணங்கள் கனவாகிப் போன சோகத்தில் ரோமாபுரி சோகக் கண்ணீரில் மிதந்தது.

அரசனின் இந்த முடிவு அநியாயம் என்று சொல்லிக் கொதித்தெழுந்த கிறிஸ்தவ பாதிரியார் வல ண்டைன் அரச கட்டளையை மீறி இரகசியத் திருமணங்களைச் செய்து வைத்தார். இந்தச் செய்தி அரசனுக்கு எட்டி விட வாலண்டைன் கைது செய்யப்பட்டு இருட்டுச் சிறையில் அடைக்கப் பட்டு மரணதண்டனை விதிக்கப் பட்டார்.

அவர் சிறை வைக்கப் பட்டிருந்த காலத்தில் சிறைக்காவல் தலைவனின்
கண் தெரியாத மகளான அஸ்டோரியசுக்கும் பாதிரியார் வாலண்டைனுக்கும் இடையில் காதல் என்னும் அன்பு பூத்தது. அஸ்டோரியஸ் பாதிரியாரை சிறையிலிருந்து மீட்க முயன்றாள்.
இதையறிந்த அரசன் அஸ்டோரியசை வீட்டுச் சிறையில் வைத்தான். கண்கள் கிடைத்து விட்டது போன்ற மகிழ்ச்சியில் திளைத்திருந்த அஸ்டோரியஸ் கனவுகள் சிதைந்ததில் கலங்கினாள்.

ஆனால் வலண்டைனுக்கான மரணதண்டனையில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. அஸ்டோரியசுக்கு ஒரு காகித அட்டையை வரைந்து விட்டு தண்டனையை ஏற்க அவன் தயாரானான்.

வலண்டைன் கல்லால் அடிக்கப் பட்டு சித்திரவதை செய்யப் பட்டு தலை துண்டிக்கப் பட்ட அந்தநேரத்தில் அந்தனை கட்டுக் காவல்களையும் மீறி வலண்டைனிடமிருந்து வந்த அந்த அட்டையின் வரிகளை தோழி வாசிக்க அஸ்டோரியசின் கண்களிலிருந்து கண்ணீர்ப் பூக்கள் சொரிந்தன.

அந்தக் அட்டையிலிருந்த கவிதை வரிகள்

**விழி இருந்தும்**
**வழி இல்லாமல் - மன்னன்**
**பழி தாங்கிப் போகிறேன்.**
**விழி இழந்து - பார்க்க**
**வழி இழந்து, நீ மன**
**வலி தாங்காது கதறும்**
**ஒலி கேட்டும், உனை மீட்க**
**வழி தெரியாமல் மக்களுக்காக**
**பலியாடாகப் போகிறேன் - நீ**
**ஒளியாய் வாழு! பிறருக்கு**
**வழியாய் இரு!! சந்தோஷ**
**ஒளி உன் கண்களில்**
**மின்னும்!!**

- உன்னுடைய வலண்டைனிடமிருந்து! -

அன்றிலிருந்து இன்று வரை நேசிப்பாளர்களிடையே பரிமாறப் படும் வைரவரிகள் இவை. இதுவே முதல் வலண்டைன் மடல்.

அரச கட்டளையை மீறி மனங்களை இணைய வைத்துத் தன்னையே பலி கொடுத்த பாதிரியார் ரோம் மக்களின் மனங்களில் அழியாத இடத்தைப் பெற்றிருந்தார். ரோமானிய தேவாலயங்கள் ஐரோப்பியக் கட்டுப் பாட்டுக்குள் வந்த பிறகு இந்தத் தினம் பாகான்(மதமற்றவன்) தினம் எனக் கொண்டாடப்பட்டது. ஏறக்குறைய 200 வருடங்களுக்குப் பிறகு போப்பாண்டவர் ஒருவரால் வலண்டைன புனிதராக அறிவிக்கப்பட்டு வலண்டைன் தினம் (ST. Valentins Day) உலகம் முழுவதும் கொண்டாடத் தலைப்பட்டது.


இதுவே காதலர்தினம்.

ஒருவர் இன்னொருவரால் காதலிக்கப் படும் போது அவர் படிப்பிலோ அல்லது கலையிலோ ஏன் போராட்டத்திலான தீர்க்கமான ஈடுபாட்டிலோ இன்னும் ஒரு படி மேலே சிறந்து விளங்குகிறார். என்பது இன்றைய ஆராய்ச்சியாளர்களின் கண்டு பிடிப்பு.
இது அன்றைக்கே தெரிந்திருந்தால் அன்றைய ரோமானியச் சக்கரவர்த்தி வலண்டைனுக்கு இப்படியொரு கொடுமையைச் செய்திருக்க மாட்டார்.



## பாரத ரத்னா விருதுக்கும் மக்கள் என்னை தகுதி பெற வைப்பார்கள்! - கமல்

பத்மபூஷண் விருதுக்கு தகுதி பெற வைத்த மக்கள், பாரத ரத்னாவுக்கும் என்னைத் தகுதி பெற வைப்பார்கள் என்றார் கமல்ஹாஸன். நடிகர் கமலஹாசனுக்கு மத்திய அரசு பத்மபூஷண் விருது அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து ஆழ்வார்பேட்டை அலுவலகத்தில் இன்று (25.01.2014) அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும்...


இனி சாதிப்பதற்கான விருது கேள்வி: பத்மபூஷண் விருது பெற்றதை எப்படி உணர்கிறீர்கள்? பதில்: பத்மபூஷண் விருதுக்கு தகுதியானவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். எனக்கு கற்றுக் கொடுத்தவர்கள் கூட இந்த விருதை வாங்காமலேயே போய் உள்ளனர். எனக்கு இந்த விருது கிடைத்துள்ளது. செய்ததற்காக மட்டும் இது கிடைக்கவில்லை. செய்யப் போவதற்காக கிடைத்துள்ள விருதாக கருதுகிறேன்.

மக்கள் கொடுக்கும் விருதே முதன்மையானது கே: தாமதமாக இந்த விருது கிடைத்ததாக நினைக்கிறீர்களா?
ப: இந்த நாட்டில் மக்கள் கொடுக்கும் விருதுதான் முதன்மையானது. மற்றதெல்லாம் அடுத்த கட்டம். இந்த விருதும் அப்படித்தான்.பாரத ரத்னா கே: டெண்டுல்கருக்கு 25 ஆண்டு கால சாதனைக்கு பாரத ரத்னா விருது கொடுத்துவிட்டார்கள். ஆனால் 50 ஆண்டுகள் சாதித்த உங்களுக்கு 5 இப்போதுதான் பத்மபூஷண் விருது வழங்கியிருக்கிறார்கள்... ப: இது சுதந்திர போராட்டம் மாதிரி. இதற்கு சம்பளம் கேட்க கூடாது. கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி. இந்த விருதுக்கு மக்கள் என்னை தகுதியாக்கியது மாதிரி பாரத ரத்னா விருதுக்கும் ஒரு நாள் தகுதி பெற வைப்பார்கள்.

கே: பத்மபூஷண் விருதை யாருக்கு சமர்ப்பிப்பீர்கள்? ப: எனக்கு கற்றுக் கொடுத்தவர்களுக்கும், எனது குடும்பத்தினருக்கும் இந்த விருதை சமர்ப்பணம் செய்கிறேன். பொதுவாக எல்லோரும் பணம் வாங்கிக் கொண்டு கற்றுக் கொடுப்பார்கள். ஆனால் எனக்கு சம்பளம் கொடுத்து கற்றுக் கொடுத்தனர். கே.பாலச்சந்தர், சண்முகம் அண்ணாச்சி போன்றோர் எனக்கு சம்பளம் தந்து கற்றுத்தந்தனர். இது மறக்க முடியாத நன்றிக் கடன். தீர்க்க முடியாத நன்றிக் கடன்.


கே.பாலச்சந்தர்.கமல்.

புகழ் வரும்போது கே: விஸ்வரூபம் படத்தில் ஏற்பட்ட காயத்துக்கு மருந்தாக இந்த விருதை நினைக்கிறீர்களா? ப: எனக்கு வரும் இகழ்வுகளை மட்டுமே என் தனிச்சொத்தாக எடுத்துக் கொள்வேன். புகழ் வரும்போது மற்றவர்களுடன் பங்கிட்டுக் கொள்வேன்.

## பாரதிக்கு கொள்ளுப்பேத்திகளே வந்தும்கூட சாதிகள் ஒழியவில்லையே!

பாரதம் எப்படி யுள்ளது?
சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாடிய பாரதியாரின் கொள்ளுப் பேத்திகூட பிறந்துவிட்டார்கள். ஆனால் நாட்டில் சாதிகள் ஒழியவில்லையே என்றார் வேதனையுடன் கமல்ஹாஸன். இன்று செய்தியாளர்களைச் சந்தித்த கமலிடம், இந்தியா குடியரசாகி 65 ஆண்டுகள் ஆகிவிட்டது. நாடு தன்னிறைவு அடைந்து விட்டதாக கருதுகிறீர்களா?, என்று கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த கமல், "அந்த நிலையை அடைந்துவிட்டதற்கான ஆதாரமும் இருக்கிறது. அடையவில்லை என்பதற்கான அடையாளமும் இருக்கிறது. முழுவெற்றி பெறவில்லை. குறிப்பாக சாதி முறை இன்னும் ஒழியவில்லையே. சாதிகள் இல்லையடி என்று பாடிய பாரதியாரின் பாப்பாக்களுக்கும் கொள்ளு பேத்தி வந்து விட்டார்கள் என்றாலும் சாதி ஒழியவில்லை. சாதி வெறி ரத்தம் இன்னும் வடிந்து கொண்டுதான் இருக்கிறது. கே: எதிர்காலத்தில் அரசியலுக்கு வருவீர்களா? ப: இங்கு இருக்கும் எல்லோருமே அரசியல்வா திகள்தான். ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓட்டுப்போடுகிறோம். கை விரலை கரையாக்கி கொள்கிறோம். அந்த கரைபோதும். கே: சுயசரிதை எழுதுவீர்களா? ப: எனக்கு அதில் உடன்பாடு இல்லை. சுயசரிதையில் பொய்தான் எழுத வேண்டி வரும். உண்மை எழுதினால் பலரது மனம்தான் காயப்படும். என் மீது உங்களுக்கு என்னென்ன சந்தேகங்கள் இருக் கின்றனவோ.. அவை அப்படியே தொடரட்டும்!, என்றார்.

### அரசியல் உரிமைகளை கொச்சைப்படுத்தும் .......

3ம் பக்கத் தொடர்ச்சி.....

ஒரு சமூகத்தின் நில உரிமைகளை, அழிப்பதற்கும் அந்த சமூகத்தின் அரசியல் கோரிக்கைகளின் முக்கியத்துவத்தை இல்லாமல் செய்வதற்கும் அந்த சமூகத்தின் பண்பாட்டு தளத்தை சீரழித்தால்போதும். அந்த அடிப்படையில்தான் யாழ்ப்பாணத்தில் சமீபகாலமாக இடம்பெறும் சம்பவங்களை நோக்க வேண்டியுள்ளது.

### துனீசியாவில் நடந்தது என்ன?

ஜனரஞ்சகம், பொழுது போக்கு களியாட்டங்கள் என்பது வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு பொருத்தமாக இருக்கலாம் ஆனால் அரசியல் உரிமைகள், அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு நேர்த்தியான ஒரு அரசியல் தலைமைத்துவம் இன்றி தவிக்கும் ஒரு சமூகமாக இருந்து கொண்டு களியாட்டங்களில் ஈடுபட்டால் அது எங்களை ஒடுக்க முற்படும் இனத்திற்கு மேலும் வசதியாக இருக்கும். ஆகவே இடம்பெருள் காலம் அறிந்து செயற்பட வேண்டிய ஒரு கட்டாயச் சூழல் தமிழ் இளைஞர்களுக்கு உண்டு. புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. துனீசியாவில் ஜனாதிபதி பென் அலியின் 30 வருட கொடுங்கோல் ஆட்சியை கவிழ்ப்பதற்கு அந்த நாட்டு இளைஞர்கள், யுவதிகள் கையாண்ட செயற்பாடுகள்தான் காரணம்.
மக்கள் வீதியில் இறங்கி தொடர்ச்சியாக போராடுவதற்கு அந்த நாட்டில் இருந்து எதிர்க்கட்சி அரசியல்வாதிகளோ, அரபு தேசியவாத இயக்கங்களோ காரணம் அல்ல இளைஞர்களுடைய விடுதலை தொடர்பான சிந்தனைதான் காரணம். புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்த துனீசியர்கள் தகவல் தொழில் நுட்பங்களை தங்கள் நாட்டின் விடுதலைக்காகவே பயன்படுத்தினர். அவர்கள் களியாட்டம், பொழுது போக்கு, மற்றும் கத்திக்குத்து சண்டைகளில் ஈடுபட்டிருந்தால் ஈடுபட்டிருந்தால் துனீசியாவில் புரட்சி ஏற்படிட்ருக்காது.






அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!

# மனிதனும் விலங்கு தான்... 6ம் அறிவு என்பது இல்லை: விஞ்ஞானிகள் நிரூபணம்





மெல்போர்ன்: பகுத்தறியும் திறன் எனப்படும் ஆறாவது அறிவு என்ற ஒன்று மனிதனிடம் மட்டும் தனிப்பட்ட முறையில் இல்லை என ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். பொதுவாக, மனிதனையும் மற்ற உயிரினங்களையும் வித்தியாசப்படுத்துவது ஆறாம் அறிவு என்ற ஒன்று தான். உடல், நாக்கு, மூக்கு, கண் மற்றும் காது இவற்றால் உணர்வது ஐந்தாம் அறிவு. இவை ஐந்தையும் தாண்டி, சிந்தனை என்பதன் துணை கொண்டு உணரத்தலைப்படுவது ஆறாம் அறிவு. இந்நிலையில், ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட உணர்வு எனப்படும் ஆறாவது அறிவு என்ற ஒன்று இல்லையென்று விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

நிரூபணம்.... ஆறாம் அறிவு இல்லை என்ற இந்த உண்மையை சிறிய சோதனைகள் மூலம் ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் நிரூபித்துக் காட்டியுள்ளனர். இந்த ஆய்வறிக்கைகள் “பிளோஸ் ஒன்“ என்ற இதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

விளக்கம்.... இந்த ஆய்வின் முடிவில், ஒரு மாற்றம் ஏற்படும்போது மக்களால் அதைப் பார்க்க இயலவில்லை என்றபோதும் உணரமுடியும் என விளக்கப் பட்டுள்ளது.

உதாரணமாக.... உதாரணத்திற்கு ஒருவருடைய தோற்றத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை நாம் உணரும்போதும் அந்த மாற்றம் அவர்களுடைய தலைமுடி திருத்தப்பட்டிருப்பதால் ஏற்பட்டது என்பதை நாம் உணரமுடியாமல் இருக்கும் என்று விஞ்ஞானிகள் தெளிவு படுத்தியுள்ளனர்.

**நேற்று மெய்!**
**இன்று பொய்!!**
**தடுமாறும் விஞ்ஞானம்.**
**அப்போ மீண்டும் மெய்ஞானம் வலிமைபெறுமா?**



முதல் ஆராய்ச்சி... இது குறித்து ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் உள்ள உளவியல் ஆராய்ச்சிப் பள்ளியின் முன்னணி ஆராய்ச்சியாளர் டாக்டர் பியர்ஸ் ஹோவே கூறுகையில், 'மாற்றங்களை நேரடியாகப் பார்க்க முடியாவிட்டாலும் மனிதனால் உணரமுடியும் என்பதை உறுதிப்படுத்தும் முதல் ஆராய்ச்சி இது என்று குறிப்பிடுகின்றார்.


இது தான் 6வது அறிவு.... பொதுவாகக் குறிப்பிடப்படும் ஐம்புலன்களை சார்ந்து இல்லாமல் மனதின் மூலம் மாற்றங்களை உணரமுடியும். இதுவே இதுநாள்வரை ஆறாவது அறிவு என்று குறிப்பிடப்பட்டு வந்தது எனத் தெரிவித்துள்ளார்.

# உயிரை விட மயிருக்கே மவுசு அதிகம் திருப்பதி சொல்லும் சங்கதி!
## 72 கோடி வருமானம்!





திருப்பதி ஏழுமலையான் கோவில் பக்தர்கள் கொடுக்கும் தலைமையிர்காணிக்கைமூலம் கடந்த ஆண்டு (2013) வருவாய் 72 கோடி என அறிவிக்கப்படுகின்றது. திருப்பதிசெல்லும் பக்தர்கள் பெரும்பாலும் தென்னிந்தியர் என்றாலும், அதிகம் மயிர்காணிக்கைகொடுப்பவர்கள் தமிழ்நாட்டுமக்களே ஆவர். உயிரை விட மயிருக்கு இருக்கும் மவுசைப்பாருங்கள்! உலகிலேயே அதிநீளமான முடி இந்தியப் பெண்களுக்கு உள்ளது என்பது தற்போதைய ஆய்வில் தெரிவந்துள்ளது.



அன்னை மடியில் 12.01.1964

ஆண்டவன் மடியில் 12.02.2009

**ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி**

**அமரர் குருசாமி சிறிகணேசன் (சிறி)**

அன்பாளனாய் நல்ல பண்பாளனாய், அன்பு மிகுந்த நல்ல கணவனாய் வாழ்ந்தாயே! வாழ்ந்த நாள் குறுகியது என்ற போதும், நீ சேர்த்து வைத்த மனித பாசம் மகத்தானது.
இந்த வகையில் உன் ஆத்மா சாந்திக்கு அனைத்து உள்ளங்களினதும் இதயம் உருகிய அஞ்சலிகள் சேரும்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
இவ்வண்ணம்
மனைவி **பிரியா-** நொயிஸ் - யேர்மனி
T.P. 0152 55 44 16 16 Neuss-Germany





# காதல் பரிசு

**(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)**

உலகத்திலே வாழும் மக்கள் அனைவரும் காதல் என்னும் உணர்வுக்கு உட்பட் டவர்களே. குறிப்பாக இளமைப் பருவத்தில் இந்த உணர்வு எல்லோரிடமும் ஏற்படும் என்ற கருத்தும் வலுவடைந்துள்ளது. ஆனால் காதல் முதியவர்க்கும் வரும். 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என அப்பர் பாடிய தேவாரத்தை இதற்குச் சான்றாகக் கூறலாம். எனவே காதல் என்பது என்ன என்பதை அறியவேண்டியுள்ளது. எமது உடலிலே காது என இரு உறுப்புகள் உள. அவற்றைச் செவி என்றும் அழைப்பர். இந்த உறுப்பின் செயற்பாடு கேட்டலாகும். காதல் என்பது காது என்னும் பெயர்ச்சொல் அடியாகப் பிறந்த தொழிற்பெயராகும். எனவே காதல் என்பது ஒருவர் சொல்வதை விரும்பிக் கேட்டல் எனப் பொருள்படும். பாரதியின் குயில் பாட்டு காதல் பற்றி விளக்குகிறது.

காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்

காதல் போய்விட்டால் சாவதைத்தவிர வழியில்லை என்றகருத்தே இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உயிர்விட்டவர்கள் பற்றியகதைகளும் உலகத்தில் இருக்கின்றன. தமிழிலக்கியங்களில் காதல் ஆண் பெண் இருவருக்கும் ஏற்படும் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது. முன்பின் அறியாத ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திடீரென ஒருவரையொருவர் கண்டபோது காதல்கொண்டதாகப் பல பாடல்கள் உள. பின்வந்த பேரிலக்கியங்களும் காதல்பற்றிப் பாடியுள்ளன. இந்தக் 'காதலுக்குக் கண் இல்லை' என்ற கூற்றும் தமிழரிடையே வழக்கில் இருந்துள்ளது.

காதல் உள்ளம் தொடர்பானது. அதனால் இறைவன்மீது காதல்கொண்ட அடியார்களும் இருந்துள்ளர். அவர்கள் இறைவனைத் தமது காதலனாகப் பாவனை செய்து பல பாடல்கள் பாடியுள்ளனர். சம்பந்தர், அப்பர், ஆண்டாள் பாடிய பாடல்கள் இன்று அதற்குச் சான்றாக உள்ளன. இவர்கள் இறைவன்மீது கொண்டகாதல் 'தெய்வீகக் காதல்' எனப்பட்டது. இந்நிலையில் காதல் மானிடக்காதல் தெய்வீகக்காதல் என இருவகைப்பட்டதாயிற்று. தெய்வீகக்காதல் உள்ளம் தொடர்பானதாகவும் மானிடக்காதல் உடல் தொடர்பானதாகவும் விளக்கப்பட்டது. எனினும் காதல் பற்றிய விளக்கத்தில் மானிடக்காதல் காட்சி, ஐயம், தெளிவு என்ற மூன்று நிலைகள் கொண்டது என்ற விளக்கமும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் முதலில் காணுதல். அடுத்து இருவரும் இணையும் நிலைபற்றி ஐயுறல். ஐயம் தெளிவடைய இருவரும் இணைதல். இவ்வாறு இருவரும் ஒத்த உள்ளமுடையோராக இல்லாது ஒருவர் மட்டுமே விருப்பம் கொள்ளுதல் 'ஒருதலைக் காதல்' எனப்பட்டது.

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காதல் களவுநிலை, கற்பு நிலையென இருவகைப் பட்டதாக அமைந்திருந்தமையைத் தொல்காப்பியம் என்னும் இலக்கணநூல் விளக்கியுள்ளது. இலக்கியங்களிலேயுள்ள பதிவுகளைக் கொண்டே தொல்காப்பியர் இவ்வாறு வகுத்து விளக்கி யுள்ளார். ஆனால் தொல்காப்பியர் 'காதல்' என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. 'அன்பொடு புணர்தல்' என்றே குறிப்பிட்டுள்ளனர். ஆனால் காதல், காதலர் என்ற சொற்கள் பண்டைத் தமிழிலக்கியத்தில் பயின்றுவந்துள்ளன. சில சான்றுகளைத் தரலாம்.

| | |
|---|---|
| 'அரிதே காதலர்ப் பிரிதல்' | (நற்றிணை: 5) |
| 'அல்லல் அன்று அது காதல்' | (நற்றிணை: 25) |
| 'நன்மலை நாடன் காதல் மகளே' | (நற்றிணை: 44) |
| 'கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே' | (நற்றிணை: 45) |
| 'அவனர் ஆகுக காதலர்' | (நற்றிணை: 64) |
| 'நயந்த காதலன் புணர்ந்தனள்' | (நற்றிணை: 66) |
| 'யாதனில் தவிர்க்குவம் காதலர் செலவே' | (நற்றிணை: 79) |

இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள காதல்மகன், காதல்மகள் என்ற இரு சொற்றொடர்களும் அன்புடைய மக்களைக் குறித்து நிற்கின்றன. எனவே 'காதல்' என்ற சொல் அன்புத் தொடர்பு நிலையைக் குறிப்பதாகவே இருந்தமை பெறப்படுகிறது.

காலம் காதல் பற்றிய விளக்கங்களைப் பல்வேறு நிலையாகப் பதிவுசெய்தாலும் இளமையில் காதல் பெருவழக்காகப் பேசப்பட்டுள்ளது. அந்தவகையில் காதல்கொண்டவருக்குப் பரிசு கொடுக்கும் நடைமுறை பண்டைக் காலத்திலிருந்தே தொடர்கிறது. பெரும்பான்மையும் ஆண்களே பெண்களுக்குப் பரிசு வழங்கியுள்ளனர். பின்வரும் பாடல் அதற்குச்சான்றாக உள்ளது.

"சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
அலங்குகுலைக் காந்தள் தீண்டி தாதுஉக
கன்று மருளும் குன்றநாடன்
உடுக்கும் தழைதந் தனனே யாம்அ∴து
உடுப்பின் யாய்அஞ் சுதுமே கொடுப்பின்
கேளுடைக் கேடுஅஞ் சுதுமே ஆயிடை
வாடல கொல்லோ தாமே அவன்மலைப்
போருடை வருடை பாயா
சூருடை யடுக்கத்த கொயற்கு அருந்தழையே."

(நற்றிணை: 359)

இப்பாடல் காதலர் பரிசுகொடுத்தல் தொடர்பான நடைமுறையைத் தெளிவாகப் பதிவுசெய்துள்ளது. மலைநாடு அதுவும் எதிரொலி செய்யும் மலை. அதனால் அத்தகைய மலை சிலம்பு என்றழைக் கப்பட்டது. அந்த மலைப்பிரதேசத்திலே மேய்ந்துகொண்டிருந்த சிறிய கொம்புகளையுடைய பசு அசைகின்ற குலைகளையுடைய காந்தள் மலர்களைக் கொம்பினால் தீண்டிவிடுகிறது. அதனால் அந்த மலர்களின் தாது கீழே சொரிய பசுவின் மேற்புறம் நிறம் மாறிவிடுகிறது. முதலில் சிவந்த நிறமுடையதாயிருந்த பசு இப்போது பொன்னிறமுடையதாகிவிட்டது. அதனால் அப்பசுவின் கன்று தாயின் நிறம்மாறிய தோற்றம் கண்டு மருள்கிறது. இத்தகைய காட்சியுடைய சிறியமலைநாட்டைச் சேர்ந்தவன் தான் காதல் கொண்ட பெண்ணுக்கு ஒரு பரிசை அவள் தோழியிடம் கொடுக்கிறான். அதை அவள் அவன் காதலியிடம் எடுத்துச் செல்கிறாள். காதலியிடம் "உன் காதலன் நீ உடுப்பதற்காக இந்தத் தழையாடையைத் தந்துள்ளான் நாங்கள் அதை உடுத்தால் எம்முடைய தாயின் வெறுப்புக்கு ஆளாகுவோமே என அஞ்சுகிறேன்." என்று கூறுகிறாள்.

ஆனால் அந்த ஆடையைத் திருப்பிக்கொடுத்தால் நெருங்கிய உனது அன்பான தொடர்புக்குக் கேடுவரக்கூடுமென அஞ்சுகிறேன் என்று மேலும் கூறுகிறாள். இதற்கிடையில் இன்னொரு முக்கியமான விடயத்தையும் எடுத்துரைக்கின்றாள். இத்தழை உன் காதலனுடைய மலைப்பிரதேசத்திலே கொய்யப்பட்டது. மூர்க்ககுணம் கொண்ட ஆடுகள் பாய்கின்ற மலைப்பிரதேசம். அந்த அடுக்குமலைப் பிரதேசத்தில் தெய்வ ஆற்றல் உறைகின்றது. அங்குள்ள தழைகளை யாரும் கொய்வதில்லை. ஆனால் உன் காதலன் உனக்கு உடுக்கும் தழையாக அதைக் கொய்துகொண்டு வந்திருக்கிறான்.

அதை உடுக்காமல் விட்டால் ஏதும் கேடு வருமோ தெரியவில்லை. இத்தழைகளை வாடவிடுவதும் நன்றன்று. கொய்வதற்கு அரிய தழையைக் கொய்து தன் காதலிக்குப் பரிசாகக் காதலன் தோழி யிடம் கொடுத்த நடைமுறை இப்பாடலிலே பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 29ம் பக்கம்




அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!



பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery
தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும் நாடுங்கள்.
Tel : 0711/ 61 58 976 Fax: 0711-61 42 663
Ludwig str. 92
70197 Stuttgart
Handy :01703344059



HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
ஆங்கிலம், யோ்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்து கற்பிக்கப்படும்.



தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF ASP இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



சரஸ்வதி கல்யாணமாலை
இதோ ஒரு திருமணசேவை! பெற்றோர்களே கவலையைவிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கு மணமகனையோ மணமகளையோ தேடிகஸ்டப் படாதீர்கள். கலாச்சார மேம்பாட்டனும் சாதகக் குறிப்புகளுடனம் நீங்கள் விரும்பியபடி மணமக்களை சிறப்பாகத் தேர்ந்தெடுக்க எம்மை நாடுங்கள்.



தொடர்புகளுக்கு: செல்வி: 0173 27 50 457-
Tel: 02333 86 93 159-02333 86 93 165



லூட்ஸ் மாதா கோவில் புனிதப் பயணம்
April june july Aug மாதங்களில்
உணவு, தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.



எம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யோ்மனி Dortmund நகரில் இருந்தும்.Frankfurt நகரில் இருந்தும்,பல தடவைகள் லூட்ஸ் மாதா கோவிலுக்கு பஸ் மூலம் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
தொடர்புகள்: இத்தாலிக்கும் செல்லலாம்.
K.முருகா : 02972 7754 Handy: 0175 850 14 89



Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin
Tamil- Deutsch
Deutsch- Tamil
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் - யோ்மன்
யோ்மன் - தமிழ்
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com


# உடனடியாக உங்கள் அப்பாவுக்கு ஒரு ஃபோன்செய்யுங்கள்!



ஒரு மகன் தன் அப்பாவைப்பற்றி என்ன நினைக்கிறான்?

**4 வயதில்-** என் அப்பா தான் பெஸ்ட். அவரை விடச் சிறந்த அப்பா ஒருவரும் இல்லை.

**6 வயதில்**- என் அப்பாவுக்கு எல்லோரையுமே தெரியும்.

**10 வயதில்-** என் அப்ப நல்ல அப்பாதான். ஆனால் அவருக்கு அடிக்கடி கோபம் வருகிறது..

**12 வயதில்**- "ஹும்! நான் சின்னவனாக இருந்தபோது அப்பா என் மீது பாசமாக இருந்தார்.

**14 வயதில்-** என் அப்பா தான் எல்லா விஷயத்தையும் சரியாகச் செய்வதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்.

**16 வயதில் -** அப்பா அந்த காலத்து மனிதர். லேட்டஸ்ட் விஷயங்களே தெரிவதில்லை.

**18 வயதில்-** அப்பா ஏன் இப்படி பல சமயங்களிலும் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்கிறார்?

**20 வயதில்-** அப்பாவுடன் இருப்பதே கஷ்டமாக இருக்கிறது. அம்மா எப்படித்தான் இவரை சகித்துக்கொள்கிறாரோ?

**25 வயதில்-** என் அப்பாவுக்கு என்ன ஆச்சு? நான் என்ன செய்தாலும் அதை எதிர்ப்பதையே முதல் காரியமாகச் செய்கிறாரே?

**30 வயதில்-** என் மகனை சமாளிப்பது பெரியகஷ்டம்! நான் சின்னவனாக இருந்தபோது அப்பாவுக்கு எத்தனை பயந்து நடந்தேன்?

**40 வயதில்-** "ஹும்! அந்த காலத்தில் என் அப்பா என்னை அத்தனை ஒழுக்கத்தோடு வளர்த்தார். நானும் என் மகனை அப்படித்தான் வளர்க்க வேண்டும்!

**45 வயதில்-** குழந்தைகளை-அதுவும் டீன் ஏஜ் குழந்தைகளை வளர்ப்பது மிகவும் கஷ்டம். என்னை அப்பா எப்படித்தான் சமாளித்தாரோ

**50 வயதில்**- எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் என் அப்பா எங்கள் எல்லோரையும் நன்றாக வளர்த்தார். எனக்கு ஒரு மகனையே ஒழுங்காக வளர்க்கத் தெரியவில்லை.

**55 வயதில்-** என் அப்பா ஒரு தீர்க்கதரிசி. தனித்துவம் மிக்கவர்.

**60 வயதில்-** என் அப்பா தான் பெஸ்ட். அவரை விடச் சிறந்த அப்பா ஒருவரும் இல்லை!

முதல் நிலைக்கு திரும்பவும் வருவதற்கு ஒரு மகனுக்கு 56 வருடங்கள் பிடித்திருக்கிறது. நல்ல வேளையாக உங்களுக்கு அத்தனை வயது ஆகவில்லையெனில், ஏன் தாமதிக்கிறீர்கள்? உடனடியாக உங்கள் அப்பாவுக்கு ஒரு ஃபோன் செய்து அவரை நீங்கள் மிகவும் நேசிப்பதாகச் சொல்லுங்கள். **படித்ததில் பிடித்தது. நிலாமகள்**




# காருக்கு முட்டை அடித்தால் கவனம்!

**-இளைய அப்துல்லா**

இப்பொழுது இரவு நேரங்களில் வின்டர் காலமாகையால் கள்வர்கள் அதிகமாக நடமாடுகிறார்கள். பாதையில் போகும் உங்கள் காரின் மீது கள்ளர் முட்டையால் வீசுகின்ற ஒரு முறையை கையாளுகிறார்கள். முட்டை அடி உங்களுக்கு நடந்தால் வைப்பரை இயக்காதீர்கள். அல்லது தண்ணியை உடனடியாக உங்கள் வின்ட்ஸ்கிறீனில் அடிக்காதீர்கள்.

ஏனெனில் முட்டையும் தண்ணியும் சேர்ந்தால் உங்கள் கண்ணாடியில் பால் போன்ற திரவம் உருவாகி 92.5 வீதம் கண்ணாடியை மறைத்துவிடும் ஆபத்து இருக்கிறது. நீங்கள் காரை சைட் பண்ணி தடுமாற கள்வர் தங்கள் கைவரிசையை காட்டி விடுவார்கள். அதனால் மிகவும் கவனமாகஇருங்கள். உங்கள் புத்திசாலித்தனம் முக்கியம்.




Bielefeld நகரில்....
Sahanan Video
Video& Foto
உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளையும் மிகத் துல்லியமாகவும் அழகாகவும் படம்பிடித்து தருகின்றோம்.
K.Ravi
Tel:0521 42 86 528
Möbil:0177-191 21 28
e-mail:sahananvideo@hotmail.de
Full HD& Blu-ray







சிவகாமி மணவறைச் சோடினை
யோகன், யோகி:
02823/6838
Handy: 152 138 22 350

# இரவினில் ஆட்டம் பகலில் தூக்கம் இதுதான் எங்கள் உலகம்!




## இரவுதான் பல தவறுகளுக்கு காரணமாக இருக்கிறது!

அன்று ஒரு பாடல் நவராத்திரிபடத்தில் குடிவெறியில் பாடியபாடல் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம் இதுதான் எங்கள் உலகம் எங்கள் உலகம். குடிப்பவர்களும் கொள்ளையடிப்பவர்களும் அன்று இந்த இரவினைத்தான் தமக்கு துணையாக அழைத்தனர். அதனால் பெற்றோர் தமது பிள்ளைகளை இரவு வேளையில் அதிகநேரம் வீட்டுக்கு வெளியே விடுவது குறைவு.

இது அன்று கண்ணியமான குடும்பங்கள் கடைப்பிடித்து வந்த எழுதாத சட்டமாக இருந்தது.

இன்று இளம் பெண்கள் ஏன் தாய்மார்கள் கூட இரவு வேளையினையே கொண்டாட்ட நேரமாக வகுக்கின்றார்கள். இங்கே இரவு என்பது மாலை 9.00 என்று எண்ணாதீர்கள். அதற்கும் அப்பால் தான் கொண்டாட்டமே ஆரம்பிக்கின்றது. விடியவிடியக் கொண்டாட்டம். அதுமுடியவே வீடு வருகிறார்கள். பின்பு பகல் முழுக்கத் தூக்கம். பிழை சரி என்று உலகில் பொதுவாக எதுவுமே இன்று இல்லை. இப்போ எல்லாமே தனித்தனி ஆவாத்தனம்தான். அதாவது தனித்தனி அளவு கோல்தான். இதனால் பொதுவாக எந்த நன்மை தீமையும் பேசமுடியாத நிலை. இந்த இரவுக் கொண்டாட்டங்கள் நிச்சயமாக நன்மைக்கு அல்ல! இங்கே பெண்களைமட்டும் சுட்டிக்காட்டவில்லை. ஆண்களையும்தான். பெண் பிள்ளைகளே செல்கிறார்கள் நாம் செல்லக்கூடாதா என்றுதானே! ஆண் பிள்ளைகள் இன்று வீட்டில் சண்டையிடுகின்றனர். இன்று பெண் பிள்ளைகளைப் பெற்றவர்களை விட ஆண்பிள்ளைகளைப் பெற்றவர்கள்தான் மடியில் நெருப்பைக்கட்டிக் கொண்டு தவிக்கின்றார்கள். இரவுக்கொண்டாட்டத்திற்கு அவர்கள் காரணங்கள் ஆயத்தமாக வைத்திருக்கிறார்கள். இவையாவும் அக் கொண்டாட்ட ஆசையின் காரணங்களே! இதோ அறிவியல், மனிதநேயம், கொண்ட அமரர் சுஜாதா சொல்வதை கொஞ்சம் பாருங்கள்.

1.ஏதாவது ஒன்றின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வையுங்கள். அது கடவுளாகவோ அல்லது இயற்கையாகவோ அல்லது உழைப்பாகவோ இருக்கலாம்.
2. ஒரு மாறுதலுக்கு அப்பா, அம்மா கொடுக்கும் வேலைகளில் ஏதாவதை செய்து பாருங்கள். ரொம்ப கடினமான வேலையாக நிச்சயம் இருக்காது.

3. தினமும் நாலு பக்கமாவது படியுங்கள், காதல், கதை தவிர்த்து.

4. ஐந்து ரூபாயாவது சம்பாதிக்க முயற்சி செய்து பாருங்கள்.

5. உங்களுக்கு கீழே உள்ள மக்களை பற்றி கொஞ்ச நேரமாவது சிந்தியுங்கள்.
6. ஞாயிறு - பெற்றோர்களோடு செலவழிக்கும் தினமாக இருக்கட்டும்.

7. எட்டு முறையாவது ஒரு கிரவுண்டை சுற்றி வாருங்கள். கம்ப்யூட்டர் கேம்ஸ் வேண்டாம். வியர்வை சிந்த விளையாடினால் நல்ல தூக்கம் வரும்.
8. ஒன்பது மணிக்குள் வீட்டுக்கு வந்து விடுங்கள். இரவுதான் பல தவறுகளுக்கு காரணமாக இருக்கிறது.
9. ஒரு நாளில் பத்து நிமிடமாவது குடும்ப உறுப்பினர்கள் யாரோடாவது அரட்டை அடியுங்கள்.

இதில் ஏதாவது ஒன்றை தினம் செய்து வாருங்கள். உங்கள் தாய், தகப்பனார் உங்களை பற்றி குற்றம், குறை சொல்வதை படிப்படியாக குறைத்து விடுவார்கள். நீங்களும் நிம்மதியாக இருப்பீர்கள்.

## காதலரைச் சேர்த்துவைக்கும் ஊர்!

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

கடுகு மணி 4



காதலர் எல்லோரும் சேருவதில்லை. காதலரைச் சேர்த்து வைப்பவர் இருந்தால் எவ்வளவு நல்லது.
அன்று காலை தண்டு ஊன்றிய கையுடையவராக பலர் ஊருக்குள் வந்துகொண்டிருக்கிறார்கள். பல நாள் காதலித்த ஒரு இளையவளும் இளையவனும் சேரமுடியாமல் தவித்துக்கொண்டிருந்தனர்.
ஒரு முதியோர் கூட்டம் முடுக்கிவிட்டது தம் முயற்சியை. காதலனின் வீட்டார் சார்பாக பெண் வீட்டுக்கு வந்தனர். ஊரே மகிழ்வுடன் அவர்களை நோக்கியது. அவர்களோ "நல்லது நல்லது" என்று சொல்லிச் செல்கின்றனர்.
அதனை அறிந்த இளம் பெண்ணின் தோழி அவளிடம் சென்று "எங்க ளுடைய ஊரிலேயும் காதலரைச் சேர்த்துவைப்பவர்கள் இருக்கிறார்களோ?" என்று கேட்டு நடந்ததைக் கூறினாள்.
"ஊர் நல்லது. காதலன் நல்லவன். காதலி நல்லவள். அவர்கள் குடும்பம் நல்லது." என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.
(சான்று: குறுந்தொகை: பாடல்: 146)

காதல் பரிசு.......27ம் பக்கத்தொடர்ச்சி...

(ஆனால் அந்நடைமுறையில் பல பண்பாட்டு நடைமுறையும் விளக்கப்பட்டுள்ளது. பரிசை நேரடியாகக் கொடுக்கும் வழக்க மில்லை. தாய் அறியாமல் காதலிக்குப்பரிசு கொடுக்கப்படுகிறது. இருவருடையவாழும் பிரதேசமும் மலைநாடாக இருந்தபோதிலும் அதில் ஒரு வேறுபாடு இருந்தமை வெகு நுணுக்கமாகப் பாடலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

காதலி வாழும் பிரதேசத்து உள்ள தழைகள் வேறுபட்டவை. காதலன் வாழும் பிரதேசத்து உள்ள தழைகள் வேறுபட்டவை. எனவே அதை உடுத்தால் சிக்கல் உண்டாகும். களவுநிலையில் உள்ள காதல் தொடர்பைத் தாயும் அறிந்துவிடுவாள்.

இங்கு காதல் பரிசை ஏற்கமுடியாத சூழ்நிலை நன்கு விளக்கப்பட்டுள்ளது. ஆனால் கால ஓட்டத்தில் தமிழர்பண்பாடு மாறிவிட்டது. காதலர் நடைமுறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. பிரதேச ஆடை, பண்பாட்டு ஆடை என்ற வரையறை இப்போதுஇல்லை. மேலைத்தேயப் பண்பாட்டு நடைமுறைகள் தமிழர் காதலர் நடைமுறையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. பரிசுப்பொருட் பரிமாற்றம் சர்வசாதாரணமாகிவிட்டது. 'Valentine's Day' என ஒருநாள் எல்லோராலும் காதலர் தினமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. அன்றைய நாள் காதலர் பரிசுப்பொருளைப் பரிமாறிக் கொள்கின்றனர். இனிப்புப் பொருட்களே பரிமாறப்படுகின்றன. அதனால் அந்த நாள் வணிகவள முள்ள நாளாகவும் வளர்ந்துவிட்டது.

பண்டைக் காலத்தில் களவுநிலையில் பேணப்பட்ட காதல் தற்போது காதலர் தினத்தன்று எல்லோரும் அறியச்செய்யும் உறவாகிவிட்டது. இளைய தலைமுறைக்குக் காதல் ஒரு பொழுது போக்காகிவிட்டது. ஆனால் காதல் என்ற சொல் இப்போது பெருவழக்காக இல்லை. அதற்குப் பதலாக Love என்ற ஆங்கிலச் சொல்லே தமிழரிடையே பயன்படுத்தப்படுகின்றது. பிறமொழிச் சொற் பயன்பாட்டால் உணர்வுநிலையும் மாறிவிட்டது. இப்போது I love you யாரும் எவருக்கும் சொல்லலாம்.






அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!

## யாழ்... இதுவரை சொல்லப்படாத யாழ்ப்பாணக் கதை!




யாழ்ப்பாணத்தையும் தமிழர் கலாச்சாரத்தையும் மையப்படுத்தி உருவாகும் படம் யாழ். இதில் இதுவரை சொல்லப்படாத யாழ்ப்பாணத்தின் கதையை முழுக்க முழுக்க ஈழத் தமிழர்களைக் கொண்டே சொல்லியிருக்கிறார்களாம். ஆஸ்திரேலியா வாழ் தமிழர் எம்.எஸ். ஆனந்த் தயாரிக்கிறார். யாழ்... இதுவரை சொல்லப்படாத யாழ்ப்பாணக் கதை! இப்படத்தில் வினோத், சசி கதாநாயகர்களாக நடிக்க, கதாநாயகிகளாக லீமா, மிஷா ஆகியோர் நடித்திருக்கிறார்கள். சானா, சார்மி, வீரசந்தானம் ஜெ.பி, கைலாசம்பிள்ளை, சஞ்சீவி, சார்லஸ் மற்றும் முக்கிய கதாபாத்திரத்தில் குழந்தை நட்சத்திரம் ரக்ஷனா நடித்திருக்கிறார்கள். எம்.எஸ்.ஆனந்தே படத்தை இயக்குகிறார். இதுகுறித்து அவர் கூறுகையில், ”யாழ் திரைப்படம் ஒரு வித்தியாசமான முயற்சி. இத் திரைப்படத்தின் கதை ஆரம்பம் முதல் இறுதிவரை இலங்கையிலே நடக்கிறது. யாழ்... இதுவரை சொல்லப்படாத யாழ்ப்பாணக் கதை! இதில் இந்திய தமிழர் கதாபாத்திரங்கள் எதுவும் கிடையாது. அனைத்து கதாபாத்திரங்களும் ஈழத் தமிழர்களே. இத்திரைப் படத்தின் பாடல்கள் ஈழத் தமிழில் இருப்பதும், பாடலாசிரியர்களும் இலங்கை தமிழர்களே என்பதும் இதுவே முதல் முறை. வசனம் முழுவதும் இலங்கை தமிழில்தான் இருக்கும். யாழ் என்பது ஈழத் தமிழர்களால் உருவாக்கப்பட்ட ஒரு இசைக்கருவி. பாணர்கள் என்பவர்கள் இக்கருவியை வைத்துக் கொண்டு சைவ சித்தாந்த கருத்துகளையும், தமிழர்களின் கலை மற்றும் கலாசாரத்தையும், பண்பாட்டையும் ஊர் ஊராக சென்று பரப்பினார்கள். யாழ்... இதுவரை சொல்லப்படாத யாழ்ப்பாணக் கதை! யாழ்ப்பாணம் என்ற ஊருக்கு பெயர் வந்ததே அதனால்தான். யாழ் இசையும், யாழ் கலையும், கலாச்சாரமும் சம்மந்தப்பட்ட கதாபாத்திரங்களுக்கு இடையில் இப்பொழுது இறுதி போரின் போது அவர்களுக்கு நடந்த நட்பு, காதல், போன்ற சம்பவங்களை மிக ஜனரஞ்சகமாக எடுத்துள்ளோம். இதுவரை உலக சினிமாவிலே சொல்லப் படாத திரைக்கதை இதில் பார்ப்பீர்கள்,” என்றார்கள். சரிதான் பார்க்கலாமே!



## யார் உண்மையான ஏழை!

ஒரு பணக்காரன் தன் மகனுக்கு ஏழ்மை என்றால் என்ன என்று சொல்லிக் கொடுக்கக் கிராமத்தில் உள்ள ஒரு ஏழையின் வீட்றகு அழைத்துச் சென்றான். இரு தினங்கள் தங்கிவிட்டுப் பின்னர் வீட்டிற்குத் திரும்பினதும் ஏழை எப்படி வாழ்கிறான் என கேட்டதும் மகன் கூறினான் :

அப்பா நம் வீட்டில் ஒரேயொரு நாய் இருக்கிறது, கிராமத்தில் பத்து பதினைந்து நாய்கள் உள்ளன. நம் தோட்டத்தில் ஒன்று இரண்டு விளக்குகள் வைத்துள்ளோம், அந்த கிராமத்தில் எண்ணிலடங்கா நட்சத்திரங்கள் மின்னுகிறது. நமது வீட்டின் முன் வரவேற்பு அறை பெரிது, அவர்களின் வீட்டுக்கு முன்னே எல்லையே இல்லாமல் விரிந்து இருக்குறது. நாம் ஒரு நாள் கழிந்த பாலை பருகிறோம், அவர்கள் உடனடிப் பாலைக் கறந்து சாபிடுகிரர்கள். நாம் வாடிய காய்கறிகளைச் சாப்பிடுகிறோம், அவர்கள் செடியில் இருந்து பறித்துப் பச்சை பசேல் என இருக்கும் காய்கறிகளை உண்ணுகிறார்கள். நாம் வீட்டைச் சுற்றி மதில் கட்டிப் பாது காக்கிறோம், அவர்களுக்கு அந்த ஊரே காவல் செய்கிறது என்று மகன் சொல்லிக்கொண்டே சென்றான்.

மகனின் பதில் தந்தையை அதிர்ச்சியடைய செய்தது.. தந்தை சிந்திக்க ஆரம்பித்தார் யார் உண்மையான ஏழை என்று.....!

**நீதி: ஏழ்மை என்பது நம் எண்ணத்திலேயே குடி கொண்டால் என்னதான் வசதி கிடைத்தாலும் ஏழ்மையிலுருந்து விடுதலை கிடைக்காது.**



# திரை உலகம்

## ஹன்சிகாவை துரத்தி துரத்தி காதலிக்கும் சிவ கார்த்திகேயன்



ஹன்சிகாவை துரத்தி துரத்தி காதலித்து வருவதாக சிவகார்த்திகேயன் கூறியுள்ளார். அவர் விளக்கமாக கூறியது இது-,மான் கராத்தே படத்தில் ஹன்சிகாவை துரத்தி துரத்தி காதலிக்கிறேன். வாழ்க்கையில ஒவ்வொருத்தருக்கும் டாக்டராகணும், என்ஜினீயராகணும்னு கனவு இருக்கிற மாதிரி, மான் கராத்தே படத்துல அழகா சிவப்பா ஒரு பெண்ணை காதலிச்சு, கல்யாணம் பண்ணவேண்டும் என்ற கனவில் திரிவேன். அப்பதான் ஹன்சிகாவை கண்டுபிடித்து, வெறித்தனமாக காதலிக்க ஆரம்பிக்கிறேன். அவ நாயை விட கேவலமா விரட்டி விரட்டி விடுவாங்க. ஆனால நான் விட மாட்டேன். அதைவிட கேவலமான ஐடியா போட்டு அவங்கள எப்படி கவிட்பது என்பதுதான் கதை. கடுமையான உழைப்பும் முயற்சியும் இருந்தா மொக்க பசங்களால கூட ஹன்சிகா மாதிரி அழகு பெண்களை காதலிக்க முடியும்னு என்ற தன்னம்பிக்கை கொடுக்குற படம் தான் மான் கராத்தே.

மீசையெல்லாம் எடுத்துட்டு கொஞ்சம் மார்டன் லுக்குல நடிச்சிருக்கேன். கதைப்படி ஹன்சிகாவுக்கு எல்லா விளையாட்டு மேலேயும் ஆர்வம். ஆனா ஒரு விளையாட்டுகூட விளையாடத் தெரியாது. இந்த வீக்னசை கரெக்டா புடிச்சிக்கிட்டு எப்படி அவங்களோ மனசுல பட்டா போட்டு குடிபோறேன்றதுதாங்க கதை என்கிறார் சிவகார்த்திகேயன்




## இப்போது உள்ள கதாநாயகிகள், என்னை விட, உயரமானவர்கள்! எனக்கு வெட்கமாக இருக்கிறது.

### என் மகன் ஆறடி இரண்டு அங்குலம் அவன் கலக்குகிறான்!

நடிகர் காத்திக்

சென்னை: காதல் காட்சிகளில், தன்னை விட தன் மகன் சிறப்பாக நடிக்கிறான் என நடிகர் கார்த்திக் தெரிவித்துள்ளார். தென்னிந்திய சினிமாவில் 'என்னமோ ஏதோ" என்ற படத்தை ரவி தியாகராஜன் இயக்க நடிகர் கார்த்திக் மகன் கவுதம் கார்த்திக் கதாநாயகனாக நடித்து இருக்கிறார். நிகிஷா படேல், ரகுல் பிரீதிசிங் ஆகிய இருவரும் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். இந்த படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழாவில், நடிகர் கார்த்திக் பேசியதாவது:-

என்னமோ ஏதோ ஒரு கனமான காதல் கதை. படத்தை பார்த்ததுமே அதில் கவுதமை நடிக்க வைக்க முடிவு செய்தேன். தினமும் படப்பிடிப்புக்கு போய் வந்ததும், அன்று படமாக்கிய காட்சிகள் பற்றி கவுதம் என்னிடம்

சொல்வார். இப்போது உள்ள கதாநாயகிகளைப் பார்க்கும்போது, எனக்கு வெட்கமாக இருக்கிறது. என்னை விட, அவர்கள் உயரமாக இருக்கிறார்கள். காதல் காட்சிகளில் என்னை விட, என் மகன் சிறப்பாக நடிக்கிறார்.

திறமையான இளைஞர்கள்... இப்போதையை தமிழ் சினிமா அதிசயிக்கிற வகையில் பல சாதனைகளை செய்து வருகிறது. தமிழ் சினிமாவில், திறமையான இளைஞர்கள் உருவாகியிருக்கிறார்கள். சந்தோஷமாக இருக்கிறது. சந்தோஷமான மாற்றங்கள்.... நானும் 33 வருடங்களாக சினிமாவில் இருக்கிறேன். இந்த மேடையில் இருப்பவர்கள் அனைவரும் என் உறவுகள். ஆறடி இரண்டு அங்கலம் உயரமான என்மகனை உங்களடியில் ஒப்படைத்துள்ளேன் அவனை வளாப்பதும் வாழ்த்துவதும் இரசிகர்களே இனி உங்கள் பொறுப்பு என்றார் நடிகர் காத்திக்..




சிங்கம்2 வெற்றிக்குப்பின் கெதமேனன் துருவநட்சத்திரம் படம் அறிவிப்பு வெளிவந்தது. படம் ஆரம்பநாளை எட்டியவேளை சூர்யா அப்படத்திற்கு வாங்கிய முற்பணைத்தை திருப்பி கௌதமேனனனுக்கு கொடுத்து அப்படத்தில் இருந்து விலகிக்கொண்டார். அவர்களது நட்பு தொடர்வாதாகவும் செய்தி வெளியிட்டார் சூர்யா. அதன் பினர் லிங்குசாமியின் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டார்.

படப்பிடிப்பு படத்திற்குப்பெயர் சூட்டாமலே ஆரம்பமானது. தற்போது அஞ்சான் எனப் பெயரிட்டுள்ளனர். அஞ்சான் தற்போது தமிழ்த்திரை இதுவரை காணாத வகையில் இருக்கும். இப்படம் மிகப்பெரிய மாஸ் பொழுதுபோக்குச் சித்திரமாக இருக்கும் ஆகஸ்ட் 2014 ல் வெளியாகும் இது ரசிகர்களுக்குப் புதிய அனுபவமாக இருக்கும்,"என்றார்.

மும்பையில் முதல் கட்டமாக 35 நாட்கள் நடந்த "அஞ்சான்" படப்பிடிப்பு அண்மையில்தான் முடிவடைந்தது. அடுத்தகட்டம் ஜனவரி இறுதியில் புறப்பட உள்ளது படக்குழு. கோவா மற்றும் மகாராஷ்டிரா செல்லும் இந்தக் குழு, தமிழ்த்திரை காணாத பல புதிய இடங்களுக்கு செல்லவுள்ளது. முழுப்படமும் தமிழ்நாடு அல்லாத வெளியிடங்களில் படப்பிடிப்பு நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு என இருமொழிகளில் "அஞ்சான்" ஒரே நேரத்தில் நேரடிப் படமாக உருவாகிறது. அஞ்சான் எதற்கும் அஞ்சான் என்னும் தமிழ் பெயரில் கலக்கவருகிறது. வரட்டும் வந்து தமிழோடு கலக்கட்டும்.




அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!

















அனைவருக்கும் எங்கள் காதலர் தின வாழ்த்துக்கள்!